# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள் - 28

சுடர் 32 | கதிர் 17 | வள்ளுவர் ஆண்டு 2047 | கார்த்திகை 28, செவ்வாய்க்கிழமை 13.12.2016


## விமானங்களை திருப்பி அனுப்பிய 'வர்தா'

கொழும்பு, டிசெ.13
கொழும்பு பண்டாரநாயக்க பன்னாட்டு விமான நிலையத்திலிருந்து நேற்றுச் சென்னை நோக்கிச் சென்ற இரண்டு விமானங்கள், மீண்டும் பண்டாரநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தன. >> 04

## புலனாய்வாளர்கள் மாவை. எம்.பியிடம் விசாரணை

யாழ்ப்பாணம், டிசெ.13
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழரசுக் கட்சியின் தலைவருமான மாவை. சேனாதிராசாவிடம் ராணுவப் புலனாய்வாளர்கள் விசாரணை >> 04

அரசமைப்பு உருவாக்கம்

## சு.கட்சியின் பரிந்துரைகள் ஜனவரியில் முன்வைப்பு

யாழ்ப்பாணம், டிசெ.13
புதிய அரசமைப்பு தொடர்பான சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பரிந்துரைகளை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எதிர்வரும் ஜனவரியில் முன்வைப்பார் என்று அந்தக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் டிலான் பெரேரா >> 04

## திடீரென யாழ். வந்த ரவி, சுவாமிநாதன்

### பொருத்து வீடுகளை நேரில் பார்வையிட

யாழ்ப்பாணம், டிசெ. 13
வடக்கில் அமைக்கப்பட்ட 2 பொருத்து வீடுகளையும் அமைச்சர்களான ரவி கருணாநாயக்க, டி.எம்.சுவாமிநாதன் ஆகியோர் நேற்றுத் திடீரென யாழ்ப்பாணத்துக்கு வந்து பார்வையிட்டுச் சென்றுள்ளனர்.
வடக்குக்காக முன்மொழியப்பட்டு மாதிரியாக அமைக்கப்பட்ட இரண்டு வீடுகளையும் பார்வையிடுவதற்காகவே நேரில் வந்தோம். அதனைநானும்நிதிஅமைச்சரும் பார்வையிட்டு ஆய்வில் ஈடுபட்டு கொழும்பு திரும்புகின்றோம் என்று அமைச்சர் சுவாமிநாதன் தெரிவித்தார்.
நேற்றுக் காலை அவசர பயணம் மேற்கொண்டு அமைச் >> 23




இந்துக்களின் குமாராலய தீபத்தை முன்னிட்டு நல்லூர்க் கந்தசுவாமி ஆலய முன்றிலில் சொக்கப்பனை நிகழ்வு நேற்று மாலை இடம்பெற்றது. இதில் ஏராளமான பக்தர்கள் கலந்துகொண்டு வழிபாடு செய்தனர். (த-8-101)

பார்த்துக் கொண்டிராது நல்லாட்சி

# இனவாத கூச்சல்கள் விரைவில் முடிவுக்கு

### தேசிய மீலாத் விழாவில் பிரதமர் உறுதி



கொழும்பு, டிசெம்பர் 13
நாட்டில் அண்மைக் காலமாக எழுந்துள்ள இனவாதக் கூச்சல்கள் விரைவில் முடிவுக்குக் கொண்டுவரப்படும். சிறுபான்மை மக்கள் மீதான அச்சுறுத்தல்கள் நல்லாட்சியிலும் தொடர எந்த வகையிலும் இடமளிக்க முடியாது. மிக விரைவில் இதற்குத் தீர்வு காணப்படும்
இவ்வாறு நேற்று நடைபெற்ற தேசிய மீலாத் >> 25

முச்சந்தி முரளி



இவை எல்லாம் சொல்லுவினம் ஆனா யார் செய்யிறது?

## ஜனாதிபதி மைத்திரிக்கு மலேசியாவில் எதிர்ப்பு

கொழும்பு, டிசெ.13
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, மலேசியாவுக்கு வருவதற்கு அனுமதிக்கப்படும் பட்சத்தில் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்படும் என அந்த நாட்டின் பல்வேறு அரசியல் கட்சிகள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் எச்சரித்துள்ளன.
எதிர்வரும் 15ஆம் திகதி மலேசியா >> 25

## 6 பயிற்சி விமானங்களை சீனாவிடம் அரசு வாங்கும்

கொழும்பு, டிசெ 13
இலங்கை விமானப் படைக்கு, பி.ரி-6 ரகத்தைச் சேர்ந்த, ஆறு அடிப்படைப் பயிற்சி விமானங்கள் சீனாவிடம் கொள்வனவு செய்யப்படவுள்ளன.
இதற்காக 5 மில்லியன் டொலருக்கும் அதிகமான நிதி செலவிடப்படவுள்ளது. >> 25

வர்தா அபாயத்தால்

## முல்லையில் 4,500 குடும்பங்கள் பாதிப்பு

முல்லைத்தீவு, டிசெ.13
வர்தா புயல் தாக்கம் ஏற்படும் என்ற எச்சரிக்கை நடவடிக்கையினால் 4ஆயிரத்து 500 க்கும் அதிகமான மீனவர் குடும்பங்கள் முல்லைத்தீவில் பாதிக்கப்பட்டதாக மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத் தலைவர் அந்தோனிப்பிள்ளை >> 04

## வடக்கு மீள்குடியேற்றம் ஆராயவுள்ளார் ஜனாதிபதி

### மாவட்டச் செயலர்களுக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், டிசெ.13
வடக்கின் மீள்குடியேற்றம் தொடர்பில் கலந்துரையாடல் ஒன்று கொழும்பில் ஜனாதிபதி தலைமையில் இடம்பெறவுள்ளது. அதற்கு மாவட்டச் செயலர் உள்ளிட்ட அதிகாரிகள் அழைக்கப்பட்டுள்ளனர்.
வடக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப் படவேண்டிய மீள்குடியேற்றம் தொடர்பில் ஆராய்வதற்காக வடக்கின் மாவட்டச் செயலர்கள் மற்றும் அதிகாரிகளை ஜனாதிபதி செயலகம் அழைத்துள்ளது.
நாளைமறுதினம் வியாழக்கிழமை இடம்பெறும் இந்தச் சந்திப்பில் வடக்கில் இதுவரை மேற்கொள்ளப்பட்ட மீள் குடியேற்றம், >> 25



## முன்னாள் போராளி சாவு

முல்லைத்தீவு, டிசெ.13
முல்லைத்தீவு வற்றாப்பளைப் பகுதியைச் சேர்ந்த புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுதலையான முன்னாள் போராளி >> 25



## 3 முதன்மைக் கட்சிகளும் தமிழரிடம் மன்னிப்பு

### கோரவேண்டும் என்கிறார் மனோ

யாழ்ப்பாணம், டிசெ. 13
ஒட்டுமொத்த தமிழ் பேசும் மக்கள் ஒடுக்கப்படுவதற்கான பேரினவாத சூழலை ஏற்படுத்துவதில் பிரதான பெரும்பான்மை இனக் கட்சிகளும் வரலாறு முழுக்கப் பங்களித்துள்ளன. இதில் ஐ.தே.க, சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆகியவற்றுடன் ஜே.வி.பிக்கும் பெரும்பங்கு இருக்கின்றது. எனவே தமிழரிடம் மன்னிப்புக் கேட்க வேண்டுமென்றால் இந்த மூன்று கட்சிகளுமே கேட்க வேண்டும்.
இவ்வாறு அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்தார். >> 25

## தமிழ்ப் பிரிவினைக்கு தீனி போடும் நல்லாட்சி

### கம்மன்பில குற்றச்சாட்டு

கொழும்ப, டிசெ. 13
படையினருக்கும் மக்களுக்கும் இடையில் இடைவெளியை அதிகரிக்கும் செயற்பாட்டை இந்த அரசு முன்னெடுத்து வருகின்றது எனக் குற்றம் சுமத்திய புதிய ஹெல உறுமய கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில, தமிழ் பிரிவினைவாதிகளுக்கு அரசு தீனி போடுகின்றது எனவும் சுட்டிக் காட்டினார்.
பத்தரமுல்லையில் அமைந்துள்ள புதிய ஹெல உறுமய கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார். >> 25

## அடாவடித்தனப் பிக்குகளை அடக்க அஞ்சுகிறது அரசு

### அது நல்லிணக்கத்தைப் பாதிக்கும் என்கிறார் அருட்திரு மங்களராஜா

கிளிநொச்சி, டிசெ.13
பௌத்த பிக்குகளின் அடாவடித்தனங்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்க அரசு அஞ்சுகின்றது. அவ்வாறு அச்சம் இருக்கும் வரை, நல்லிணக்கம் முன்னே செல்லும் என்பதை நாங்கள் எதிர்பார்க்க முடியாது என யாழ். மறைமாவட்ட நீதி சமாதான ஆணைக்குழுவின் தலைவர் அருட் >> 25



## அம்பாந்தோட்டை குழப்பத்துக்கு பின்னால் ராஜபக்ச

### அர்ஜுன குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ.13
அம்பாந்தோட்டை துறைமுகத்தில் ஏற்பட்டுள்ள குழப்பத்துக்கு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவே காரணம் என்று துறைமுக அபிவிருத்தி அமைச்சர் அர்ஜுன ரணதுங்க >> 23

## வவுனியா ஆலயத்தில் விக்கிரகங்கள் திருட்டு



>> 25

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மீட்டியாகொடவில் நேற்றுச் சூடு; ஒருவர் சாவு

கொழும்பு, டிசெ 13
அம்பலாங்கொடை மீட்டியாகொட பிரதேசத்தில் நேற்று இனந்தெரியாத நபர்கள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் பழக் கடை உரிமையாளரான 45 வயதுடைய ஒருவர் உயிரிழந்தார்என்று பொலிஸார் தெரிவித்தனர்.
மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்கள் துப்பாக்கிச் சூட்டை மேற்கொண்டுவிட்டு தப்பிச் சென்றுள்ளனர் என்று பொலிஸார் கூறினர். (த-4)

# 99 அரசியல் கைதிகள் மட்டுமே சிறைகளில்

சிறைகளில் இருந்த 213 அரசியல் கைதிகளில் தற்போது 98 பேர் மட்டுமே உள்ளனர் எனப் பிரதமர் கூறியதாக தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம். ஏ.சுமந்திரன் தெரிவித் தார்.
அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் அண்மை யில் பிரதமரைச் சந்தித்து உரையாடியமை தொடர்பில் கருத்து வெளியிடு கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
இலங்கையின் பல சிறைகளிலும் நல்லாட்சி அரசின் ஆரம்பத்தில் இருந்த 213 அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் பல கட்டப் பேச்சுக்கள் இடம் பெற்றன. கைதிகளின் உண்ணா விரதப் போராட்டங்களும் இடம் பெற்றன. இதன்போது பல உத்தர வாதங்கள் வழங்கப்பட்டன. அவை தொடர் பிலும் இந்தச் சந்திப்பில் ஆராயப் பட்டது.
213 கைதிகள் தடுப் பில் இருந்தனர். அவர் களில் 49 பேர் தண்டனை வழங்கப்பட்டவர்கள். ஏனைய 164 பேரின் வழக்கு விசாரணைகள் இடம்பெற்றுக் கொண்டிருந்தன. ஆனால் தற்போது தண்டனை விதிக்கப்பட்ட வர்களில் 47 பேரும் வழக்கு விசாரணைகள் இடம் பெறுபவர்களில் 51 பேருமே உள்ளனர். தண்டனைத் தீர்ப்பளிக்கப் பட்டவர்களின் விடுதலை தொடர்பில் ஜனாதிபதியினால் மட்டுமே முடிவு எட்ட முடியும், வழக்கு இடம் பெறும் கைதிகளின் விடயத்தில்மேலும்கவனம்எடுக்கப்பட்டு அவர் களுக் கான தீர்வையும் விரைவில் பெறுவதற்கு நடவடிக்கை எடுப்பதாகப் பிரதமர் கூறினார்-என்றார். (த-4-101)

## 140 கிலோ மீற்றர் வேகத்தில்

# சென்னையை புரட்டியது வர்தா

## இருவர் உயிரிழப்பு



சென்னை, டிசெ. 13
தமிழ்நாட்டின் அமைவிடத்தின்படி தென்கிழக்கு வங்கக் கடலில் உருவான வர்தா புயல் மணிக்கு 140 கிலோ மீற்றர் வேகத்தில் நேற்று பிற்பகல் ஒரு மணி முதல் மாலை 4 மணி வரையிலான இடைவெளியில் சென்னையைக் கடந்தது.
சென்னை, காஞ்சிபுரம் திருவள்ளூர் மாவட்டங்களில் புயலால் நேரடித் தாக்கத்துக்கு உட்படக்கூடிய ஆபத்திலிருந்து கிட்டத்தட்ட 8 ஆயிரம் பேர் மீட்கப்பட்டுப் பாதுகாப்பான இடங்களுக்குக் கொண்டு செல்லப்பட்டனர். இருவர் உயிரிழந்தனர்.

**மக்களுக்கு எச்சரிக்கை**

வர்தா புயல் சென்னையைக் கடக் கும் என்று எதிர்வுகூறப்பட்ட பிற்பகல் 1 மணி முதல் மாலை 4 மணி வரையிலான காலப் பகுதியில் மக்கள் எவரும் வெளியில் வரவேண்டாம் என்று தமிழக அரசு நேற்று முன்தினம் மாலையும் நேற்றும் எச்சரிக்கை விடுத்தது.

**மந்த கதியில் மீட்பு**

பலத்த காற்றின் காரணமாக வீதிகளில் வைக்கப்பட்டிருந்த விளம்பரப் பலகைகள் தூக்கி வீசப்பட்டன. மரங்களின் கிளைகள் முறிந்தும், சில மரங்கள் அடியோடு பாறியும் விழுந்தன. வீடுகள் கட்டடங்களின் கூரைகள் தூக்கி வீசப்பட்டன. பெரும் மழையும் பெய்த காரணத்தினால் மீட்புப் பணிகள் சொல்லிக்கொள் ளும் படியான துரிதகதியில் இடம் பெறவில்லை.

**விமான நிலையம் மூடல்**

பலத்த காற்று மற்றும் சீரற்ற கால நிலை காரணமாகச் சென்னை விமான நிலையம் மூடப்பட்டது. சென்னைக்கு வரவேண்டிய 25 விமானங்கள் வேறு மாநிலங்களுக்குத் திருப்பி விடப்பட்டன. சென்னையிலிருந்து செல்லவிருந்த 25 விமான சேவைகளும் கைவிடப் பட்டன.

**ரயில்களும் இல்லை**

சென்னை, சென்னையின் புறநகர்ப் பகுதி ஆகியவற்றக்கான சில ரயில் சேவைகளும் கைவிடப்பட்டன. மழையும் அதன் விளைவாக ஏற்படக் கூடிய வெள்ளமும் ரயில் சேவையைப் பாதித்தது எனச் சொல்லப்பட்டது. பேருந்துச் சேவைகளும் நேற்று மாலை வழக்கம் போல இடம் பெறவில்லை. இதனால் பயணிகள் பெரும் அவதிப்பட்டனர்.

**தயார் நிலையில்**

தமிழ்நாட்டின் கடலோரப் பகுதிகளில் எவ்வித சூழ்நிலையையும் எதிர் கொள்ளும் வகையில் தேசிய பேரிடர் நிவாரணப்படையினர் தயார் நிலையில் நிறுத்தி வைக்கப்பட்டனர். மேலும், கடற்படையைச் சேர்ந்த இரண்டு கப்பல்களும், சிறுபடகுகளும் தயார் நிலையில் இருந்தன. கப்பல்களில் அவசர உதவிக்கான மருத்துவ குழுவினரும், நீச்சல் படையை சேர்ந்த 30 குழுவினரும், கிட்டத்தட்ட 500 பேருக்குத் தேவையான உணவு மற்றும் குடிநீர் வசதிகளுடன் மக்களுக்கு உதவி செய்வதற்காக தயார்ப்படுத்தப்பட்டனர்.

**ஒரு மீற்றர் அலைகள்**

வர்தாவின் தாக்கத்தால் கடலோரப் பகுதிகளில் கிட்டத்தட்ட ஒரு மீற்றர் அளவுடைய அலைகள் வீசலாம் என்று எதிர்வுகூறப்பட்டது. இதன்படி சிறிய கடல்கொந்தளிப்பும் இருந்தது என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளி யிட்டன.

**ஆந்திராவை நோக்கி**

மணிக்கு 120 முதல் 140 வரையிலான கிலோ மீற்றர் வேகத்தில் சென்னையைப் புரட்டிய வர்தா புயல் சென்னையிலிருந்து ஆந்திராவை நோக்கி நகரும் என நேற்று மாலை எதிர்வுகூறப்பட்டது. புயல் தனது வலுநிலையை இழக்குமா அல்லது அதிகரிக்குமா என்பது தொடர்பில் தெரிவிக்கப்படவில்லை.
சென்னை, காஞ்சிபுரம் திருவள்ளூர் மாவட்டங்களில் பெருமளவாக புயலின் தாக்கம் உணரப்பட்டது. உயிரி ழப்புக்களும் பொருள் சேதமும் இன்னும் அதிகரிக்கலாம் என்று கூறப்படு கின்றது. (ம-எ)

# மன்னார் கடல் நேற்றுக் கொந்தளிப்பு

மன்னார், டிசெ. 13
மன்னார் மீனவர்கள் நேற்றுக் கடற்றொழிலுக்குச் செல்லவில்லை.
மன்னார் வளைகுடாவை 'வர்தா' புயல் கடந்து செல்வதால் மன்னார் கடல் பிராந்தியத்தில் கொந்தளிப்புக் காணப்படும் என தெரிவிக்கப்பட்டதை அடுத்து மீனவர்களைக் கடலுக்குச் செல்ல வேண்டாம் எனக் காலநிலை அவதான நிலையம் அறிவித்தது.
இதனால் பெரும்பாலான மீனவர்கள் நேற்று திங்கட்கிழமை கடலுக்குச் செல்லவில்லை. மன்னார் தென்கடல் பகுதியில் கொந்தளிப்பால் கடல் நீர் சுமார் பத்து அடிக்கு மேல் முன்னோக்கி வந்ததாக மீனவர்கள் தெரிவித்தனர்.
தென்கடல் பிராந்தியத்தில் மீன்பிடியில் ஈடுபடுவதற்கு கடற்படையினர் அனுமதிக்கவில்லை. (த-21)

# ஊடகவியலாளர் மீதான தாக்குதல் தொடர்பில் தனியான விசாரணை

## பாதுகாப்புச் செயலர் அறிவிப்பு

கொழும்பு, டிசெ 13
அம்பாந்தோட்டை மாகம்புர துறைமுகத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற குழப்பநிலையின்போது கடற்படைத் தளபதியால் ஊடகவியலாளர்கள் அச்சுறுத்தப்பட்ட மற்றும் தாக்குதலுக்கு உள்ளானதாகக் கூறப்படும் செய்தி தொடர்பில் இதுவரை உறுதிப்படுத்தப்படவில்லை. என்றாலும், இந்த விடயம் தொடர்பில் தனிப்பட்ட விசாரணைகளை முன்னெடுக்கவுள்ளோம்.
இவ்வாறு பாதுகாப்புச் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி நேற்றுத் தெரிவித்தார்.
அம்பாந்தோட்ட மாகம்புர துறைமுகத்தில் பணிபுரியும் ஊழியர்கள் தமக்கு நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரி கடந்த 7ஆம் திகதி முதல் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இந்தநிலையில், மாகம்புர துறைமுகத்துக்கு வந்திருந்த ஜப்பான் நாட்டுக் கப்பல் ஒன்று உட்பட இரண்டு கப்பல்களை ஊழியர்கள் சிறைப்பிடித்து போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர். இந்தக் கப்பல்களை விடுவிக்கும் முகமாக கடற்படைத் தளபதி உள்ளிட்ட கடற்படைக் குழுவொன்று கடந்த சனிக்கிழமை குறித்த இடத்திற்குச் சென்றிருந்தது.
இதன்போது ஏற்பட்ட முறுகல் நிலையால் இரு ஊடகவியலாளர்கள் கடற்படையால் தாக்கப்பட்டனர். இந்தச் சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. குறித்த சம்பவம் தொடர்பில் பூரண விசாரணையொன்று முன்னெடுக் கப்படும் என்று ஊடக அமைச்சு நேற்று முன்தினம் அறிக்கையொன்றை வெளியிட்டி ருந்தது.
எனினும், இந்தச் சம்பவத்தின்போது கடற்படைத் தளபதி ஊடகவியலாளர்களை அச்சுறுத்தவில்லை என்று பாதுகாப்புச் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி தெரிவித்திருந்தர்.
சம்பவம் குறித்து அவர் கூறியதாவது:-
தான் எந்தவொரு ஊடகவியலாளருக்கும் அச்சுறுத்தல் விடுக்கவில்லை என்று கடற்படைத் தளபதி என்னிடம் கூறினார். இந்தச் சம்பவம் தொடர்பில் முழுமையான தகவல்கள் இதுவரை எமக்குக் கிடைக்கவில்லை. என்றாலும் சம்பவம் குறித்து நான் தனிப்பட்டரீதியில்விசாரணைகளை முன்னெடுப்பேன் - என்றார்.
(த)

# முரளிப் பழத்தைக் கண்டு அஞ்சும் வன்னி மக்கள்

வவுனியா, டிசெ.13
32 ஆண்டுகளின் பின்னர் வன்னியில் முரளிப் பழம் பழுத்ததால் மீண்டும் வறுமை வந்துவிடுமோ என்று அச்சம் ஏற்பட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.
நெடுங்கேணி ஒலுமடுக் கிராமத்தில் முரளி மரம் பழுத்துள்ளது. இந்தப் பழம் பழுத்ததால் ஒரு பகுதியினர் அச்சத்திலும், ஒரு பகுதியினர் சந்தோசத்திலும் பழத்தைப் பிடுங்கி விற்பனை செய்து வருகின்றனர்.
1984ஆம் ஆண்டு இந்த முரளிப்பழம் பழுத்தது. அதன் பின்னர் அக் காலப் பகுதியில் பெரும் வரட்சி ஏற்பட்டது. மக்கள் வரட்சியால் பாதிக்கப்பட்டார்கள். அதன் பின்னர் 32 ஆண்டுகளின் பின்னர் இப்படி ஒரு சம்பவம் இப்போது இடம்பெற்றுள்ளது.
அதிக பழங்கள் பழுத்துள்ளன. இதனால் மீண்டும் வரட்சி ஏற்பட்டு விடுமோ என்ற அச்சம் ஏற்பட்டுள்து என நெடுங்கேணி ஒலுமடுக் கிராம வாசிகள் தெரிவித்தனர்.
இந்தப் பகுதி மக்களில் ஒரு பகுதியினர் அச்சம் வெளியிட்டுள்ளவேளை மற்றொரு பகுதியினர் பழங்களைப் பிடுங்கி விற்பனை செய்து வருகின்றனர். சிலர் பழங்களைப் பிடுங்குவதற்காக மரம் அறுக்கும் கருவியைப் பயன்படுத்தி மரங்களை அறுத்து விழுத்துவதால் அவ்விடத்துக்குப் பொலிஸார் சென்று மரத்தை அறுக்கத் தடை விதித்துள்ளனர்.
ஒரு கிலோகிராம் பழம் 160 ரூபா தொடக்கம் 200 ரூபா வரை தற்போது விற்பனை செய்யப்படுகின்றது.
காஞ்சிரமோட்டை வயல் பிரதேசம், முல்லைத்தீவு தண்ணிமுறிப்பு பகுதிகளிலும் முரளிப்பழம் பழுத்துள்ளமைகுறிப்பிடத்தக்கது. (த-21)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோதமாகச் செயற்பட்ட அரச அதிகாரியை முல்லை. மாவட்டச் செயலாளராக நியமிக்கச் சதி

## வடக்கு முதலமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 13

முல்லைத்தீவு, கொக்கிளாயில் விகாரை அமைப்புக்கான அனுமதி வழங்கியமை, காணி பங்கீடு உள்ளிட்ட பல மோசடிகளில் தொடர்புபட்ட அதிகாரியான கரைதுறைப்பற்று பிரதேச முன்னாள் செயலாளரை முல்லைத்தீவுக்கான புதிய மாவட்டச் செயலாளராக நியமிக்க சதி முயற்சிகள் இடம்பெற்று வருகின்றன. இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

இலங்கை அரசின் இந்தச் சதி முயற்சியின் பின்னணியில் தமிழ் அரசியல் தரப்பைச் சேர்ந்தவர்களும் இருப்பதாகவும் அவர் கூறினார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற ஆவணப்பட வெளியீட்டு நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

'தமிழ் மக்களிடத்தில் பல பிரச்சினைகள் உள்ளன. சட்டவிரோத குடியேற்றங்களுக்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. மரங்கள் அழிக்கப்பட்டு பெரும் நிலப்பரப்பை அபகரிக்க முயற்சிக்கப்படுகிறது. இவ்வாறாக சட்டவிரோதமான முறையில் நடைபெறும் விடயங்களை நாம் எடுத்துக் கூறிய போதும், அவற்றுக்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாகத் தெரியவில்லை.

முல்லைத்தீவில் கொக்கிளாய் விகாரை அமைப்பதற்கான அனுமதி வழங்கியமை, காடழிப்பு உள்ளிட்ட சில பிரச்சினைக்குரிய காரணங்களுக்காக பிரதேச செயலாளர் ஒருவர் எமது பரிந்துரைக்கு அமைய இடம்மாற்றம் செய்யப்பட்டார். ஆனால் அவர் தற்போது முல்லைத்தீவுக்குரிய மாவட்டச்செயலாளராக வருவதற்குரிய ஏற்பாடுகள் நடைபெறுகின்றன என்று அறிகிறோம். எனவே யாரோ இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள். அவற்றுக்கு எம்மவர்களும் உறுதுணையாக இருக்கிறார்கள் என்பதையும் நாம் அறிகிறோம்.

அதேபோன்று, ஒட்டிசுட்டான் பிரதேசத்தில் 16 அடிக்கு அகழ்வு செய்வதாக கொழும்பில் இருந்து உத்தரவுப் பத்திரம் பெற்று வந்து 144 அடி அகழ்வு நடைபெற்றுள்ளது. அது தொடர்பாக கேள்வி கேட்க முடியவில்லை. ஏனெனில் இது தொடர்பாக கொழும்பு அரசு தான் நடவடிக்கை எடுக்கவேண்டும். பல விதமான அதிகாரங்கள் கொழும்பு அரசிடம் இருக்கும்போது அவர்கள் எமக்குப் பாதகமான விதத்தில் பல நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள். எம்மால் நடவடிக்கை எடுக்க முடியவில்லை. எமக்கு தந்துள்ள உரித்து அதிகாரத்தையும் விட்டுக்கொடுக்க மறுக்கிறார்கள்' என்று முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார். (வ-21,101)

# முஸ்லிம் மக்களை இங்கு நிம்மதியாக வாழவிடுங்கள்

## அரசிடம் ரிஷாத் வேண்டுகோள்

கொழும்பு, டிசெ. 13

முஸ்லிம்கள் இந்த அரசிடம் ஒன்றையும் கேட்கவில்லை. எம்மை இந்த நாட்டில் நிம்மதியாக வாழவிட்டால் போதும். அதனையே நாம் அரசிடம் கேட்கின்றோம்.

இவ்வாறு அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

2015 இல் ஜி.சீ.ஈ. சாதாரண தரத்தில் ஒன்பது பாடங்களிலும் 'ஏ' சித்தி பெற்ற மாணவர்கள் சுமார் 198 பேர் முஸ்லிம் கல்வி முன்னேற்றச் சங்கத்தால் கௌரவிக்கப்பட்ட நிகழ்வு நேற்றுமுன்தினம் கொழும்பு - 7 இல் அமைந்துள்ள பொதுநூலகக் கேட்போர்கூடத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் முதன்மை அதிதியாகக் கலந்துகொண்டு உரை யாற்றும்போதே அமைச்சர் ரிஷாத் பதியுதீன் மேற்கண்ட வாறு கூறினார்.

அவர் தெரிவித்ததாவது:

இன்று இஸ்லாமியர்கள் உலகெங்கும் அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். மியன்மார் முஸ்லிம்கள் அநியாயமான முறையில் அடித்துக் கொலை செய்யப்படுகின்றனர். வெறிபிடித்தவர்கள்போல் அட்டகாசம் செய்கின்றனர்.

இதேபோல் இலங்கையிலும் சில நாசகார விசம சக்திகள், மதகுருக்கள் என்ற போர்வையில் ஒற்றுமையாக மன்னராட்சிக் காலந்தொட்டு வாழுகின்ற சிங்கள - முஸ்லிம் உறவுகளை உடைத்துச் சிறுபான்மையாக வாழும் முஸ்லிம்களின் பொருளாதாரத்தை நசுக்கி அழிக்கவும், நிம்மதியாக வாழும் இன்றுள்ள நல்ல சூழ்நிலைகளை இல்லாமலாக்கி அடிமைகளாக்க வும், மியன்மாரில் நடை பெறும் துன்பத்தைப்போல் இங்கும் ஏற்படுத்தவும், இலங்கை முழுவதும் சிதறி வாழும் முஸ்லிம்களைச் சிங்கள மக்களிடத்தில் இருந்து பிரித்துபெரிய இடைவெளியை ஏற்படுத்தவும் முனைகின்றனர்.

ஆட்சி மாற்றம் ஏற்படுத்தப்பட்டு நல்லாட்சி வந்தது என்றும், நிம்மதியாக வாழலாம் என்றும் நினைத்தோம். ஆனால், எமது நிலமை கடினமாக இருக்கின்றது.

நாங்கள் தனிநாடு கேட்கவில்லை. இந்த அரசில் அரசமைப்பை மாற்றி அதிகாரங்களை அதிகரியுங்கள் என்று சிலர் கேட்கின்றனர். கட்சிகள் கேட்கின்றன. நானோ, ரவூப் ஹக்கீமோ, கபிர் காசிமோ, பைஸர் முஸ்தபாவோ அல்லது பௌசியோ நாங்கள் யாரும் கேட்கவில்லை. சிலர் தேர்தல் முறைகளை மாற்ற வேண்டும் என்று கேட்கின்றனர். நாங்கள் கேட்கவில்லை. இருக்கின்ற தேர்தல்முறைதான் நல்லதென்று உறுதியாகச் சொல்கின்றோம். இதை மாற்றினால் எங்களுக்கு நட்டம்.

இதேபோல் நிறைவேற்று ஜனாதிபதி முறையை இல்லாதொழிக்க வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் கேட்கின்றன. அதிகாரப் பகிர்வை தமிழரசுக் கட்சி கேட்கின்றது. இந்த மூன்றையும் இந்த நல்லாட்சி செய்ய நீண்ட நேரத்தைச் செலவழித்துப் பல கூட்டங்களைக் கூட்ட வேண்டியுள்ளது.

நாங்கள் கேட்பதெல்லாம் எங்களை நிம்மதியாக வாழ விடுங்கள். எங்களை எங்களுடைய மார்க்கப்படி 5 நேரம் தொழவேண்டும் என்று இஸ்லாம் வலியுறுத்தியுள்ளது. அதன்படி செய்ய விடுங்கள். இஸ்லாம், பௌத்தம், இந்து, கத்தோலிக்கம் எல்லாமே தத்தமது மார்க்கக் கடமைகளைச் செய்வதற்கு இந்த நாட்டின் அரசமைப்பில் சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது. அதைத் தாருங்கள் என்றுதான் கேட்கின்றோம். அவற்றை செயற்படுத்தி நிம்மதியாக வாழ விடுங்கள் என்றே கேட்கின்றோம் - என்றார். (த-4)

# பொலிஸ் உத்தியோகத்தரே திட்டமிட்டு வாள்களை கராச்சினுள் வைப்பித்தார்

## விசாரணைகளில் தெரிவிப்பு

அச்சுவேலி, டிசெ.13

அச்சுவேலியில் உள்ள கராச் ஒன்றின் உரிமையாளர் மீது அச்சுவேலிப் பொலிஸ் நிலையத்தை சேர்ந்த தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவருக்கு இருந்த தனிப்பட்ட விரோதம் காரணமாகவே அவருடைய கராச்சில் வாள் மற்றும் கூரிய ஆயுதங்கள் மறைத்து வைக்கப்பட்டன என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

குறித்த கராச்சில் கஞ்சா பொதியையும் மறைத்து வைத்ததாக பொலிஸாரால் கைது செய்யப்பட்ட சந்தேக நபர் தனது வாக்கு மூலத்தில் தெரிவித்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அச்சுவேலி புத்தூர் பகுதியில் உள்ள கராச் ஒன்றில் ஆயுதங்கள் இருப்பதாக பொலிஸாருக்குக் கிடைத்த தகவலை அடுத்து, அங்கு சென்ற பொலிஸார் 2 வாள், 2 கை கிளிப் மற்றும் கூரிய இரும்பு ஆயுதங்களை மீட்டனர். இதனையடுத்து, கராச் உரிமையாளர் உட்பட நான்கு பேர் அச்சுவேலிப் பொலிஸாரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர். விசாரணைகளின் போது பொதுமக்கள் வழங்கிய தகவல்களை அடுத்து அவர்கள் விடுவிக்கப்பட்டார்கள். மேலும் கராச்சில் வாள் மற்றும் கூரிய ஆயுதங்களை வைத்தவர் என்ற குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவரும், குறித்த ஆயுதங்களை தயாரித்தவர் என்று கூறி பட்டறை ஒன்றின் உரிமையாளரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடம் மேற்கொண்ட விசாரணைகளின் போது அச்சுவேலிப் பொலிஸ் நிலையத்தை சேர்ந்த தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரே தன்னிடம் கூரிய ஆயுதங்களை ஒப்படைத்து, அவற்றை குறித்த கராச்சில் வைக்குமாறு தெரிவித்ததாக அந்த ஆயுதங்களை வைத்தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இளைஞர் விசாரணையில் தெரிவித்தார். அத்தோடு கஞ்சா பொதி ஒன்றையும் குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் தருவித்து அவற்றையும் அந்த கராச்சிலேயே வைத்ததாகவும் பின்னர் கஞ்சாவை காணவில்லை என்றும் வாக்குமூலத்தில் அந்த இளைஞர் தெரிவித்தார். இதனை அடுத்து விசாரணைகளின் பின்னர் சந்தேக நபரால் குற்றம் சாட்டப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர் உடனடியாக இடமாற்றம் செய்யப்பட்டார். நேற்று முன்தினம் மாலை கைதுசெய்யப்பட்ட இருவரும் மல்லாகம் நீதிவான் மன்றில் முற்படுத்தப்பட்டனர்.

விசாரணைகளை மேற்கொண்ட மல்லாகம் நீதிவான் வாள் மற்றும் கூரிய ஆயுதங்களை தயாரித்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டபட்டறை உரிமையாளரை ஆள்பிணையில் செல்ல அனுமதித்தார். இரண்டாவது சந்தேக நபரான வாள் மற்றும் கூரிய ஆயுதங்களை கராச்சில் வைத்தார் என்ற குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட இளைஞரை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

கஞ்சாவை கண்டறிம் முகமாக நேற்றுமுன்தினம் மாலை குறித்த கராச் மீண்டும் அச்சுவேலி பொலிஸாரால் சோதனைக்கு உட்படுத்தப் பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (இது தொடர்பான மற்றொரு செய்தி 11ஆம் பக்கத்தில்) (வ-21,26)

# யானை தாக்கியதில் முதியவர் படுகாயம்

ஓமந்தை, டிசெ.13

ஓமந்தை இலமருதங்குளத்தில் நேற்றிரவு யானையின் தாக்குதலுக்கு இலக்காகி 60 வயது முதியவர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

அதே இடத்தைச் சேர்ந்த சுவானி அலேஸ் (வயது- 60) என்பவரே யானையின் தாக்குதலில் அகப்பட்டுபடுகாயமடைந்தார்.

வவுனியா, ஓமந்தை - இலமருதங்குளத்தில் நேற்றிரவு 8.30 மணியளவில் ஊருக்குள் நுழைந்த யானை ஒன்று வீட்டின் முன்பாக நின்றவரைத் தாக்கியுள்ளது. இவ்வாறு தாக்குதலுக்கு இலக்கானவர் எழுப்பிய அவலக் குரலைக் கேட்டு அயலவர்கள் பலத்த சத்தம் எழுப்பியவாறு அந்தப்பகுதிக்கு விரைந்தனர்.

அவ்வாறு சென்ற அயலவர்கள் படுகாயமடைந்த நிலையில் விழுந்து கிடந்த முதியவரை வைத்தியசாலைக்கு அனுப்புவதற்கு வாகனம் இன்றி பெரும் சிரமப்பட்டனர். அதன்பின்னர் ஓமந்தையில் இருந்து முச்சக்கர வண்டியை அழைத்து வவுனியா வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர்.

இவ்வாறு படுகாயமடைந்த முதியவரின் காலில் யானை பலமாகத் தாக்கியமையினால் கால் முழங்காலுடன் முறிவு ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (வ-101)

# ஏழாலையில் நேற்று கைக்குண்டு மீட்பு

யாழ்ப்பாணம், டிசெ.13

யாழ்ப்பாணம், ஏழாலை தெற்கு மயி லங்காடு பகுதியிலுள்ள தோட்ட வளவினுள் இருந்து கைக்குண்டொன்று நேற்று மீட்கப்பட்டதாக சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர்.

வளவைத் துப்புரவு செய்த உரிமையாளர், கைக்குண்டு இருப்பதைக் கண்டு பொலிஸாருக்குத் தகவல் வழங்கினார், அதனையடுத்து, நீதிமன்ற உத்தரவுக்கமைய, சிறப்பு அதிரடிப் படையினரின் உதவியுடன் கைக்குண்டு மீட்கப்பட்டு செயலி ழக் கச் செய்யப்பட்டதாக பொலிஸார் கூறினர். (வ-21)

# இன்று மின்வெட்டு

யாழ்ப்பாணம், டிசெ.13

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரையும் யாழ். பிரதேசத்தில் வேலணை ஒருபகுதி, மயிலப்புலம், நாவற்காடு, குடமியன், மிருசுவில் வடக்கு ஆகிய பிரதேசங்களில் மின்விநியோகம் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டது. (வ-10)

# கார்த்திகை தீப வழிபாடு

கொழும்புத்துறை மேற்கு விநாயகர் ஆலயத்தில் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 6 மணிக்கு அனைத்து ஆலய தீப சிறப்பு வழிபாடுகள் இடம் பெற்று சொர்க்கப் பனை தீபம் ஏற்றல் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. (வ-17)

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ணலிங்கேஸ்வரர், கண்ணகியம்மன் ஆலயங்களின் அனைத்து ஆலய தீப வழிபாடு இன்று செவ்வாய்க்கிழமை மாலை 3 மணிக்கு இடம்பெறவுள்ளது. இந்த நிகழ்வில் கண்ணலிங்கேஸ்வரர் பெருமானும் கண்ணகியம்மனும் தத்தம் ஆலயங்களில் இருந்து எழுந்தருளி வீதிவலம் வந்து தீபம் ஏற்றும் வைபவம் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. (வ-10)

# கடல் சீற்றத்தால் மீனவர்கள் அச்சம்

மட்டக்களப்பு, டிச.13

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர் புன்னைக்குடா, சவுக்கடி மற்றும் சின்னச் சவுக்கடி ஆகிய மீன்பிடிப் பிரதேசங்களைச் சேர்ந்த சுமார் 2ஆயிரத்துக்கும் மேற் பட்ட மீனவர்கள் கடந்த இரு நாள்களாகக் கடலுக்குச் செல்லவில்லை.

கடற்கரையோரங்களில் வழமைக்கு மாறாகக் காணப் படும் கொந்தளிப்பும், கடற்பெருக்குமே இதற்குக் காரணமென்று மீனவர்கள் தெரிவித் தனர்.

கடந்த சனிக்கிழமை இரவிலிருந்து கடல் வழமைக்கு மாறாக சீற்றத்துடன் காணப்பட்டதாகத் தெரிவிக்கும் மீனவர்கள், இதனால் கடல் அலைகளின் ஆர்ப் பரிப்பு அதிகமாக இருப்ப தாகவும் கூறினர்.

சவுக்கடி மற்றும் சின்னச் சவுக்கடி கடலோரங்களில் சுமார் 8 அடி உயரத்துக்குக் கடலலைகள் உயர்ந்து ஆர்ப்பரித்ததாகவும் மீனவர்கள் குறிப்பிட்டனர். புன்னைக் குடாக் கடலில் ஒரு மீன்பிடிப் படகு அலையில் சிக்கி உடைந்து நொறுங் கியுள்ளது.

தமது மீன்பிடிப் படகுகளின் பாதுகாப்புக் கருதி அவற்றைக் கடற்கரைகளிலிருந்து நகர்த்தி நிறுத்தி வைத்துள்ளதோடு படகு இயந்திரங்களையும் அகற்றிச் சென்று பத்திரமாக வைத்துள்ளதாக மீனவர்கள் தெரிவித்தனர். (த-ய-46)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாணக் கல்வியமைச்சை கண்டிக்கின்றது ஆசிரியர் சங்கம்

## இடமாற்றங்களில் தாமதம் குறித்து விசனம்

யாழ்ப்பாணம், டிசெ. 13
வடக்கு மாகாணத்தில் எதிர்வரும் 2017 ஜனவரி முதல் நடைமுறைப் படுத்தப்படவிருந்த இடமாற்றங்களை ஏப்ரல் வரை தாமதித்து வழங்கும் வடக்கு மாகாண கல்வியமைச்சின் திட்டமிடப்படாத நடவடிக்கைக்கு வன்மையான கண்டனத்தைத் தெரிவிக்கின்றோம்.

இவ்வாறு இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்தது.

வெளிமாவட்டங்களிலிருந்து சொந்த வலயங்களுக்கு ஆசிரியர்கள் இடமாற்றம் பெறும்போது அவர்களுக்குப் பதிலீடு வழங்குவது முக்கியமான விடயமாகும். ஆனால் வடக்கு மாகாணக் கல்வி அதிகாரிகள் பதிலீடு வழங்குவது தொடர்பாக நியாயமான நடவடிக்கைகளை மேற்கொள்வதில்லை. தமக்கு வேண்டப்பட்டவர்களுக்கும், அவர்களின் உறவுகளைப் பாதுகாப்பதற்குமாகப் பதிலீடு வழங்கக்கூடிய நிலை வடக்கு மாகாணத்தில் உள்ளது. இவ்வாறான செயற்பாட்டுக்குப் பொருத்தமான எந்தவித நடவடிக்கைகளையும் வடமாகாணம் மேற்கொள்வதில்லை.

இவ்வாறான சூழல் ஏற்படுவதைத் தடுக்கும் நோக்கில் இரு மாதங்களுக்கு முன்னரேயே 2016 இடமாற்றச் சபைக் கூட்டத்தில் இலங்கை ஆசிரியர் சங்கம் இதனைச் சுட்டிக்காட்டி பதிலீடு வழங்கும் முறையையும் தெரிவித்திருந்தது. அதற்குரிய எந்த விதமான ஆக்கபூர்வமான நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என்பதைச் சுட்டிக்காட்டி கடந்த நவம்பர் மாதம் 6ஆம் திகதியும் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளரால் கடிதம் வாயிலாக வடமாகாணக் கல்விப் பணிப்பாளருக்குத் தெரிவித்து அதன்பிரதி வடமாகாணக் கல்வியமைச்சுக்கும், முதலமைச்சருக்கும் அனுப்பப்பட்டிருந்தது.

இந்த நிலையில் ஒரு தொகுதி ஆசிரியர்களுக்குக் கடந்த மாதம் இடமாற்றக் கடிதம் வழங்கப்பட்ட நிலையில் ஜனவரி முதல் புதிய பாடசாலையில் பொறுப்பேற்கும் வகையில் அவர்கள் பணியாற்றிய சேவை நிலையங்களில் இருந்து விடுப்புப் பெற்றுள்ளனர்.

பல ஆசிரியர்கள் வாடகை செலுத்தித் தங்கியிருந்து கற்பித்த இடங்களை விட்டுவிட்டு வந்துள்ளனர். ஒரு சிலர் தமது பிள்ளைகளையும் தாம் இடமாற்றம் பெற்ற வலயத்தில் பாடசாலைகளுக்குச் சேர்த்துள்ளனர். இத்தகைய நிலையில் இடமாற்றங்களை ஏப்ரல் மாதம் வரை பிற்போடுவதாக வடமாகாணக் கல்வியமைச்சு எடுத்துள்ள தீர்மானம் வெளிமாவட்டத்தில் பணியாற்றும் ஆசிரியர்களின் பிரச்சினைகள் மட்டில் துளியேனும் அக்கறையற்ற செயற்பாடாகவே உள்ளது.

வருடாந்த இடமாற்றங்கள் தொடர்பாக வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் செயற்திறனற்ற தன்மைக்கு வெளிமாவட்டத்தில் பணியாற்றும் ஆசிரியர்களைப் பலிக்கடாவாக்க இலங்கை ஆசிரியர் சங்கம் அனுமதிக்கப்போவதில்லை. இது தொடர்பாக பெரிய தொழிற்சங்க நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றோம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (து-10)

# வட்டக்கச்சியில் இன்று இலவச மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம், டிசெ. 13
வடக்கு மாகாண மருத்துவ மன்றத்தின் ஏற்பாட்டில் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு கிளிநொச்சி வட்டக்கச்சி மாயவனூர் வித்தியாலயத்தில் இலவச மருத்துவ முகாம் நடைபெறும் என்று மன்றச் செயலர் மருத்துவர் ந.இரவீந்திரன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண மருத்துவமன்றத்தின் கொள்கைகளில் ஒன்றான தொடர் மருத்துவ முகாம் நடத்துதல் என்னும் நோக்கத்திற்கு அமைவாக இந்த முகாம் ஒழுங்கு செய்யப்பட்டது. இந்தப் பிரதேசத் தைச் சேர்ந்த மக்கள் இதில் கலந்துகொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். (வ-10)

# அதிகாரிகள் பாரபட்சம் என மக்கள் போராட்டம்

## வவுனியா, பத்தினாபுரத்தில்

வவுனியா, டிசெ. 13
வவுனியா, கணேசபுரம், பத்தினாபுரத்தில் 2002, 2006ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் மீள் குடியமர்ந்த மக்கள் தமக்கு வீடுகள் வழங்கப்படவில்லை என்று தெரிவித்தும், 2012, 2013, 2014 ஆண்டுகளின் இறுதியில் இந்தியாவிலிருந்து வந்த மக்கள் தமக்கான அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை என்று தெரிவித்தும் கணேசபுரம் பத்தினாபுரம் பொதுநோக்கு மண்டபத்துக்கு முன்பாக நேற்று ஒன்றிணைந்து நீதி கோரினர்.

“33 குடும்பங்களுக்கு வீட்டுத்திட்டம் வழங்கப்படவில்லை. எம்மை அதிகாரிகள் புறக்கணிக்கின்றனர். கிளிநொச்சி, மன்னார், வீரபுரம் போன்ற பகுதிகளிலுள்ளவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அதிகாரிகள் எம்மைப் பழிவாங்குகின்றனர்.


வெண்கலச்செட்டிகுளம் பிரதேச செயலகத்துக்குட்பட்ட இந்தப் பகுதி மக் களுக்கான வீட்டுத் திட்டத்தில் பாகுபாடு இடம்பெற்றுள்ளது. வீடுகள் இன்றி நாம் உறவினர்கள் வீடுகளிலும், வாடகை வீடுகளிலும் தற்காலிகமாக வசிக்கின்றோம். போரால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள நிலையிலும் எமக்கான வீட்டுத் திட்டங்கள், சமுர்த்தி போன்ற பல அரச சலுகைகளை வழங்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

கிராம சேவையாளர் தனது காரியாலயத்தில் தங்கியிருப்பதில்லை. இந்தக் கிராமத்தில் 290 குடும்பங்கள் வசிக்கின்றனர். அவற்றில் 33 குடும்பங்களுக்கே வீட்டுத் திட்டம் வழங்கவேண்டியுள்ளது. 13 குடும்பங்கள் நிரந்தரக் காணிகள் இன்றி வசிக்கின்றனர். இந்தப் பகுதியில் அதிக மானோர் நிரந்தரக் காணியில் வீடுகளைக் கட்டிவிட்டு வவுனியா நகர்ப் பகுதியில் வசித்து வருகின்றனர். கட்டிய வீடுகளில் மக்கள் குடியின்றி வீடுகள் காடுகளாகக் காட்சியளிக்கின்றன. சிலர் தமது வீட்டில் வீடுகள் இல்லாதவர்களை வாடகைக்கு குடியமர்த்தியுள்ளனர் என்று அவர் கள் தெரிவித்தனர்.

“தற்போது வீடுகள் இன்றி இருப்பவர் கள் அனைவரும் உப குடும்பங்களைச் சேர்ந்தவர்களே. இவர்கள் வீட்டுத் திட்டத்துக்கு விண்ணப்பிக்கும்போது தாய் தந்தையுடனேயேவசித்துள்ளனர். இந்தப் பகுதிக்கு அடிப்படை வசதிகள் அற்ற குடும்பங்களுக்கு கட்டம் கட்டமாக வீட்டுத் திட்டம் பெற்றுக் கொடுக் கப்பட்டுள்ளது.

இந்தியாவிலிருந்து வந்த குடும்பங்கள் என இனங்கண்ட இருவருக்கு தற்போது கிடைத்த வீட்டுத் திட்டத்தில் வீடுகள் வழங்கப் பட்டுள்ளன. நாம் அடிப்படை வசதிகளற்ற குடும்பங்களுக்கே முன்னுரிமை அடிப்படையில் வழங்குகின்றோம். உப குடும்பங்களுக்கு தனியாக விண்ணப்பம் செய்யப் பட்டுள்ளது - என்று குறித்த பகுதி கிராம அலுவலர் எஸ். சர்மிலன் தெரிவித்தார். (ற-4)

# திருநீறு சொரியும் காட்சியை நேரில் பார்வையிட்டார் விக்கி

யாழ்ப்பாணம், டிசெ.13
சாயிபாபாவினுடைய திருவுருவப்படத்தில் இருந்து கடந்த 16 நாள்களாக சொரிந்து வந்ததாக கூறப்படும் திருநீறை வடக்கு மாகாண முதல்வர் சி.வி.விக்கினேஸ்வரன் நேற்று மாலை நேரில் சென்று பார்வையிட்டார். அந்த திருநீற்றை தானும் பூசிக்கொண்டார். பருத்தித்துறை கந்தரோடை (வி.எம்.) வீதியில் உள்ள வல்லிபுரம் மார்க்கண்டு என்பவரது வீட்டில் வைக் கப்பட்டிருந்த சாயி பாபாவினுடைய திருவுருவப் படத்திலிருந்து கடந்த 16 நாள்களாக திருநீறு சொரிவ தாகத் தெரிவிக்கப்பட்டது. கடந்த 6 நாள்களாக குங்குமம் சொரிவதாவும் தெரிவிக்கப்பட்டது. குறித்த வீட்டின் உரிமையாளர் வடக்கு முதல்வருடைய அலுவலகத்தில் பணிபுரிகின்றார். இதனால் இந்த செய்தி முதல்வருடைய காதுகளில் எட்டவே அவர் நேரில் சென்றதாகவும் தெரிவிக்கப்பட்டது. (வ-21,26)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்...

### விமானங்களை...

சென்னையில் வர்தா புயல் தாக்கம் தொடங்கியமையால் குறித்த விமானங்கள் மீண்டும் திரும்பி வந்ததாகக் கூறப்பட்டது.

சென்னையிலிருந்து டுபாய் நோக்கிப் புறப்பட்ட எமிரேட்ஸ் விமானமும் புயல் அச்சத்தால் பண்டார நாயக்க பன்னாட்டு விமான நிலையத்தில் தரையிறக்கப்பட்டது.

பண்டாரநாயக்க விமான நிலையத்திலிருந்து சென்னை நோக்கிச் செல்லும் அனைத்து இலங்கை விமானங்களும் இன்றுவரை சேவையில் ஈடுபடாது என விமான நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன. (கு)

### சு.கட்சியின்...

தெரிவித்தார்.இது தொடர்பில் டெய்லிமிரர் ஆங் கில ஊடகத்துக்கு தெரிவித்துள்ளதாவது:

1972ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட அரசமைப்பை அடிப்படையாகக் கொண்டு ஒற்றையாட்சியின் கீழ் பௌத்த மதத்துக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு சுதந்திரக் கட்சியின் பரிந்துரைகள் அமையும். எனினும் ஏனைய மதங்களின் உரிமைகளும் பாதுகாக்கப்படும். அத்துடன், இரண்டு அல்லது அதற்கும் மேற்பட்ட மாகாணங்கள் ஒன்றிணைவது குறித்து எமது கட்சி ஆட்சேபனையைத் தெரிவிக்கவில்லை. 13 ஆம் திருத்தத்துக்கமைய உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை ஆராய்ந்து முடிவு எடுக்கலாம்.முன்னாள் ஜனாதிபதி ராஜபக்சவின் ஆதரவு பொது எதிரணியிலுள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவர்கள் சிலரும் தத்தமது பரிந்துரைகளை முன்வைத்துள்ளனர் - என்றார். (வ-4,எ)

### வர்தா...

மரியராசா தெரிவித்தார்.

கடந்த நான்கு நாட்களாக முல்லைத்தீவு கடற்றொழிலாளர்கள் கடலுக்குச் செல்லாத நிலையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

‘இனிவரும் நாள்கள் பெருநாளுக்குரிய நாள்களாகவும், அடுத்த ஆண்டினை எதிர்கொள்கின்ற நாள்களாகவும் உள்ள நிலையில், கடலுக்குத் தொழிலுக்குச் செல்லாமல் இருப்பது பொருளாதார ரீதியாக பாதிப்பினை ஏற்படுத்தியுள்ளது. 4ஆயிரத்து 500 வரையான குடும்பங்கள் வறுமை நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளன. கடலுக்குச் செல்லும் ஒவ்வொரு குடும்பங்களும் அன்றாட வாழ்க்கைக்கே போதுமான நிலையில் நான்கு நாள்களாக காலநிலை அறிவிப்பு காரணமாக தொழிலுக்குச் செல்லா[illegible] களை உருவாக்கி[illegible] பிள்ளை மரியராசா தெரிவித்தார்.

வர்தா புயல் நேற்று மாலை தமிழகத்தை ஊடறுத்து செல்லும் என ஏற்கனவே எதிர்பார்க்கப்பட்ட நிலையில், நேற்றுப் பிற்பகல் வர்தா புயல் சென்னையைத் தாக்கியதாகவும் 2 பேர் சாவடைந்ததாகவும் இந்தியச் செய்திகள் தெரிவித்தன. (வ-21)

### புலனாய்வாளர்கள்...

மேற்கொண்டனர் என்று யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப் பட்டுள்ளது.

“தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழரசுக் கட்சியின் தலைவருமான மாவை. சேனாதிராஜாவின் இல்லத்துக்கு நேற்று முன்தினம் மதியம் வாகனம் ஒன்றில் சிவில் உடையில் வந்த குழுவினர் தம்மை இராணுவப் புலனாய்வாளர்கள் என்று அறிமுகப்படுத்தினர். நாடாளுமன்ற உறுப்பினரிடம் விசாரணை மேற்கொள்ள வேண்டும் என்று கூறியுனர். இதன்போது மாவை.சேனாதிராஜா வீட்டில் இல்லாத காரணத்தால், இராணுவப் புலனாய்வாளர்கள் திரும்பிச் சென்றுள்ளனர். மீண்டும் அன்று மாலை வாகனத்தில் வந்த ஐவர் தம்மை இராணுவப் புலனாய்வாளர்கள் என்று அடையா[illegible] நாடாளுமன்ற உறுப்பின[illegible] விசாரணைக்கு வந்ததாக தெரிவித்தனர். இதுதொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினருக்கு தகவல் வழங்கப்பட்டது. அருகில் உள்ள இல்லத்தில் இருந்து வருகை தந்த நாடாளுமன்ற உறுப்பினரிடம் இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணை மேற்கொள்ள முற்பட்டனர். இதன்போது தனது பாதுகாவலரை அழைத்த நாடாளுமன்ற உறுப்பினர், யாழ்ப்பாணம் பொலிஸாருக்கு தகவல் வழங்குமாறு பணித்ததோடு குறித்த விடயம் தொடர்பாக சபாநாயகரின் அனுமதி அல்லது நீதிமன்ற உத்தரவின்றி எவ்வாறு விசாரணை மேற்கொள்ள முடியும் என்று வந்திருந்தவர்களிடம் விணாவினார்.

இந்த நிலையில் சம்பவ இடத்துக்கு வருகை தந்த யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைக்காக வருகை தந்த இராணுவப் புலனாய்வாளர்களிடம், அவர்கள் பணியாற்றும் இராணுவ முகாம் போன்ற விவரங்களை கேட்டறிந்ததோடு, நாடாளுமன்ற உறுப்பினரை விசாரணை செய்வதாயின் உள்ள நடைமுறைகளைப் பின்பற்றவேண்டும் எனக் கூறி அவர்களைத் திருப்பி அனுப்பி வைத்தனர்” என்று கட்சியின் மூத்த உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார். தமிழரசு கட்சியின் அலுவலகத்துக்குள் இராணுவ புலனாய்வாளர்கள் வந்து தம்மிடம் விசாரணை மேற்கொண்டனர் என்று நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராஜா யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார். (வ-101,106)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உர மானியம் வழங்க ரூ. 22 கோடி ஒதுக்கீடு

வவுனியா மாவட்ட காலபோக நெற் செய்கைக்கான உரமானியக் கொடுப்பனவாக 22 கோடியே 84 லட்சத்து 22 ஆயிரத்து 500 ரூபா அனுமதிக்கப்பட்டுள்ளது என்று மாவட்ட பெரும்பாக உத்தியோகத்தர் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

வவுனியா மாவட்டத்தில் 2016- 2017ஆம் ஆண்டுக்கான கால போக நெற் செய்கையில் 17 ஆயிரத்து 552 விவசாயிகள் நெல் பயிரிட்டுள்ளனர். 18 ஆயிரத்து 281 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் நெற் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

செட்டிகுளம் , உலுக்குளம் , மடுக்கந்தை, கோவில்குளம், ஓமந்தை , பம்பைமடு, கனகராயன்குளம் , நெடுங்கேணி ஆகிய 8 கமநல சேவை நிலையங்களின் கீழேயே அவை பயிரிடப்பட்டுள்ளன.

45 ஆயிரத்து 702.5 ஏக்கரில் பயிரி டப்பட்ட நெல்லுக்கு, ஏக்கருக்கு 5 ஆயிரம் ரூபா வீதம் 22 கோடியே 84 லட்சத்து 22 ஆயிரத்து 500 ரூபா அனுமதிக்கப்பட்டுள் ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ற-101)

## 19 ஆண்டுகளின் பின்னர் காணியை விடுவிக்கும் இராணுவத்தினர்

போர் இடம்பெற்ற காலத்தில் சிறப்பு அதிரடிப்படையினர் முகாமிட்டு நிலை கொண்டிருந்த காணி 19வருடங்களின் பின்னர் விடுவிக்கப்பட்டது. வவுனியா செட்டி குளம் பிரதான வீதியில் அமைந் துள்ள இந்த முகாம் போரின் போது சோதனைச் சாவடியாகவும் செயற் பட்டது.

முகாம் அமைந் துள்ள காணி, வன வளத்திணைக் களத் துக்குரியது. சுமார் 5 ஏக்கர் நிலத்தை இரா ணுவத்தினர் தமது தேவை களுக்குப் பயன்படுத்தி வந்த னர். தற்போது அங் கிருந்து முகாம் அகற் றப்பட்ட- பொருள் கள் ஏற்றிச் செல்லப் படுகின்றன. (ற-4)

## களியாட்ட நிகழ்வுக்கு இராணுவம் மீள ஏற்பாடு

கடந்த மாத இறுதி யில் இராணுவத் தால் நடத்தத் திட்ட மிடப்பட்டு நிறுத்தப் பட்டிருந்த களியாட்ட நிகழ் வுகள் மீண்டும் வவுனியா, வைரவப் புளியங்குளம் யங்ஸ் ரார் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடத்தப்படவுள்ளன. அதற்கான பணிகள் தற்போது மேற் கொள்ளப்பட்டு வரு கின்றன என்று தெரி விக்கப்படுகின்றது.

கடந்த மாத இறுதி யில் மாவீரர் வாரம் தமிழ் மக்களால் கடைப் பிடிக்கப்பட்ட நிலையில், களி யாட்ட நிகழ்வு வவுனி யாவில் ஏற்பாடு செய் யப்பட்டிருந்தது. மக் களின் எதிர்ப்பை அடுத்து அது கைவி டப்பட்டது. (ற-4)

### மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பம் திருவோணம் - 3, 28 பாவம். 36 வயதுடைய இங்கிலாந்தில் இஞ்சினியராக பணிபுரியும் மணமகனுக்கு படித்த அழகிய மணமகள் தேவை.

076 535 9284

(J 6798) (12,13,11)

ஓம் சக்தி
ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ.

### வண்.குளங்கரை மருதடி ஸ்ரீகாமாட்சி அம்பாள் தேவஸ்தானம் குருக்கள் பதவி வெற்றிடம்

எமது தேவஸ்தானத்தில் பணிபுரிய குருக்களும் அவருடன் கூடிய உதவியாளரும் பரிசாத்கரும் தேவை. வரும் உதவி யாளர்களும் பரிசாதகரும் குருக்களின் பொறுப்பிலேயே இருத்தல் வேண்டும். சம்பள விவரங்கள் எல்லாம் நேரில் பேசித்தீர்க்கப்படும். விண்ணப்பிக்க விரும்பும் குருமார்கள் எழுத்து மூலமாக யாழ்ப்பாணம் வண்ணை குளங்கரை மருதடி ஸ்ரீ காமாட்சி அம்பாள் தேவஸ்தானம் இல.1097, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு 25.12.2016 இற்கு முன்னர் விண்ணப்பித்தல் வேண்டும். தேர்ந்து எடுக்கப்படும் குருமார்கள் தர்மகர்த்தா சபையின் இறுதி முடிவின்படியே தேர்ந்து எடுக்கப்படுவர்.

மேலதிக விவரங்களுக்கு 077 742 7322 தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ளவும்.

அன்னையின் சேவையில்
தலைவர், செயலாளர்,
தர்மகர்த்தா சபையின் சார்பாக.

(J 6707)
(14,17,18)

### வீடு வாடகைக்கு உண்டு

யாழ். நகர் கன்னாதிட்டியில் (சயன்ஸ் ஹோல் அருகில்) 4 அறைகள், சமையலறை, இணைந்த குளியலறை, ஹோல் மற்றும் வாகன தரிப்பிட வசதிகளுடன் கூடிய மேல்வீடு மட்டும் வாடகைக்கு உண்டு.

தொடர்பு :- 0775642197

### சிறுநீரகம் தேவை

பெண் ஒருவருக்கு O+ve குருதி வகையைச் சேர்ந்த சிறுநீரகம் தேவைப்படுகின்றது.

தொடர்பு :- 077 458 1675

## STUDY IN CANADA

உங்கள் கனவுக்கல்வியினை கனடா நாட்டில் தொடர கடந்த மூன்று வருடங்களாக எவருக்கும் எவ்விதமான ஏமாற்றங்களும் கொடுக்காமல் இயங்கி வரும் WINSTAR VISA CONSULTANT ஐ நாடுங்கள்

*BIO MEDICAL SCIENCE *COMPUTER SCIENCE
*PRATICAL NURSING *GENERAL ARTS & SCIENCE
*FASHION DESIGNING * HOTEL MANAGEMENT

2017 INTAKES (Spring/Summer/Full)
எங்குமில்லாத மிகக்குறைந்த கட்டணங்கள்
சிறந்த ஆங்கில பயிற்சிகள்
விசா 100% பெற சிறந்த ஆலோசனைகள்.

அடுத்த வருடத்திற்கான 2017 (Jan - Dec) வரையான சகல உள் நுழைவுகளுக்கு எமது நிறுவனத்தால் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி 30.12.2016 (வெள்ளி) சிறந்த ஆலோசனைகளைப் பெறநேரில் வாருங்கள்.

### WINSTAR VISA CONSULTANTS

106, Post box Junction,
Palaly Road,Thirunelvely.

web : www.winstarjaffna.com
fb: winstar visa consultants
email : winstar vc @gmail.com

## பணியாளர்கள் தேவை

பிரபல அரச தனியார் ஒப்பந்தங்களை வடமாகாணத்தில் நிறைவேற்றும் தனியார் நிறுவனம் ஒன்றிற்கு பின்வரும் வெற்றிடங்களுக்கு தகுதியானவர்களிடமிருந்து ஒப்பந்த அடிப்படையில் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01) தொழில்நுட்ப உத்தியோகஸ்தர் (வெற்றிடங்கள் - 08)
வேலையின் தன்மை வேலைத்தளத்தை நிர்வகித்தல் (முழு நேரம்)
தகுதி NCT CIVIL/அதற்கு சமவலுவான கற்கை நெறி
உடற்தகுதி- மனவலிமையும் உடல்வலிமையும் கொண்டிருத்தல்
*முதல் மாத சம்பளம் அடுத்த மாதம் கடந்து அடுத்த மாதம் 11 ஆம் நாளில் வழங்கப்படும்.

2) வேலைத்தள மேற்பார்வையாளர் - பயிற்சித்தரம்
தகுதி - VTA / அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் குடிசார் எந்திரவியல் தொடர்பான ஏதாவது ஒரு கற்கை நெறியைப் பின்பற்றியிருத்தல் வேண்டும்.மற்றும் G.C.E.O/L இல் திருப்திகரமான பெறு பேற்றை பெற்றிருத்தல் வேண்டும். பயிற்சிக்காலம் - 2 வாரம்
பயிற்சியின் போது 250/= வழங்கப்படும்
2 வார முடிவில் வேலைத்தள மேற்பார்வையாளராக தலைமை உயர்த்தப் படும். அதன்பின் சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.
*முதன் மாத சம்பளம் அந்த மாதம்கடந்து அடுத்த மாதம் 21 ஆம் நாளில் வழங்கப்படும்.

குறிப்பு - எமது நிறுவனத்தின் விதிமுறைகளுக்கு அமைவாக வேலையில் இருந்து விலகுவதாயின் ஒரு மாதத்திற்கு முன்னர் விலகல் கடிதம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அல்லாதுவிடின் நிறுவனத்திற்கு ஒரு மாத சம்பளம் மீள் செலுத்தவேண்டும்.

தொடர்புகளுக்கு - Jobsjtr@gmail.com
முகாமையாளர் - 076 824 5455

### தென் இந்திய சோதிடர் வருகை



தென் இந்தியாவின் Raj TV இல் புகழ்பெற்ற வரும், சிங்கப்பூர், மலேசியா பிரசித்தி பெற்ற வரும் மாந்திரீகம், செய் வினை, திருமணத் தடை, குழந்தைப் பாக்கியமின்மை நிவர்த்தி, ஜாதகம், எண்கணிதம், மனையடி வாஸ்த்து மிகத் துல்லியமாகக் கணிக் கக் கூடிய ஸ்ரீ சங்கரா சோதிடர் அவர்கள் யாழ். வருகை. மேலும் வவுனியா, மட்டக்களப்பு, திருகோணமலை விஜயங்களும் மேற்கொள்ள வுள்ளார். முன்பதிவுகளுக்குத் தொடர்பு கொள்க.

076 562 7050

### கண்ணீர்க்காணிக்கை

எமது சங்கத்தில் பணியாற்றும் ம.செல்வராணியின் தாயாரும், வை. மனோறஞ்சனின் மாமியும் ம. சஜிந்தனின் பேர்த்தியுமான

திருமதி தவமணி கந்தையா

அவர்கள்சிவபதமடைந்ததையிட்டு துயருற்று இருக்கும் அவரது குடும்பத் தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பணிப்பாளர், பணியாளர்,
யாழ். மாவட்ட சித்த மருந்துக்கள்உற்பத்தி விற்பனவு வைத்திய சேவைக்கூட்டுறவுசங்கம் (வ.து).

### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு
06.01.1948

இறப்பு
25.11.2015

அமரர் ஜெகநாதன்
இராணிரத்தினம்
(கிளி)

திதி - பௌர்ணமி

எமது குடும்பத்தலைவி ஜெகநாதன் இராணிரத்தினம் அவர்களின் ஆண்டுத்திதி இன்று (13.12.2016) செவ்வாய்க்கிழமை மதியம் 12 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளதால் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன விருந்துபசாரத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

576/1, கஸ்டி அம்மன் வீதி,
கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்
(கணவர், பிள்ளைகள்)

## Jaffna Managers Forum
## யாழ் முகாமையாளர் சங்கம்

இளைஞர் யுவதிகளுக்கான ஓர் அரியவாய்ப்பு

**இலவச பயிற்சிப்பட்டறை**

புதிய சிறிய தொழில் முயற்சிகளை ஆரம்பிக்க விரும்பும் இளைஞர் யுவதிகளுக் கான வழிகாட்டல் பயிற்சிப்பட்டறை.

கீழ்க்காணும் தகைமையினற்கான பயிற்சிப் பட்டறையும் வழிகாட்டல்களும் வெளி நாட்டு நிறுவனமொன்றின் அனுசரணையுடன் விசேட பயிற்சி வழங்குநர்களினால் ஒழுங்கமைக்கப்பட்ட திட்டத்தின்படி பயிற்சிநெறி நடத்தப்படுகின்றது.

பங்குபற்றுவதில் எதிர்பார்க்கப்படும் தகைமைகள்

1. சுயதொழில் முயற்சிகளில் ஈடுபட ஆர்வமுள்ளவர்கள்.
2. இளம் தொழில் ஆர்வலர்கள்.
3. போரினால் பாதிக்கப்பட்டவர்கள்.

ஏற்கனவே சிறிய தொழில் முயற்சிகளை ஆரம்பித்து நடத்திவரும் இளைஞர் யுவதிகளும் கலந்துகொள்ள முடியும்.

பயிற்சி நெறி பற்றிய விவரங்கள்.

- 20-30 பயனாளிகளுக்கு 15 நாள்கள் முழுநேர பயிலரங்கு யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.
- முதலாவது பயிற்சிநெறியானது செப்ரெம்பர் மாதம் ஆரம்பமாகி நடை பெற்று முடிந்தளவில் இரண்டாவது பயிற்சிநெறியானது டிசம்பர் மாதம் 10ஆம் திகதி ஆரம்பமாகி தற்பொழுது நடைபெற்று கொண்டிருக்கிறது.
- மூன்றாவது பயிற்சிநெறியானது 2017ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி ஆரம்பமாகவுள்ளது.
- இப் பயிற்சிநெறியின் போது காலை, மாலை சிற்றுண்டிகளும், மதிய உணவும் வழங்கப்படும். அத்துடன் போக்குவரத்துக்கான செலவீனங்களும் ஈடுசெய்யப்படும்.
- பயிற்சியின் முடிவில் தகுதியானவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படும்.

இப் பயிற்சிநெறியில் பயன்பெற விரும்புவோர் உங்கள் சுயவிபரக்கோவையை கீழ் வரும் முகவரிக்கு தபால்மூலமோ அல்லது ஈமெயில் மூலமாகவோ அல்லது நேரிலோ 24.12.2016க்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இணைப்பாளர்
யாழ் முகாமையாளர் சங்கம்,
# 17, கமத்தொழில் திணைக்கள வீதி, நல்லூர்.
தொலைபேசி இலக்கம் :- 077 304 3206, 021 222 7012
ஈமெயில் :- bmsjaffna@yahoo.com

(C/ 27005) (11,17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10 ஆம் ஆண்டு நினைவுநாள் அழைப்பு



கடந்த 13.12.2006 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர்

அமரர் பொன்ராசா குணசேகரம்

(பொன்ராசா மோட்டார் பயிற்சிப்பாடசாலை உரிமையாளர்)

அவர்களின் 10 ஆம் ஆண்டு நினைவுநாள் இன்று (13.12.2016) செவ்வாய்க்கிழமை அத்தியடி கணபதி கலாசார மண்டபத்தில் நடைபெறும் அத்தரு ணம் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

நற்குணமிகு குடும்பத்தலைவிளக்கை இழந்து தவிக்கின்றோம்
மகன் – கு.பிரசாத்,
மருமகள் – பி.தாட்சாயினி,
பேரக்குழந்தைகள்– பி.மிதுன், பி.மிதுனிஷா.

கணபதி கலாசார மண்டபம்,
அத்தியடி,
யாழ்ப்பாணம்.
(J.6677)(13.21.18.17)


# முத்தரிப்புத்துறை மீனவர்கள் 29 பேர் கடற்படையால் கைது

## விடுவித்தது மன்னார் மாவட்ட கடற்றொழில் திணைக்களம்

மன்னார், டிசெ.13

மன்னார் முத்தரிப்புத் துறையில் கடந்த ஒக்ரோபர் மாதம் கடற் படையினருடன் ஏற்பட்ட முறுகலைத் தொடர்ந்து கடற்படையினர் கைதுகளை மேற்கொள்கின்றனர் என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது.

சட்டவிரோதமான முறையில் மீன் பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் மன் னார் சிலாவத்துறையைச் சேர்ந்த 29 உள்ளூர் மீனவர்களை கடற் படையினர் கடந்த சனிக்கிழமை கைது செய்தனர். சுருக்கு வலையைப் பயன்படுத்தி கரையில் இருந்து மூன்று கிலோமீற்றர் தூரத்தில் மீன் பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டு கடற்றொழில் திணைக்களத்தின் மன்னார் மாவட்ட அலுவலகத்தில் அவர்கள் ஒப்ப டைக்கப்பட்டனர். மீனவர்கள் மூன்று கிலோமீற்றர் தூரத்தில் மீன்பிடியில் ஈடுபட்டமைக்கான சான்றுகளை சமர்ப் பிக்க கடற்படை தவறியதை அடுத்து அவர்கள் விடுவிக்கப்பட்டனர் என்று மன்னார் மாவட்ட கடற்றொழில் திணைக்களம் கூறியது.

தாம் 10 கிலோமீற்றர் தூரத்தில் மீன்பிடியில் ஈடுபட்டபோதே கடற்படையினர் கைது செய்தனர் என்று மீனவர்கள் தெரிவித்தனர் என்று மன்னார் மாவட்ட கடற் றொழில் திணைக்கள தரப்பினர் குறிப்பிட்டனர். ஏற்கனவே கடற் படையினரால் கைதுசெய்யப்பட்ட 185 மீனவர்கள் குற்றமிழைத்தமைக் கான ஆதாரங்கள் இன்மையால் மன்னார் மாவட்ட கடற்றொழில் திணைக்களத்தினரால் விடுவிக் கப்பட்டிருந்தனர்.

முத்தரிப்புத்துறை கிராமத்திற்குள் இரவு வேளையில் புகுந்த கடற்படை சிப்பாய் ஒருவர் மடக்கிப் பிடிக்கப்பட்டு கிராம மக்களால் தாக்கப்பட்டார். அதன்பின்னர்கடற்படையினருக்கும் பிரதேச மீனவர்களுக்கும் இடையே முறுகல் நிலை காணப்படுகின்றது என்று தெரிவிக்கப்பட்டது.

(ற-21)


# 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் இராமலிங்கம் தளையசிங்கம்

தோற்றம் 20.04.1940 — மறைவு 08.12.2011

தந்தையே உம்மைப்போல - இந்த
தரணியிலே எவரும் சொந்தமில்லை
தாலாட்டி சீராட்ட எங்கள்
தாய்க்கருகே நீருமில்லை
தரணியில் இருந்தபோது உங்கள்
பாசத்தில் வேஷமில்லை- இன்று
ஐந்தாண்டுகள் ஆனபோதும் -உண்மைப்
பாசம் மோஷம் போகவில்லை

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறை வனை பிரார்த்திக்கின்றோம்.

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

என்றும் நினைவில்
குடும்பத்தினர்


# ஏமாற்றப்படுவோமா என்ற சந்தேகம் தமிழருக்கு

## வினோ நோகராதலிங்கம் தெரிவிப்பு

முல்லைத்தீவு, டிசெ.13

தமிழ் மக்களுடைய இனப் பிரச்சினை தீர்வு விடயத்திலே ஏமாற்றப்பட்டு விடுவோமா என்கின்ற ஆதங்கம் தமிழ் மக் களிடையே நிலவுகின்றது.

இவ்வாறு தமிழ்த்தேசிய கூட் டமைப்பின் முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம் தெரி வித்தார்.

முல்லைத்தீவில் கரைதுறைப் பற்று பிரதேசசெயலக பிரிவுக்கு உட்பட்ட தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திய டைந்த மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வும், பொருளாதார ரீதியில் நலிந்த மாணவர்களுக்கு உதவி கள் வழங்கும் நிகழ்வும் நேற்று முன்தினம் தமிழ்தாய் கல்வி நிலைய வளாகத்தில் நடை பெற்றது. அதில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரி வித்தார்.

அவர் தெரிவித்ததாவது–

எமக்கான தீர்வுத் திட்டம் முன் வைக்கப்படுகின்றபோது அதனைக் குழப்புவதற்கென சிலர் உள்ளனர்.

தேசிய அரசோடு நாங்கள் இணைந்து செயற்படுகிறோம் என்பதற்காக தமிழ் மக்களால் ஏற்றுக்கொள்ள முடியாத, அல் லது கடந்த கால தமிழ் மக் களுடைய தியாகங்களுக்கு, தமிழ் மக்களின் இலக்குக ளுக்கு ஈடான தீர்வுத் திட்டங்கள் தர மறுக்கப்படுகின்றபோது அவற்றை ஏற்க முடியாது. நாங்கள் அனைவரும் ஒன்றி ணைந்து ஒற்றுமையாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பு ஒன்றுபட்டு நிற்க வேண்டும்.

தமிழ்த்தேசிய கூட்ட மைப்புக்குள் இருக் கும் சில கட்சிகளி னுடைய நாடாளு மன்ற உறுப்பினர்க ளுக்கிடையே பிளவு ஏற்பட்டு விடுமா என் கின்ற சந்தேகம் எம்ம வர் மத்தியில் காணப் படுகின்றது. எமது உரி மைகளை வென் றெடுக்க வேண்டும் என்றால் தமிழ் மக் கள் அனைவரும் ஒன்றிணைய வேண் டும்.

அவ்வாறு இல்லாது விட்டால் எமக்கான அதிகாரங்களை நாம் மீண்டும் இழக்கின்ற நிலையே ஏற்படும்.– என்றார். (ற-21)


# மரண அறிவித்தல்

## முருகேசு கனகலிங்கம்

(முன்னாள் பிரபல வர்த்தகர் - பாணந்துறை)



தோற்றம் 10.04.1927 — மறைவு 10.12.2016

யாழ்.காரைநகர், தங்கோடையைப் பிறப்பிடமாகவும் கனடா Brampton ஐ வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு கனகலிங்கம் 10.12.2016 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர் களான முருகேசு ( SKM) - மீனாட்சி (பாணந்துறை) தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ் சென்றவர்களான திருநாவுக்கரசு (சிறாப்பர்) - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், பத்மாவதியின் ஆருயிர்க் கணவரும், குலேந்திரன் (லண்டன்), யசோதா (நியூசிலாந்து, கனடா), பாலேந்திரன் (கனடா), ராஜேந்திரன் (லண்டன்), சுபத்திரா (நியூசிலாந்து) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி, சிவபாக்கியம், பரமலிங்கம் மற்றும் அன்னலட்சுமி (லண்டன்), புஷ்பலீலா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், நந்தினி (லண்டன்), பாலச்சந்திரன் (நியூசிலாந்து, கனடா), அல்லி (கனடா), அனுஷா (லண்டன்), உருத்திரசிவம் (நியூசிலாந்து) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான கிளாக்கர் கந்தையா, தம்பிராசா, Dr. தாமோதரம்பிள்ளை மற்றும் வேலாயுதபிள்ளை (கனடா), கிருஷ்ணவேணி (கீதா - கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும், மைதிலி (கனடா), பைரவி (கனடா), துஷ்யந்தி (லண்டன்), இந்திரஜித் (ஆஸ்திரேலியா), Dr. சயந்தன் (ஆஸ்திரேலியா), Dr.அஜந்தன் (ஆஸ்திரேலியா), நிரோஷா (ஆஸ்திரேலியா), சஹானா (கனடா), விஷ்ணு (லண்டன்), சத்திஷ் (கனடா), துளசி (லண்டன்), Dr. ராஜீவ் (லண்டன்), பிரஷானா (கனடா), முரளி (கனடா), அகல்யா (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புப் பேரனும், ஸ்ருதி (கனடா), ஆர்த்திகா (லண்டன்), ஹரிஷ் (கனடா), இராகவி (கனடா), கௌதம்( லண்டன்), இஷானி (கனடா), மஹதி (லண்டன்) ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 18.12.2016 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணி - பி.ப. 3.00 மணியளவில் கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

47/12, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி.
(J/6776) (11,17)

தகவல்:
குடும்பத்தினர்.

கனடா -141 6574 1966/ + 164 7692 6338
இலங்கை - 077 819 9504, 021 221 6784



# ஆவது 29 நெஞ்சை நெருடும் நினைவலைகள்



தோற்றம் 18 . 11 . 1936

மறைவு 04 . 12 . 1987

பெருங்குளம் சாவகச்சேரியை வதிவிடமாகக் கொண்ட

அமரர் இராசதுரை பஞ்சாட்சரம்

(ஸ்தாபகர் - அருள் முருகன் நகைமாடம்
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்)

திதி:பூரணை (13.12.2016 செவ்வாய்க்கிழமை)

எங்கள் ஒளி விளக்காய் திகழ்ந்த திருவிளக்கே
பாசத்திற்கும் நேசத்திற்கும் உரியவராய் திகழ்ந்தவரே
எமையெல்லாம் ஆதரித்து அரவணைத்து ஆளாக்கிய
எங்கள் குடும்பத்தின் அன்புத் தெய்வமே ஆண்டுகள்
இருபத் தொன்பது ஓடி மறைந்தாலும் உங்கள் அன்பு
நினைவுகள் என்றும் மறையாது

சாரங்கா நகைமாடம்
157, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
021 222 6972, 021 222 8869



# நீங்கா நினைவுகளுடன்

## 15 ஆம் ஆண்டு



அமரர் கந்தையா பன்னிருகரம்

(முன்னாள் உரிமையாளர் – நியூகௌரி மிதிவண்டி வாணிபம், நெல்லியடி)

உயிர்ப்பு 15.01.1944 — சங்கமம் 30.11.2001

திதி: 14.12.2016

ஊர்போற்ற வாழ்ந்தீர்கள்
உறவுகள் மகிழ்ந்திட நடந்தீர்கள்
குடும்பம் உயர்ந்திட உழைத்தீர்கள்
இறுதியில் கண்ணீரில் நனையவிட்டு சென்றீர்கள்.

'சாந்திபவனம்'
கொற்றாவத்தை,
கரவெட்டி.
(J/6675)(13.18.21)

குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அல்வாய், மனோகரா வீதியில் அமைக்கப்பட்டிருந்த கவிஞர் செல்லையா ஞாபகார்த்த பெயர்ப்பலகை இனந்தெரியாதோரால் சேதமாக்கப்பட்டது. அமரரின் நினைவு தினம் கடந்த வெள்ளிக்கிழமை நினைவுகூரப்பட்டது. அதன்போது பெயர்ப்பலகை சீரமைக்கப்பட்டிருந்தது. நேற்று அதிகாலை அந்தப் பெயர்ப்பலகை ஒயில் வீசிச் சேதமாக்கப்பட்டுள்ளது. (ற-108)

### மாங்குளம் அரச வீட்டுத் திட்டத்தில்

# குடியமராத வீடுகள் அரசுடைமையாகும்

### உடன் நடைமுறையாக்கப்படவுள்ளது என ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.13
மாங்குளத்தில் அமைக்கப்பட்ட அரச வீட்டுத் திட்டத்தில் குடியமராதோரின் வீடுகள் அனைத்தும் உடன் அரசுடைமையாக்கப்படவுள்ளன.

இவ்வாறு தெரிவித்தார் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர்.

அவர் தெரிவித்ததாவது-
முல்லைத்தீவு மாவட்டத்தில் மீள் குடியமர்வு இடம்பெற்றபோது - 2012ஆம் ஆண்டு மாவட்டத்தில் பணியாற்றிய அரச பணியாளர்களுக்காக இந்தத் திட்டம் வழங்கப்பட்டது. இந்தத் திட்டத்தின் கீழ் காணிகளைப் பெற்றவர்களுக்கு வீடமைப்புக்கு இலகு கடன் வசதியும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது.

இந்தத் திட்டத்தின் கீழ் காணிகளைப் பெற்றவர்கள் காணிகளைச் சீரமைத்து வீடமைப்புகளை முன்னெடுத்தபோதும் அவற்றை முழுமையாக்கி அங்கு குடியமரவில்லை. அந்தப் பகுதி மீண்டும் காடாகியுள்ளது. இதனால் நாம் பல நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளோம்.

குடியமராத வீடுகளில் சமூக விரோதச் செயல்கள் அதிகரித்துள்ளமை முக்கிய பிரச்சினையாக உள்ளது. இவை தொடர்பில் உரிமையாளர்களுக்குப் பல தடவைகள் அறிவுறுத்தப்பட்டபோதும் எந்தவித முன்னேற்றகரமான செயற்பாடுகளும் நடக்கவில்லை. இவற்றால் அங்கு குடியமர்ந்துள்ள சில குடும்பங்களும், அயலில் வசிக்கும் மக்களும் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது என்று எமக்குச் சுட்டிக்காட்டப்பட்டது.

> “ முல்லைத்தீவு மாவட்டத்தில் மீள் குடியமர்வு இடம் பெற்றபோது – 2012ஆம் ஆண்டு மாவட்டத்தில் பணியாற்றிய அரச பணியாளர்களுக்காக இந்தத் திட்டம் வழங்கப்பட்டது.

இந்தப் பிரச்சினை தொடர்பில் இறுதி முடிவை எடுப்பதற்காகக் கடந்தவாரம் விசேட சந்திப் பொன்றை ஏற்பாடு செய்தோம்.

இந்த வீட்டுத் திட்டத்தைப் பெற்று ஏனைய இடங்களிலும் வீட்டுத் திட்டங்களைப் பெற்றவர்களதும், ஏனைய மாவட்டங்களில் இருந்து பணிக்காக இங்கு வந்து மாற்றா லாகிச் சென்றபின்னர் இங்கு குடியமர நடவடிக்கை எடுக்காதவர்களினதும் வீட்டுத் திட்டங்களை இரத்துச் செய்வது என்று அதில் தீர்மானிக்கப்பட்டது.

இவ்வாறு உரித்துச் செய்யப்படும் வீடுகள் அதேகிராமத்தில் நிரந்தர வீடுகளற்றுள்ள குடும்பங்களுக்கு உடனடியாக வழங்குவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.- என்றார். (ற-101)

## நுளம்பு பெருக்கம்: மூவருக்கு தண்டம்

யாழ்ப்பாணம், டிசெ.13
யாழ்ப்பாணம், கோப்பாய் பொலிஸ் பிரிவுகளுக்குட்பட்ட பகுதிகளில் நுளம்புப் பெருக்கத்துக்கு ஏதுவான நிலமை காணப்பட்ட குடியிருப்புகளின் உரிமையாளர்களுக்கு ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம், கோப்பாய் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள்விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது குற்றஞ்சாட்டப் பட்டவர்கள் தம்மீதான குற்றத்தை ஒப்புக் கொண்டனர்.

யாழ்ப்பாணம் நீதிவான் மன்ற நீதிவான் சி. சதீஸ்கரன் அவர்களுக்கு தண்டம் விதித்தார். (ற-6)

## காலாவதியான பொருள்கள்: வர்த்தகருக்கு தண்டம்

யாழ்ப்பாணம், டிசெ.13
காலாவதியான பொருள்களை விற்பனை செய்த வர்த்தகருக்கு 6 ஆயிரம் ரூபா தண்டம் விதித்த யாழ்ப்பாணம் நீதிவான் மன்று வர்த்தகருக்கு எச்சரிக்கையும் விடுத்தது.

பாவனையாளர் அதிகார சபையால் கடந்த வெள்ளிக்கிழமை இது தொடர்பான வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. கடை உரிமையாளர் தம்மீதான குற்றச்சாட்டை ஒப்புக் கொண்டார்.

யாழ்ப்பாணம் நீதிவான் மன்ற நீதிபதி எஸ்.சதீஸ்கரன் வர்த்தகருக்கு தண்டம் விதித்தார். (ற-6)

## வீட்டிலிருந்தோர் விழித்ததால் கத்தியை விட்டு ஓடிய திருடர்

### உடுவிலில் நேற்றுச் சம்பவம்

யாழ்ப்பாணம், டிசெ.13
உடுவிலில் நேற்று அதிகாலை வீடுகள், கடைகளுக்குள் புகுந்த திருடர்கள் அங்கிருந்தவர்கள் விழித்துக் கொண்டதால் கத்தி, இரும்புக் கம்பி போன்றவற்றைக் கைவிட்டுத் தப்பியோடினர் என்று தெரிவிக்கப்பட்டது.

உடுவில், அம்பலவாணர் வீதியில் உள்ள வீடுகள், கடைகள் என்பவற்றிலேயே திருட்டு முயற்சிகள் நடந்துள்ளன. வீடு ஒன்றின் கூரை ஓடுகளைப் பிரித்து உள் நுழைந்த திருடர்கள் லெவல் சீற்றை உடைத்தபோது வீட்டிலிருந்தவர்கள் விழித்துக் கொண்டுள்ளனர். திருடர்கள் கத்தி, இரும்புக் கம்பி, பாதணிகளைக் கைவிட்டுத் தப்பி ஓடியுள்ளனர்.

வேறு ஒரு வீட்டிலும், கடையிலும் திருடர்கள் தமது கைவரிசையைக் காட்ட முயன்றுள்ளனர். அங்கும் முயற்சி கைகூடாததால் அவர்கள் தப்பி ஓடினர் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவங்கள் தொடர்பில் சுன்னாகம் பொலிஸாருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது. நேற்றுமுற்பகல் சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். தடயவியல் பிரிவு பொலிஸாரும் சம்பவ இடங்களை ஆராய்ந்தனர்.

இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை என்றும் விசாரணைகள் நடத்தப்படுகின்றன என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ற-4)

## கட்டுப்பாட்டு விலைகள் வவுனியாவில் இல்லை!

### பொதுமக்கள் குற்றச்சாட்டு

வவுனியா, டிசெ.13
வவுனியா மாவட்டத்தில் உள்ள வர்த்த நிலையங்களில் அத்தியாவசியப் பொருள்கள் கட்டுப்பாட்டு விலையில் விற்பனை செய்யப்படுவதில்லை. ஒவ்வொரு வர்த்தக நிலையங்களில் ஒவ்வொரு விலைகளில் அவை விற்கப்படுகின்றன.

இவ்வாறு பொதுமக்கள் குற்றஞ்சாட்டினர்.

பண்டிகைக் கால கொள்வனவுக்காகச் சென்றபோது ஒவ்வொரு விற்பனை நிலையங்களிலும் ஒவ்வொரு விலைகளில் பொருள்கள் விற்கப்படுகின்றன. இது தொடர்பான விற்பனை நிலைய உரிமையாளர்களிடம் கேட்டபோது வவுனியாவில்மட்டுமல்லஅனைத்து இடங்களிலும் பண்டிகைக் காலத்தை முன்னிட்டு இவ்வாறே பொருள்கள் அதிக விலையில் விற்கப்படுகின்றன என்று கூறுகின்றனர். இதுகுறித்து பாவனையாளர் அதிகார சபையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.- என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்தனர். (ற-4)

## சிறுகுற்றங்கள் தொடர்பான முறைப்பாடுளே அதிகளவில்

யாழ்ப்பாணம், டிசெ.13
கிளிநொச்சி இராமநாதபுரம் பொலிஸ் பிரிவில் நவம்பர் மாதத்தில் சிறு குற்றங்கள் தொடர்பான முறைப்பாடுகளே அதிகளவில் பதிவு செய்யப்பட்டுள்ளன என்று இராமநாதபுரம் பொலிஸ் பிரிவு தெரிவித்தது.

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட இராமநாதபுரம் பொலிஸ் பிரிவில் நவம்பர் மாதம் சிறு குற்றங்கள் தொடர்பான 16 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

உடைமையில் கசிப்பு வைத்திருந்தமை தொடர்பாக 6 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. 69 ஆயிரத்து 250 மில்லி லீற்றர் கசிப்பு, ஒரு மோட்டார் சைக்கிள் என்பன கைப்பற்றப்பட்டன. 7 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர். 5 முதிரை குற்றிகளும் ஒரு மோட்டார் சைக்கிளும் மரம் தொடர்பான வழக்கில் கைப்பற்றப்பட்டன.

போக்குவரத்து பிரிவில் 4 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-6)

## நடைபாதை வியாபாரிகளுக்கு அங்காடி

### நடவடிக்கை எடுக்கிறது யாழ்.மாநகர சபை

யாழ்ப்பாணம்,டிசெ.13
யாழ். நகரில் நடைபாதை வியாபாரிகள் வியாபாரத்தில் ஈடுபடுவதற்காக 13 மில்லியன் ரூபா செலவில் அங்காடி விற்பனை நிலையம் ஒன்று விரைவில் அமைக்கப்படவுள்ளது. மத்திய பஸ் தரிப்பு நிலையத்துக்கு அருகில் உள்ள மாநகராட்சி மன்ற வளாகத்தில் அங்காடியை அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வாறு மாநகர ஆணையாளர் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது-
இந்த அங்காடி விற்பனை நிலையத்தில் நகரில் உள்ள நடைபாதை வியாபாரிகள் மட்டுமே வியாபாரம் செய்வதற்கு அனுமதிக்கப்படுவர். நகரில் முனீஸ்வரன் வீதி மற்றும் [illegible] [illegible] இந்த அங்காடியில் பொருள்களை விற்பனை செய்வதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும்.

அங்காடி வியாபார நிலையம் அமைத்த பின்னர் முனீஸ்வரன் வீதியில் உள்ள நடைபாதைக் கடைகளை அகற்றவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும்.

நடைபாதைக் கடைகள் அகற்[illegible]க்கப்[illegible]படும். நகரின் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும்முகமாக இந்த வீதி வாகனப் போக்குவரத்துக்கும் அனுமதிக்கப்படும்.- என்றார்.

நடைபாதை வியாபாரிகள் வீதியில் நடமாடி விற்பனையில் ஈடுபடுவதால் பொதுமக்களுக்கு இடையுறு ஏற்படுகின்றது என்று பல தரப்பினராலும் சுட்டிக்காட்டப்பட்ட நிலையில் தற்போது அங்காடி அமைப்பதற்கு யாழ். மாநகர சபை நடவடிக்கை எடுத்துள்ளது. (ற-4,17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களைக் கண்டித்து பிரிட்டனில் நேற்றுமுன்தினம் கவனவீர்ப்பு நடத்தப்பட்டது. பன்னாட்டு மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட கவனவீர்ப்பு டவுனிங் வீதியில் பி.ப. 1மணி தொடக்கம் பி.ப. 4 மணிவரை நடத்தப்பட்டது. நாடு கடந்த தமிழீழ அரசின் மக்கள் தொடர்பாடல் அமைச்சால் நடத்தப்பட்ட இந்தக் கவனவீர்ப்பில் அந்த அரசின் நாடாளுமன்ற உறுப்பினர்களும், செயற்பாட்டாளர்களும் கலந்து கொண்டனர். (ற-4)

# வடக்கின் வளங்களைத் தெற்கு கவர்வதைத் தடுக்க வேண்டும்

## வடக்கு முதலமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 13

தெற்கில் இருந்து வந்து எமது வளங்களைக் கவர்ந்து செல்வதை நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இது உள்ளிட்ட பல முன்னேற்பாட்டு செயற்பாடுகளை உடன் நடைமுறைப்படுத்தினால் மட்டுமே எமது நாடு மனித உரிமைகள் மீது கரிசனையுள்ளது என்று கணிக்கப்படலாம்.

இவ்வாறு வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

பன்னாட்டு மனித உரிமைகள் தினம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. அதில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு வடக்கு முதலமைச்சர் உரையாற்றினார்.

அவர் தெரிவித்ததாவது:

பௌத்த இன மக்கள் எவருமே வாழாத பகுதிகளிலும், இராணுவ முகாம்கள் அற்ற பகுதிகளிலும் இராணுவத்தினரின் உதவியுடன் புதிய பௌத்த விகாரைகள் அமைக்கப்படுவதை நிறுத்த வேண்டும். வடக்கு, கிழக்கில் இராணுவத்தால் கையகப்படுத்தப்பட்ட மக்களின் காணிகள் மீள ஒப்படைக்கப்பட வேண்டும்.

எதுவித குற்றச்சாட்டுக்களும் இன்றி சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்து நீண்டகாலம் தடுப்பில் வைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும். போர்க் குற்ற விசாரணை பன்னாட்டு உள்ளீடல்களுடன் ஆரம்பிக்கப்பட உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இறுதிப் போரின்போது சரணடைந்த போராளிகள் மற்றும் போர்க் கைதிகளை விடுவிக்க வேண்டும். வீடுகளை இழந்த மக்களுக்கு புதிய வீடுகளை அமைத்துக் கொடுக்க வேண்டும். மீன்பிடி முக்கியத்துவம் வாய்ந்த கேந்திர நிலையங்களை உடனடியாக விடுவித்து மீன்பிடித் தொழிலை ஊக்குவிக்க வேண்டும்.

இவ்வாறான முன்னேற்பாட்டுச் செயற்பாடுகளை உடனே நடைமுறைப்படுத்தினாலே எமது நாடுமனித உரிமைகள் மீது கரிசனையுள்ள நாடு என்று கணிக்கப்படலாம்.

தமிழ்மக்கள்மீதான தொடர்ச்சியான ஒடுக்கு முறை, மொழிப் பயன்பாட்டில் இரண்டாம் தர நபர்களாக்கல், கல்வியில் ஓரங்கட்டுதல், அரச நியமனங்களில் பாகுபாடு எனத் திட்டமிட்டு முன்னெடுக்கப்பட்ட பல்வேறு பக்கச்சார்பான நடவடிக்கைகளுக்கு எதிராகவே இளைஞர்கள் வீறு கொண்டெழுந்தனர். அந்த எதிர்ப்பு ஆயுத கலாசாரமாக விரிவடைந்து அநியாய உயிரிழப்புக்களுக்கும் சொத்து அழிவுகளுக்கும் காரணிகளாக அமைந்தது.

அதனால் ஏற்பட்ட நீண்டகால போரின் பெறு பேறாக இலங்கைத்தமிழ்மக்களின் பிரச்சினை தற்போது பன்னாடுகளால் கையாளப்படுகின்ற ஒரு விடயமாக மாற்றப்பட்டுள்ளது.

புதிய அரசியல் யாப்பு அங்கீகாரம் தொடர்பில் பேசப்படுகின்ற புதிய புதிய விடயங்களும் அமைச்சர்கள் சிலரின் கருத்துக்களும் தமிழ் மக்களின் எதிர் பார்ப்புக்களைக் கேள்விக் குறியானதாக மாற்றிவிடுமோ என எண்ணத் தோன்றுகின்றது.

குறிப்பிட்ட ஒரு தொகுதி காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளன. இன்னும் விடுவிக்கப்பட வேண்டிய காணிகள்பலவிடுவிக்கப்படாதுள்ளன. 67 ஆயிரம் ஏக்கர் காணிகளில் சுமார் 3 ஆயிரத்து 500 ஏக்கர்களே விடுவிக்கப்பட் டன.மீன்பிடி கேந்திர ஸ்தானங்களை தம் வசமே படையினர் வைத்திருக்கின்றனர். புதிய புதியபௌத்தமதக்கோவில்கள் சட்டத்துக்கு மாறாக வடமாகாணத்தில் உருவாக்கப்படுகின்றன. அவற்றை நிறுத்துமாறுநாம்கோரிக்கை விடுகின்ற போது எம்மை அடிப்படை வாதிகள் எனக் கூறுகின்றனர். இந்தச்செயற்பாடுகள் ஐயங்களைத் தோற்றுவிக்கின்றன.

அனைத்து மக்களுக்கும் கிடைக்கவேண்டிய உரிமைகளை அவர்களுக்கு வழங்க வேண்டும். இந்த அரியசந்தர்ப்பத்தைப்பயன்படுத்தி ஒரு நிரந்தர அரசியல் தீர்வுக்கு முன் வர வேண்டும் -என்றார். (ற-10)

# உப அஞ்சல் அலுவலகத்தை சீரமைக்குமாறு கோரிக்கை

பளை, டிசெ.13

கடந்த 16 ஆண்டுகளாக அழிவடைந்த நிலையில் உள்ள முகமாலை உப அஞ்சல் அலுவலகத்தைச் சீரமைத்துத் தர வேண்டும் என்று அந்தப் பகுதியில் மீள்குடியமர்ந்துள்ள மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முகமாலைச் சந்தியில் உள்ள உப அஞ்சல் அலுவலகக் கட்டடம் 2000ஆம் ஆண்டு போரால் அழிவுற்றது.

முகமாலை வடக்கு, தெற்கு, இந்திராபுரம் வேம்பொடுகேணி, இத்தாவில் மக்கள் இந்த உப அஞ்சல் அலுவலகத்தைத் தமது தேவைக்குப் பயன்படுத்தினர்.

வேம்பொடுகேணி மற்றும் முகமாலை வடக்குப் பகுதியில் நூற்றுக்கு மேற்பட்ட குடும்பங்கள் நான்கு வருடங்களுக்கு முன்னர் மீள் குடியமர்ந்தன. தற்போது முகமாலை தெற்கு, இந்திராபுரம் மக்கள் மீளக்குடியமர்கின்றனர். அவர் தமது தேவைக்காக 3 கிலோ மீற்றர் தூரத்துக்கு அப்பாலுள்ள எழுதுமட்டுவாழ் உப அஞ்சல் அலுவலகம் மற்றும் பளை அஞ்சல் அலுவலகத்துக்குச் செல்கின்றனர்.

இதனால் ஏற்படும் சிரமங்களைக் கருத்திற் கொண்டு அழிவடைந்த நிலையில் காணப்படும் உப அஞ்சல் அலுவலகத்தைச் சீரமைத்து இயங்க வைக்க வேண்டும் என்று பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்தனர். (ற-9)

# நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் ரூ.84 மில். ஒதுக்கீட்டில் வீடமைப்பு

## பிரதேச செயலாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.13

நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 30 கிராம அலுவலர் பிரிவுகளில் 84.2 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் வீடுகள் அமைக்கப்படுகின்றன. அதற்கான 103 பயனாளிகள் புள்ளியிடல் முறை மூலம் தெரிவு செய்யப்பட்டனர். தெரிவு அடைப்படையில் வீட்டுத்திருத்தம், மலசலகூட வசதி ஏற்படுத்தல் போன்றவையும் நடைமுறைப்படுத்தப்பட்டுள் ளன.

இவ்வாறு நல்லூர் பிரதேச செயலாளர் தெரிவித்தார்.

நடப்பாண்டில் மேற்கொள்ளப்பட்ட திட்டங்கள் தொடர்பான அறிக்கையிலேயே இந்த விவரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

அதில் உள்ளதாவது:

சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சு, தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகார அமைச்சு, கிராமிய பொருளாதர அலுவல்கள் அமைச்சு ஆகியன இந்தத் திட்டத்துக்கு நிதி ஒதுக்கியுள்ளன.

சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சால் வாழ்வாதாரச் செயற்றிட்டத்துக்கு 25 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது. 269 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு உதவிகள் வழங்கப்படுகின்றன.

குடிநீர் மற்றும் பொதுக் கிணறு திருத்துவற்கென 1.3891 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது. தெரிவு செய்யப்பட்ட 6 கிராம அலுவலர் பிரிவுகளில் அதற்குரிய செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

உட்கட்டமைப்பு மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்துக்கு 6.625 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டு 3 செயற்றிட்டங்களில் 2 செயற்றிட்டங்கள் நிறைவு செய்யப்பட்டன.

தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அமைச்சால் 23. 88 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டு கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 24 கிராம அலுவலர் பிரிவுகளிலும் 52 செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படு கின்றன.

இந்த அமைச்சால் பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தில் இருந்து 6.89 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டு தெரிவு செய்யப்பட்ட 29 கிராம அலுவலூர் பிரிவுகளிலும் 63 செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

பாரம்பரிய கைத்தொழிலை முன்னேற்றும் நோக்குடன் மண்பாண்டத்துடனான கைப்பணியை ஊக்கவிக்கும் பொருட்டு கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சால் ஒதுக்கப்பட்ட 0.52 மில்லியன் ரூபாவில் தெரிவு செய்யப்பட்ட கிராம அலுவலர் பிரிவில் 30 பயனாளிகளுக்கு மண்பாண்ட உற்பத்தி மற்றும் கைப்பணிப் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

நிறைவு பெறாத நிலையில் உள்ள செயற்றிட்டங்கள் யாவும் இந்த வருடம் டிசெம்பர் மாதம் 30 ஆம் திகதிக்குள் நிறைவுறுத்தப்படும் - என்றுள்ளது. (ற-10)

# 5 ஆயிரம் ஏக்கர் காணிகள் தற்போதும் படைகள் வசம்

யாழ்ப்பாணம், டிசெ. 13

யாழ். குடாநாட்டில் தற்போதும் 8 ஆயிரத்து 65 குடும்பங்களுக்குச் சொந்தமான 5 ஆயிரத்து 322 ஏக்கர் நிலம் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ளது. அவற்றை விடவும் 300 ஏக்கர் அரச காணிகளும் படையினரின் பிடியில் உள்ளன.

வலி.வடக்கிலேயே அதிக காணிகளைப் படைகள் கையகப்படுத்தியுள்ளன. தெல்லிப்பளைப் பிரதேச செயலாளர் பிரிவில் மட்டும் 7 ஆயிரத்து 921 குடும்பங்களின் 4 ஆயிரத்து 589.23 ஏக்கர் காணிகள் படைகளின் பிடியில் உள்ளன. அவற்றில் 798 குடும்பங்கள் தொடர்ந்தும் 29 முகாம்களில் தங்கியுள்ளனர். ஏனையோர் உறவினர், நண்பர்கள் வீடுகளில் தங்கியுள்ளனர்.

தெல்லிப்பளைப் பிரதேச செயலாளர் பிரிவுக்கு அடுத்த நிலையில் சாவகச்சேரி பிரதேச செயலாளர் பிரிவில் 18 குடும்பங்களுக்குச் சொந்தமான 81.75 ஏக்கர் காணிகள் படையினரின் பிடியில் உள்ளன.

சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவில் 42 குடும்பங்களின் 86.16 ஏக்கர் காணிகளும், நெடுந்தீவில் 19 குடும்பங்களின் 32.22 ஏக்கர் காணிகளும், வேலணையில் 77 குடும்பங்களின் 72.38 ஏக்கர் காணிகளும் படையினரால் கையகப்படுத்தப்பட்டுள்ளன.

ஊர்காவற்றுறையில் 38 குடும்பங்களின் 11.29 ஏக்கர் காணிகளும், காரைநகரில் 167 குடும்பங்களின் 83 ஏக்கர் காணிகளும், யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் பிரிவில் 5 குடும்பங்களின் 1.11 ஏக்கர் காணிகளும், நல்லூரில் 3 குடும்பங்களின் 4.89 ஏக்கர் காணிகளும், சங்கானைப் பிரதேச செயலாளர் பிரிவில் 13 குடும்பங்களின் 32.29 ஏக்கர் காணிகளும் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ளன.

உடுவிலில் 3 குடும்பங்களின் 1.37 ஏக்கர் காணிகளும், கோப்பாயில் 49 குடும்பங்களின் 9.58 ஏக்கர் காணிகளும், பருத்தித்துறையில் 68 குடும்பங்களின் 8.88 ஏக்கர் காணிகளும், மருதங்கேணி பிரதேச செயலாளர் பிரிவில் 73 குடும்பங்களின் 303 ஏக்கர் காணிகளும் படையினரால் கையகப்படுத்தப்பட்டுள்ளன.

இந்தத் தகவல்கள் யாழ். மாவட்ட செயலகத்தால் வெளியிடப்பட்டுள்ளன.

வலி. வடக்கில் படையினர் வசமுள்ள காணிகளில் முப்படைகளில் எவரிடம் எத்தனை ஏக்கர் காணிகள் உள்ளன என்ற விவரம் தெரியாதபோதிலும் ஏனைய 14 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் உள்ள நிலங்களில் 354 குடும்பங் களின் 317.54 ஏக்கர் நிலம் கடற்படையினரின் பிடியில் உள்ளது என்று கண்டறியப்பட்டுள்ளது என்று யாழ். மாவட்ட செயலகத் தகவல்கள் தெரிவித்தன. (ற-4.101)

# விடுவிக்கப்பட்ட வயல்களில் நெற்செய்கை வெற்றி

யாழ்ப்பாணம், டிசெ.13

வடமராட்சி கிழக்கில் விடுவிக்கப்பட்ட வயல் நிலங்களில் இந்த முறை மேற்கொள்ளப்பட்ட காலபோக நெற்செய்கை பெரும் வெற்றியளித்துள்ளது. வயல்களில் பயிரிடப்பட்ட நெற்பயிர்கள் மிகவும் நல்ல நிலையில் காணப்படுகின்றன.

போக்கறுப்பு பகுதியில் அறுநூறு ஏக்கர் நிலப்பரப்பில் இந்தமுறை நெற் செய்கையில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர் என்று வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகம் தெரிவித்தது.

விடுவிக்கப்பட்ட இந்த வயல் நிலங்கள் அனைத்தும் பிரதேச செயலகத்தினால் துப்புரவு செய்யப்பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கே போவது?

## சம்பூரில் பரிதவிக்கும் மூன்று குடும்பங்கள்

சம்பூர், டிசெ 13

திருகோணமலை - சம்பூர் பிரதேசத்தில் அனல்மின் நிலைய எல்லைக்குள் வாழ்ந்து வரும் 3 குடும்பங்களை அந் தக் காணிகளில் இருந்து வெளியேறு அண்மையில் மூதூர் நீதிமன்றம் உத்தர விட்டது.

சம்பூர் அனல்மின் நிலையத்திற்கு நிலக்கரி கொண்டு செல்லும் 100 மீற்றர் ஓடுபாதையில் அவர்கள் வாழ்ந்து வருவதாகத் தெரிவித்து மூதூர் பிரதேச செயலகம் மூதூர் நீதிமன்றில் கணேசமூர்த்தி விஜயரஞ்சிதமலர், தியாகராசா தினேஸ்காந், வைரமுத்து அருமைத்துரை ஆகிய மூவருக்கும் எதிராக தாக்கல் செய்திருந்த வழக்கின் முடிவிலேயே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

மூதூர் நீதிமன்றத்தினால் 1979ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க அரச காணிகள் சட்டத்தின் கீழ் அரச காணியிலிருந்து வெளியேறாமை சம்பந்தமாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

தம்மை வெளியேறுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு ஒருவாரம் கடந்துள்ள நிலையில் தாம் போக்கிடம் இன்றி இருப்பதாகவும், தம்மை எந்தவொரு அரசியல் வாதியோ அல்லது அதிகாரிகளோ இதுவரை வந்து சந்திக்கவில்லை என்றும் குறித்த குடும்பத்தினர் தெரி வித்தனர். கணேசமூர்த்தி விஜயரஞ்சித மலர் என்பவர் தெரிவிக்கையில்;

2006-04-24ஆம் திகதி வன் செயல் காரணமாக இடம்பெயர்ந்து பல முகாம்களில் வாழ்ந்து வந்தோம். 2015-07-27ஆம் திகதி மீண்டும் எமது சொந்த மண்ணுக்கு மீள்குடியேறினோம். மீள்குடியேறி மூன்று மாதத்திற்குப் பிறகு மூதூர் பிரதேச செயலகத்தினால் அந்தக் காணியிலிருந்து வெளியேறுமாறு வாய்மூலம் தெரிவிக்கப்பட்டது.

ஆனாலும் இந்தக் காணிகளுக்கு சந்திரிகா அரசினால் 2006-03-21ஆம் திகதி சந்திரிகாவின் கையொப்பத்துடன் காணிப் பதிவாளர் கையொப்பமிட்டுக் காணி உறுதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளது.

எனவே, வழக்கின் மூலம் எமக்கு நல்லதோர் தீர்வு கிடைக்குமென எதிர்பார்த்தோம். இருந்தும் இந்தக் காணி அரசுக்குச் சொந்தமான காணியெனத் தெரிவித்து எங்களை வெளியேறுமாறு நீதிமன்றம் உத்தர விட்டது.

எனவே, நீதிமன்றத்தின் தீர்வுக்கு மதிப்பளிக்கவேண்டும். நாங்கள் இவ்விடத்தை விட்டுச்செல்ல வேண்டும் என எமக்குத் தெரிகின்றது. ஆனாலும் நாங்கள் எங்கே செல்வது? எமக்கு மூதூர் பிரதேச செயலகம் மாற்றுக் காணிகளையாவது தருமா என எதிர்பார்த்து மிகவும் வேதனையுடன் காலத்தைக் கழித்து வருகின்றோம்.

மீள்குடியேற்றப்பட்ட எமக்கு எவ்வித உதவிகளும் கிடைக்காத பட்சத்திலும் நாங்களே வீட்டுத்தோட்டங்கள் மூலம் எங்களின் ஜீவனோபாயத்தைத் தேடிக்கொண்டோம். இந்தக் காணிகளை விட்டுச் செல்வதை விட இங்கேயே இறப்பது நல்லது - என்றார்.


இதேபோல தியாகராசா தினேஸ்காந்தும் தனது கவலையை வெளிப்படுத்தினார். மூதூர் பிரதேச செயலகம் எமக்கு மாற்றுக் காணிகளையாவது தர வேண்டும். இல்லாவிட்டால் நாங்கள் நஞ் சருந்திச் சாவதைத் தவிர வேறு வழியில்லை என்று அவர் கூறுகிறார்.

மூதூர் பிரதேச செயலகத்தினால் தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்குக்கு எதிராளிகள் சார்பில் முன்னிலையாகிய சட்டத்தரணி கே.எஸ். ரட்ணவேலிடம் இது தொடர்பாகக் கேட்டபோது, இந்தத் தீர்ப்பு தொடர்பாகக் கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்யப் போவதாகத் தெரிவித்தார்.

(த-ய-45)

# ஒருமைப்பாட்டுக்கு பாதிப்பு ஏற்படாமல் சவால்கள் முறியடிப்பு

## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு



கொழும்பு, டிசெ 13

நாட்டின் ஒருமைப்பாட்டுக்குப் பாதிப்பேற்படாதவாறு நாடு முகங்கொடுத்துள்ள சவால்களை வெற்றி கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுமென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

கொழும்பின் புறநகர் பகுதியான அத்துருகிரிய ஹபரகட ஆர்ய நிகேதன பிக்குமாருக்கான பயிற்சி நிலையத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பிக்குமார் விடுதியைக் கையளிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனை குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

நாட்டின் ஒருமைப்பாட்டைப் பாதுகாக்கக்கூடிய அரசமைப்புடன், சமூக நியாயத்தை உறுதிப்படுத்துவதற்காக அர்ப்பணிப்புடன் அரசு செயற்படுகிறது; பல நாடுகளில் இலட்சக் கணக்கான இலங்கைக் குடிமக்கள் அகதிகளாக உள்ளனர். வடக்கிலுள்ள அகதி முகாம்களில் ஆயிரக்கணக்கானோர் வாழ்ந்து வருகின்றனர். அந்த மக்கள் மீண்டும் ஆயுதம் தூக்காதவாறு அனைவருக்குமான சமூக நியா யத்தை நிறைவேற்ற வேண்டும்.

நீண்ட காலமாக இடம்பெற்ற அபிவிருத்தி ஏற்றத்தாழ்வுகள் காரணமாக வடக்கு-கிழக்கு பகுதிகளில் வாழ்ந்து வரும் மக்கள் மிகவும் சிரமமான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

நாட்டிலுள்ள ஒன்பது மாகாணங்களுக்கும் 25 மாவட்டங்களுக்கும் நியாயமான அபிவிருத்திப் பயன்களை வழங்க வேண்டியது அரசின் பொறுப்பு. சமயப் பணியில் ஈடுபட்டுள்ள விகாரைகளைப் பலப்படுத்தும் அரச கொள்கைக்கமைய தற்போதய அரசு அர்ப் பணிப்புடன் செயற்படுகிறது-என்றார். (த)

# தீப்பற்றி எரிந்தது ஓட்டோ



திருமலை, டிசெ 13

அநுராதபுரம் - ஹொரவ பொத்தானை நகரில் நிறுத்தி வைக்கப்பட்ட ஓட்டோ ஒன்று நேற்றுப் பிற்பகல் 2.30மணியளவில் தீப்பற்றி முற்றாக எரிந்து நாசமானது.

அநுராதபுரத்திலிருந்து கோமரங்கடவெல பிரதேசத்திற்கு உறவினர்களின் வீடுகளுக்குச் செல்ல வருகை தந்த தபுத்தேகம பகுதியைச் சேர்ந்த பெண்ணொருவரின் ஓட்டோவே இவ்வாறு எரிந்துள்ளது.

பெற்றோல் கசிவு காரணமாகத் தீப்பற்றியிருக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. (த)

# இளம் பிக்குகளின் செயற்பாடுகளை விமர்சித்த மைத்திரி

கொழும்பு, டிசெ 13

நாட்டில் அண்மைக்காலமாக இடம்பெறும் சில இளம் பிக்குகளின் செயற்பாடுகளை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடுமையாக விமர்சித்துள்ளார்.

சில இளம் பிக்குமார்களின் செயற்பாடுகளால் பௌத்தர்கள் மிகவும் வருந்தத்தக்க நிலைக்கு முகம் கொடுத்துள்ளதாகவும், இது தொடர்பில் தான் மிகவும் கவலையடைவதாகவும் ஜனாதிபதி கூறியுள்ளார்.

பிக்குமாருக்கான பயிற்சி நிலையத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பிக்குமார் விடுதியைக் கையளிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

பெரும்பாலான சந்தர்ப்பங்களில், ஊடகங்கள், இணையத்தளங்கள் ஊடாக வெளியாகும் சில விடயங்கள் தொடர்பில் பௌத்த மதத்தவன் என்ற வகையில் மிகவும் கவலையடைகின்றேன். நாட்டில் அண்மைக் காலமாக இடம்பெறும் சில இளம் பிக்குகளின் செயற்பாடுகளால் பௌத்தர்கள் மிகவும் வருந்தத்தக்க நிலைக்கு முகங்கொடுத்துள்ளார்கள்.

இது தொடர்பில் பல இளம் பிக்குகளுடன் கலந்துரையாடியுள்ளேன். சில சம்பவங்கள் எமது நாட்டுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டதாக இருந்தால் பரவாயில்லை. எனினும் அந்தச் சம்பவங்களை நாட்டுக்கும் உலகத்துக்கும் மூடிமறைக்க முடியாது. எந்தவொரு சம்பவத்தையும் மறைக்க இயலாது. இணையம் மூலமாக அது உலகலாவிய ரீதியில் பரவும்.

பல்வேறு இளம் பிக்குகளின் வெவ்வேறு குழப்பகரமான செயற்பாடுகளை, இந்த உலகம் ஒட்டுமொத்த பௌத்த பிக்குகளின் செயற்பாடுகளாகவே நோக்குகின்றது. ஏனைய மதத்தவர்கள் பிக்குகள் என்றாலே இவ்வாறுதான் செயற்படுவார்கள் என்றே எண்ணுவார்கள். இதனால் பௌத்தர்கள் என்ற வகையில் நாம் சவாலுக்கு முகம்கொடுக்க வேண்டி ஏற்படும் என்று ஜனாதிபதி கூறினார். (த)

# மிகப் பெரிய நத்தார் மரம் கட்டுமானம் மீள ஆரம்பம்

கொழும்பு, டிசெ 13

உலகின் மிகப் பெரிய கிறிஸ்மஸ் மரம் நிர்மாணிக்கும் வேலைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை இடையே நடைபெற்ற சந்திப்பை அடுத்தே இந்த வேலைகள் மீண்டும் ஆரம்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

காலி முகத்திடலில் உலகின் மிகப் பெரிய நத்தார் மரத்தை நிர்மாணிக்கும் பணிகளை உடனடியாக நிறுத்துமாறு துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சர் அர்ஜுன ரணதுங்க, ஏற்பாட்டுக் குழுவுக்குத் தெரிவித்திருந்தார்.

கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையின் அறிவுறுத்தலுக்கு மதிப்பளித்தே கடந்த 7ஆம் திகதி ஊடகவி யலாளர் சந்திப்பின்போது இந்த நிர்மாணப் பணிகளை நிறுத்துவதாக அறிவித்திருந்தமை குறிப்பிடத் தக்கது. (த)

# ஏறாவூர் வாவி பெருக்கெடுப்பு

## இரவு வேளையில் மக்கள் அச்சம்



மட்டக்களப்பு, டிச.13

மட்டக்களப்பு - ஏறாவூர் வாவி திடீரெனப் பெருக்கெடுத்ததால் ஏறாவூர் மக்களும் மீனவர்களும் அச்சமடைந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு வேளை பிரதேச செயலகத்தை அண்டியுள்ள பிரதேசங்களில் நீர் உட்புகுந்ததால் வாவிக் கரையோரத்தில் வசிக்கும் மக்கள் அச்சமடைந்தனர்.

வங்காளக் கடலோடு மட்டக்களப்பு முகத்துவாரம் பகுதியில் இணைந்ததாக ஏறாவூர் வாவி காணப்படுகின்றது. கடலில் ஏற்பட்ட தளம்பலே வாவிநீர் பெருக்கெடுத்தமைக்குக் காரணம் என வானிலை அவதான நிலைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஞாயிறு நள்ளிரவு ஏறாவூர், ஆறுமுகத்தான்குடியிருப்பு, பங்குடாவெளி, நரிப்புல் தோட்டம், விளாவெட்டுவான் மற்றும் வவுணதீவு போன்ற வாவிக் கரையோரங்களில் வாவிநீர் உட்புகத் தொடங்கியிருந்ததாக மக்கள் தெரிவித்தனர்.

இது குறித்து நிலைமையை உன்னிப்பாக அவதானித்து வருவதாக பொலிஸாரும் அதிகாரிகளும் தெரிவித்தனர்.

இதேவேளை, ஞாயிறு இரவும் திங்கள் அதிகாலையும் ஏறாவூர் புன்னைக்குடா, களுவன்கேணி மற்றும் சவுக்கடி போன்ற கடற்கரையோரங்களின் கடல்நீர் மட்டம் வழமையை விட சில மீற்றர்கள் தூரம் கரையை நோக்கி வந்திருந்ததாக கரையோர மற்றும் ஆழ் கடல் மீனவர்கள் தெரிவித்தனர்.

(த-ய-46)

# அரசின் தீர்வையும் புறக்கணித்த மாகம்புர துறைமுக ஊழியர்கள்

கொழும்பு, டிசெ 13

அம்பாந்தோட்டை மாகம்புர துறைமுக ஊழியர்கள் தொடர்பில் அரசு முன்வைத்துள்ள புதிய தீர்வையும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ள ஊழியர்கள் புறக்கணித்துள்ளனர்.

துறைமுக ஊழியர்களின் போராட்டம் நேற்றுடன் 6 ஆவது நாளாகத் தொடர்ந்தது. தமது கோரிக்கை நிறைவேற்றப்படும் வரை போராட்டம் தொடரும் எனத் துறைமுக ஊழியர்கள் அரசுக்கு அறிவித்துள்ளனர்.

தற்பொழுது துறைமுகத்தில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ள சகல ஊழியர்களையும் அல்லாது, அரைவாசிப் பேரை துறைமுக நிரந்த ஊழியர்களாக இணைத் துக் கொள்வதற்கும், ஏனையவர்களைச் சீன நிறுவனத்தில் இணைத்துக்கொள்வதற்கும் அரசு நடவடிக்கை எடுக்கவுள்ளதாக அறிவித்திருந்தது.

இருப்பினும், அரசின் இந்தத் தீர்வை துறைமுக ஊழியர்கள் புறக்கணித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகிந்த அரசில் முக்கிய பதவி வகித்தோருக்கு எதிராக வழக்கு

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச ஆட்சிக் காலத்தில் முக்கிய பதவி களை வகித்த 12 பேருக்கு எதிராக வழக்கு தொடரப்படவுள்ளது.

எதிர்வரும் ஜனவரி மாதம் இவர்களுக்கு எதிராக வழக் குத் தொடரப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மகிந்த ராஜபக்ச ஆட்சிக் காலத்தில் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர் கள் மற்றும் வேறு முக்கிய பதவிகளை வகித்து வந்த 12 பேருக்கு எதிரான குற்றச் சாட்டுக்கள் தொடர்பான விசாரணைகள் தற்போது பூர்த்தியாகியுள்ளன.

இந்த 12 பேரில் நாட்டின் அதி உயர் பதவியை வகித்த நிர்வாக அதிகாரி ஒருவரும் உள்ளடங்குவதாக அமைச் சர் லக்ஸ்மன் கிரியல்ல தெரி வித்துள்ளார். குறித்த நப ருக்கு எதிராக குற்றப் புல னாய்வுப் பிரிவு, லஞ்ச மற் றும் ஊழல் மோசடி தவிர்ப்பு ஆணைக் குழு, பயங்கர வாதத் தடைப் பிரிவு ஆகிய தரப்புக்களினால் விசாரணை நடத்தப்பட்டுள்ளது.

ஆகவே வழக்குத் தொடர்வ தற்குத் தேவையான சட்டமா அதிபர் திணைக்களத்தின் பரிந்துரைகள் விசாரணை நடத்திய தரப்புக்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதா கத் தெரிவிக்கப்படுகின்றது. (தி)

## சொகுசு வீட்டில் வைத்தியரும் 7 பெண்களும் கைது

பெலவத்தையிலுள்ள சொகுசு வீடொன்றில், ஸ்பா நிலையம் என்ற போர்வை யில் பாலியல் தொழில் நடத்திய குற்றச்சாட்டில், ஏழு பெண்களையும் ஆண் வைத்தியரொருவரையும் நுகேகொடைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர். மாத் தறை, காலி, பலாங்கொடை, கம்பஹா மற்றும் மஹரக மையைச் சேர்ந்த 18 வயதுக் கும் 28 வயதுக் கும் இடைப் பட்ட பெண்களே கைது செய் யப்பட்டுள்ளனர் எனப் பொலி ஸார் தெரிவித்தனர். (த)

# கைது செய்வோரை துன்புறுத்தினால் கடும் நடவடிக்கை

### பொலிஸ்மா அதிபர் பூஜித் பொலிஸாருக்கு எச்சரிக்கை



கொழும்பு, டிசெ 13

சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்படும் எவரொருவரையும் துன்புறுத்தவோ, மிரட்டவோ பொலிஸாருக்கு அதிகாரமில்லை எனவும், அவ்வாறு செய்பவர்கள் பற்றிய முறைப்பாடுகள் கிடைத்தால் அவர்களுக்கு எதிராக கடுமையான ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர எச்சரிக்கை விடுத்துள்ளார்.

நாடெங்குமுள்ள 472 பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள், 42 சிரேஷ்ட பிராந்திய பொலிஸ் அத்தியட்சகர்கள் ஆகியோருடன் பொலிஸ் தலைமையகத்தில் நடத்திய கூட்டத்திலேயே பொலிஸ்மா அதிபர் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

நேர்மையான விசாரணைகள் எவ்வாறு அமையவேண்டும் என்பது தொடர்பில் கடந்த மாதம் 29ஆம் திகமுதல் ஐந்து கருத்தரங்குகள் பொலிஸ் தலைமை யகத்தால் நடத்தப்பட்டதன் பின் நடத்தப்பட்ட கூட்டத்திலேயே பொலிஸ்மா அதி பர் இந்த அறிவுரையை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)

# ஊடகவியலாளர்கள் நேற்று அம்பாறையில் போராட்டம்

### அம்பாந்தோட்டை தாக்குதலுக்கு எதிராக



எருவில், டிசெ 13

அம்பாந்தோட்டையில் ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டதைக் கண் டித்து நேற்று அம்பா றையில் ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

அம்பாந்தோட்டை மாகம் புர மகிந்த ராஜபக்ச துறைமுக ஊழியர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட் டிருந்தவேளை அத னைப் பதிவு செய்யச் சென்ற ஊடகவிய லாளர்கள் அங்குள்ள கடற்படை தளபதியி னால் தாக்கப்பட்டமை யைக் கண்டித்து ஊடக அமைப்புகளால் இந்த ஆர்ப்பாட்டப் பேரணி ஏற்பாடு செய்யப்பட்டி ருந்தது.

அம்பாறை மாவட்டத் தைப் பிரதிபலிக்கும் பல ஊடக அமைப்புக் களுடன், கிழக்குமாகாண தொழில்சார் ஊடக வியலாளர் சங்கம், அம்பாறை மாவட்ட பௌத்தமத துறவிகள், அகில இலங்கை பொது ஊழியர் சங்கம், அகில இலங்கை மக்கள் ஜன நாயகக்கட்சியினர் உட் படபலரும்கலந்துகொண் டனர். (த-ய-47)

# வெளிநாட்டுப் பயணிகளுக்கு தனியான ஓட்டோ சேவைகள்

கொழும்பு, டிசெ 13


வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணி களுக்காக தனியாக முச்சக்கர வண்டிச் சேவை ஒன்று ஆரம்பிக் கப்படவுள்ளதாக அமைச்சர் பைஸர் முஸ்தப்பா தெரிவித்தார்.

முச்சக்கர வண்டி உரிமையாளர் கள் சங்கத்துக்கும் அமைச்சர் பைஸர் முஸ்தப்பாவுக்கும் இடை யில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது. இந்தக் கலந்துரையாடலின்போது இந்த விடயம் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணி களின் போக்குவரத்துச் சேவைக் காக முச்சக்கரவண்டி மற்றும் சாரதிகள் பதிவு செய்யப்படுவ தாகவும், அவர்களுக்கு விசேட பயிற்சி ஒன்று வழங்கவுள்ள தாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

சாரதிகளை அடையாளப்படுத்திக் கொள்வதற்காகச் சீருடை வழங்கப்படவுள்ளதோடு, ஆங்கில மொழி தொடர்பில் பயிற்சி ஒன்றை வழங்குவதற்கும் நட வடிக்கை மேற்கொள்ளப் படவுள்ளாக அமைச்சர் கூறினார்.

அத்துடன் வெளிநாட்டுச் சுற்று லாப் பயணிகளின் போக்குவரத்து சேவைக்காக பதிவு செய்யப்பட்ட முச்சக்கரவண்டி உரிமையாளர் களில் விருப்பமானவர்கள் சிறிய [illegible] ஒன்றைக் கொள்வனவு செய்வ தற்கு அரசு உதவி வழங்க முடியும் எனவும் அவர் குறிப்பிட்டார். (த)



# திருமண மண்டபமாக சூரியவெவ மைதானம்

கொழும்பு, டிசெ 13

கடந்த அரசால் நிர்மாணிக்கப்பட்ட சூரியவெவ சர்வதேச கிரிக்கெட் மைதானம் திருமண வைபவங் களுக் காகப் பயன்படுத்தப்படவுள்ளது.

மகிந்த அரசால் 4200 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்ட சூரிய வெவ சர்வதேச கிரிக்கெட் மைதா னத்தை பராமரிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படு கின்றது.

இதனால் திருமண வைபவங்கள் நடத்துவதற்காக அந்த மைதானம் வாடகைக்கு வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட வீடமைப்பு அமைச்சர் சஜித் பிரேம தாஸ,

4200 மில்லியன் ரூபா எனது அமைச்சுக்குக் கிடைத்திருந்தால் எத்தனை கிராமங்களை அமைத்தி ருக்கலாம்? கிராமப் புறம் மற்றும் நகர் புறங்களில் வசிக்கும் ஏழை மக் களுக்கு எவ்வளவு நிவாரணம் வழங்கியிருக்க முடியும்? அது மாத் திரமின்றி நிரந்தர கடன்காரர்க ளாக்கி விட்டு மத்தள சர்வதேச விமான நிலையத்தை நிர்மாணித்தார்கள்.

இவை அனைத்தும் தோல்வித் திட் டங்களாகும். தற்போது இந்த சூரியவெவ சர்வதேச மைதானத்தை நடத்திச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே வாடகை அடிப்படையில் குறித்த மைதானம் திருமண வைபவங்கள் நடத்து வதற்காக வழங்கப்படவுள்ளது- என்றார்.

இலங்கையை ஆசியாவின் ஆச்சரி யமாக்கும் மகிந்த சிந்தனையின் கீழ் இந்த மைதானம் அமைக்கப் பட்டிருந்தது. இதற்கு "மகிந்த ராஜ பக்ச சர்வதேச கிரிக்கெட் மைதானம்" எனப் பெயர் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)

# பிரிக்கப்படாத ஒரே நாட்டினுள் ஒரு தீர்வு தேவை

### கிழக்கு விவசாய அமைச்சர் துரைராஜசிங்கம் வலியுறுத்தல்



செங்கலடி, டிச.13

இனப்பிரச்சினை நிரந்தர தீர்வு விடயத்தில் சம ஷ்டியாகவோ ஒற்றையாட்சி யாகவோ இருக் கத் தேவையில் லை. பிரிக்கப்ப டாத ஒரே நாட் டுக்குள் ஒரு தீர்வு என்ற சொல் அரசமைப்புச் சட்டத்தில் இருக்க வேண்டும் என இலங்கை தமிழசுக்கட்சியின் பொதுச் செயலாளரும் கிழக்கு மாகாண விவசாய அமைச்சருமான கி.துரைராஜசிங்கம் தெரிவித்தார்,

மறைந்த தமிழக முதல்வர் செல்வி ஜெய லலிதாவுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வு தமிழரசுக் கட்சி மண்முனை வடக்கு கிளை யின் ஏற்பாட்டில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை கல்லடி துளசி மண்டபத்தில் நடை பெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது:

சமஷ்டியைக் கைவிட்டுவிட்டேம் எனச் சிலர் கூறுகிறார்கள். ஒற்றையாட்சிக்குள் கூடுதலான அதிகாரம் பெறப் போகின்றோம் என மேலும் சிலர் கூறுகிறார்கள்.

அவ்வாறல்ல, நாங்கள் நிதானமாகச் செயற்பட்டுக்கொண்டிருகிறோம். இதை எமது உறுப்பினர்களுக்கும் மக்களுக்கும் தெளிவுபடுத்துவோம் - என்றார். (த-ய-47)

# மீன்பிடித்துறை அமைச்சருக்கு அழைப்பாணை

கொழும்பு, டிசெ 13

மீன்பிடித்துறை மற்றும் நீரியியல் வள அமைச்சர் மஹிந்த அமரவீரவை எதிர்வரும் ஜனவரி மாதம் 17ஆம் திகதி நீதிமன்றில் முன்னி லையாகுமாறு மேன் முறையீட்டு நீதிமன் றம் அறிவித்துள்ளது.

சட்டவிரோத உபகரணங் கள் மற்றும் வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபடுவதைத் தடை செய் யு மாறு கோரிப் புத்தளம் மாவட் மீனவர்கள் ரிட் மனு ஒன் றைத் தாக்கல் செய்துள் ளனர்.

இந்த மனுவைப் பரிசீலனை செய்த மேன்முறையீட்டு நீதிமன்றம் மீன்பிடித்துறை அமைச்சருக்கு அழைப் பாணை பிறப்பித்துள்ளது.

சட்டவிரோதமான முறை யில் லைலா, சுருக்கு வலை கள் மற்றும் டைனமைற் வெடிபொருள்கள் போன்ற வற்றைப் பயன்படுத்திச் சிலர் மீன்பிடியில் ஈடுபடு வதாகவும், இதனால் மீன் வளம் பாதிக்கப்படுவதுடன் தமது வாழ்வாதாரத்திற்குச் சவால் ஏற்பட்டுள்ளதா கவும் மீனவர்கள் குற்றம் சுமத்தி வருகின்றனர். (த)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



## அச்சமின்றி முறையிடலாம்

### வடக்கு பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 13
உங்கள் பிரதேசங்களில் ஏதாவது சமூக விரோதச் செயல்கள் இடம்பெறும் பட்சத்தில் எவ்வித அச்சமுமின்றி என்னுடைய அலுவலகத்தில் முறையிடலாம். பொலிஸ் உத்தியோகத்தர்களுடன் நீங்கள் சகோதர உறவுடன் பழக வேண்டும்.
இவ்வாறு வட மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் சஞ்சீவ தர்மரட்ன தெரிவித்தார்.
பொலிஸாரின் நடமாடும் சேவையின் இறுதிநாள் நிகழ்வு யாழ்.பொலிஸ் நிலைய கேட்போர் கூடத்தில் நேற்று முற்பகல் 9.30 மணியளவில் நடைபெற்றது. அதற்கு முதன்மை விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.
அவர் தெரிவித்ததாவது–
எனது அலுவலகம் 24 மணித்தியாலமும் இயங்குகின்றது. நீங்கள் எந்த நேரமும் முறைப்பாடுகளை மேற்கொள்ள முடியும். உங்களுக்கு பணிசெய்வதற்காக 24 மணித்தியாலமும் நாங்கள் இயங்கிக்கொண்டிருக் கின்றோம்.
நாட்டில் சமூகத்தில் இடம்பெறும் வன்செயல்கள் மற்றும் குற்றங்களைக் கட்டுப்படுத்த நாம் தொடர்ந்து நடவடிக்கைகளை எடுக்கின்றோம். வீதிப் போக்குவரத்து விதிமுறைகள் தொடர்பாகவும் நாம் எமது பணியை வழங்கி வருகின்றோம். எல்லாவற்றிற்கும் மேலாக நாம் எங்கள் பிரதேசங்களில் பரவி வரும் டெங்கு நோய்த் தாக்கங்களைக் கட்டுப்படுத்துவதற்கும் பணியாற்றுகின்றோம்.
யாழ்ப்பாணத்தில் கடமை செய்கின்ற பொலிஸ் உத்தியோகத்தர்களில் அநேகமானோர் தென்பகுதியைச் சேர்ந்தவர்கள். அவர்கள் தமது குடும்பங்கள், தங்கள் பிரதேசங்களை விட்டு இங்குள்ள மக்களுக்கு பணியாற்றுகின்றனர்.
நாங்கள் மக்களுக்கான சேவைகளை மகிழ்ச்சியுடன் வழங்கி வருகின்றோம். மக்களாகிய நீங்களும் இங்கு கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களை உங்களுடைய சகோதர, சகோதரிகளாக எண்ணி அவர்களுடன் பழக வேண்டும்.
நீங்கள் அனைவரும் ஒற்றுமையுடன் பழகுவீர்களாயின் இங்குள்ள குற்றச் செயல்கள் அனைத்தும் தூயமைப்படுதப்படும் என்று கருதுகின்றேன்.–என்றார்.
நிகழ்வில் யாழ்.பொலிஸ் நிலைய மூத்த பொலிஸ் அத்தியட்சகர், யாழ்ப்பான பிரதேச செயலர், பொலிஸ் அதிகாரிகள், கிராம அலுவலர்கள், யாழ்ப்பான பிரதேச மக்கள், மாணவர்கள் ஆகியோர் கலந்துகொண் டனர்.
(ற-4,8)

## அச்சத்தால் நிதியை குறைக்கிறது மத்தி

### வடக்கு விவசாய அமைச்சர் தெரிவிப்பு

அச்சுவேலி,டிசெ.13
போரால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்திக்கு கூடிய தொகை ஒதுக்கப்பட வேண்டும் எனக் கோருகின்றபோதும் அரசு திட்டமிட்டு குறைவான தொகையே ஒதுக்கீடு செய்கின்றது. கூடிய தொகை ஒதுக்கினால் இந்த மாகாணங்கள் மத்தியை விடவும் மேலோங்கி விடும் என்ற அச்சத்தாலேயே அரசு நிதி ஒதுக்கீடுகளை குறைத்துள்ளது.
இவ்வாறு தெரிவித்தார் வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன்.
வடக்கு மாகாணத்தில் உள்ள ஐந்து மாவட்டங்களையும் சேர்ந்த காளான் உற்பத்தியாளர்களுக்கான கருத்தரங்கு கோண்டாவில் சேவா லங்கா மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது–
கடந்த ஆண்டு எனது அமைச்சுக்கு 429 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது. நடப்பாண்டில் 240 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஏழுக்கு மேற்பட்ட திணைக்களங்களை உள்ளடக்கிய அமைச்சு இந்த நிதியை கொண்டு எதிர்பார்த்தளவு அபிவிருத்தி வேலைகளை நிறைவு செய்ய முடியாது. நிதி ஒதுக்கீட்டை குறைத்தாலும் தேவை அற்ற முட்டுக்கட்டைகள், தடங்கல்களை அரசு ஏற்படுத்தாது இருந்தால் எமது முயற்சியால் வடக்கு மாகாணத்தை முன்னுதாரணமான நிலையில் மேல் நிலைப் படுத்துவோம்.
காளான் இரசாயன கலப்பு மற்றும் நச்சுத்தன்மை இல்லாத இயற்கையான தாவர உணவு. அதை எமது நாளாந்த உணவில் சேர்த்துக் கொண்டால் நோய்த் தாக்கங்களில் இருந்து எம்மைப் பாதுகாக்கலாம். வடக்கு மாகாணத்தில் காளானுக்கான தேவை நாளாந்தம் அதிகரித்து வருகின்றது. நல்ல விலையும் காளானுக்குக் கிடைக்கிறது. குறைந்த முதலீட்டுடன் கூடிய வருமானத்தைப் பெறக்கூடிய தொழில் முயற்சியாக காளான் வளர்ப்பு உள்ளது.
புற்றுநோய், நீரிழிவு நோய் என்பவற்றில் யாழ்.மாவட்டம் முன்னிலையில் உள்ளது. எமது உணவில் பண்டைய பாரம்பரிய உணவுப் பழக்கத்தைக் கொண்டு வர வேண்டும். அம்மாச்சி உணவகங்கள் தற்போது நிறுவப்படுகின்றன.
வடக்கு மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களின் காளான் உற்பத்தியாளர்களையும் ஒரே இடத்தில் சந்தித்து அவர்களின் தேவைகளைக் கண்டறிவதில் மகிழ்ச்சி அடைகின்றேன். காளான் உற்பத்தியாளர்களுக்கான உதவிகள் 50 வீத மானியத்துக்கு மேல் வழங்க முடியாத நிலையில் உள்ளன. அதற்கு நிதிக் கொள்கை தடையாக உள்ளது.
காளான் பாவனை தொடர்பான வழிப்புணர்வு சமூகத்தில் ஏற்பட வேண்டும். அதற்கு ஏற்றவகையில் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் அனுசரணையுடன் பாடசாலை மாணவர் மத்தியில் காளான் பாவனை அதன் நன்மைகள் தொடர்பாக அறிமுகம் செய்வதோடு எதிர்காலத்தில் மாகாண மட்டத்தில் காளான் உணவு விழிப்புணர்வு வாரத்தையே ஏற்பாடு செய்யலாம்– என்றார்.
யாழ்.பல்கலைக்கழக விவசாய பீடபேராசிரியர் எஸ்.மிகுந்தன், வடக்கு மாகாண விவசாய பணிப்பாளர் எஸ்.சிவகுமார், வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் அ.பரஞ்சோதி, எஸ்.கஜதீபன், எஸ்.தவராசா, வடக்கு மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களினது பிரதி விவசாயப் பணிப்பாளர்கள், மத்திய வங்கி அதிகாரி எஸ். சிவகுமார் ஆகியோரும் கருத்துரை வழங்கினர்.
(ற-1)

## கிளி. கலாசார விழாவில் சிலருக்கே முன்னுரிமை

### பின்தங்கிய பகுதிகளில் வாழும் கலைஞர்கள் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், டிசெ. 13
கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெற்ற மாவட்ட கலாசார விழாவில் பின்தங்கிய பகுதிகளில் வாழும் கலைஞர்களின் படைப்புக்கள் மாவட்ட கலாசாரப் பேரவையால் புறக்கணிக்கப்பட்டது என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது.
கிளிநொச்சி மாவட்ட கலாசாரப் பேரவையின் ஏற்பாட்டில் கலாசார விழா கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. அதில் மாவட்டத்தில் உள்ள கலைஞர்களின் படைப்புகள் காட்சிப் படுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. குறிப்பிட்ட சிலரின் படைப்புக்கள் மாத்திரம் இரகசியமான முறையில் பெறப்பட்டு அவையே நிகழ்வில் காட்சிப்படுத் தப்பட்டன. பின்தங்கிய பகுதிகளில் உள்ள கலைஞர்களின்படைப்புக்கள் புறக்கணிக்கப்பட்டன– என்று பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர்.
எமக்கு இவ்வாறான முறைப்பாடுகள் எதுவும்கிடைக்கவில்லை. கலாசார நிகழ்வு தொடர்பாக கலைஞர்களின் படைப்புக்களை ஒப்படைக்குமாறு பத்திரிக்கைகளில் அறிவித்தல் கொடுக்கப்பட்டிருந்தது. பிரதேச செயலகங்களில் உள்ள கலாசார உத்தியோகத் தர்களிடம் ஒப்படைந்திருந்தால் கூட அவை நிகழ்வில் காட்சிபடுத்தப்பட்டிருக்கும். ஆக்கங்கள் இருப்பதாக பிரதேசசெயலகங்களில் கூட சம்பந்தப்பட்டவர்கள்தொடர்புகொள்ளவில்லை. கலைஞர்களை ஊக்குவிக்கவே இவ்வாறான நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்படுகின்றன– என்று கிளி நொச்சி மாவட்ட செயலாளர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.
(ற-4,34,6)

## கொழும்பு வைத்தியசாலையில் பொருள்கள் சிலவற்றுக்கு தடை

### கழிவு முகாமைத்துவத்தில் ஏற்படும் இடர்பாடுகளால்

யாழ்ப்பாணம், டிசெ.12
திண்மக் கழிவுகளை முகாமைத்துவம் செய்வதில் உள்ள இடர்பாடுகளை அடுத்து கொழும்பு தேசிய வைத்திய சாலை சில கட்டுப்பாடுகளை விதித்துள்ளது.
இந்தத் தீர்மானம் கடந்த நவம்பர் மாதம் முதல் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது என்று கொழும்பு தேசிய வைத்திய சாலையின் பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப் பட்டது.
அதில் உள்ளதாவது–
கொழும்பு தேசிய வைத்தியசாலையில் நாளொன்றுக்கு உருவாகும் சாதாரண திண்மக்கழிவுப் பொருள்களின் அளவு கிட்டத்தட்ட 5 ஆயிரம் கிலோவாகும். மருத்துவக்கழிவுப்பொருள்களின் அளவு கிட்டத்தட்ட ஆயிரம் கிலோவாகும். அவற்றை முகாமைத்துவம் செய்து வெளியேற்றுவது நடைமுறையில் மிகவும் கடினமான காரியமாகும்.
2016 நவம்பர் முதலாம்திகதி தொடக்கம் அரச கொள்கைகளுக்கிணங்க கொழும்பு மாநகர சபை மூலம் தரப்படுத்தப்படாத திண்மக் கழிவுப் பொருள்கள் பல்வகை கழிவுப் பொருள்களும் அகற்றப்பட மாட்டாது என அறிவிக்கப்பட்டது.
வைத்தியசாலையில் ஒன்று திரட்டப்படும் திண்மக்கழிவுப் பொருள் களின் அளவைக் குறைப்பதற்குரிய முக்கிய நடவடிக்கையாக பிளாஸ் ரிக், பொலித்தீன், இளநீர்கோம்பை, தேவையற்ற கடதாசி போன்றவற்றை வைத்தியசாலைக்குள்கொண்டு வருவது தடை செய்யப்பட்டுள்ளது.
குடிபானவகை அல்லது உணவு வகை வைத்தியசாலைக்குக் கொண்டுவரும் போது மீள்பாவனைக்கு உட்படுத்தக்கூடிய பாத்திரங்களில் மாத்திரம் கொண்டு வர வேண்டும்.– என்றுள்ளது.
(ற-10)

## குளவி கொட்டியதில் மாமியும், மருமகளும் வைத்தியசாலையில்

திருகோணமலை, டிசெ.13
திருகோணமலை, பம்புறுகஸ் வெவவில் மாமியும், மருமகளும் குளவிக் கொட்டுக்கு இலக்காகி வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டனர். வீட்டின் அருகே இருந்த மரமொன்றைத் தறித்த போதே அதிலிருந்த குளவிகள் தாக்குதல் நடத்தியுள்ளன.
வீட்டுக்கு அருகே இருந்த மரம் மின்கம்பத்தில் உராயும் அளவு வளர்ந்திருந்தது. அந்த மரத்தை தறித்தபோது கலைந்த குளவில்மரம்வெட்டுவதைப் பார்த்துக் கொண்டிருந்த மாமியின் மீதும், மருமகள் மீதும் சரமாரியாகக் கொட்டின என்று தெரிவிக்கப்பட்டது. (ற-45)

## அச்சுவேலி வாள் விவகாரம்; உரிய நீதிமன்ற விசாரணை

### யாழ். பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம் டிச 13
பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரால் வாகன திருத்துநர் மீது குற்றச்சாட்டப்பட்டுள்ளமை தொடர்பில் நீதிமன்றின் ஊடாக உரிய விசாரீணைகள் மேற்கொள்ளப்படும் என்று யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் சஞ்சீவ தர்மரட்ன தெரிவித்தார்.
யாழ்.பொலிஸ் நிலையத்தில் பொலிஸ் நடமாடும் சேவையின் இறுதிநாள் நிகழ்வு நேற்று முற்பகல் இடம்பெற்றது. அதில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரிடம் செய்தியாளர்கள் எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அச்சுவேலியில் கடந்த சில நாள்களுக்கு முன்னர் சட்டவிரோதமாக வாள் செய்து கொடுத்தவரை பொலிஸார் கைதுசெய்து விசாரணை மேற்கொண்டனர். தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் தன்னிடம் வாள் ஒன்று செய்யும்படி தெரிவித்தார் என்றும் அதன்படி செய்து கொடுத்தேன் என்றும் கைது செய்யப்பட்டவர் தெரிவித்தார் எனக் கூறப்பட்டுள்ளது. தொழில் நிறுவனத்தில் வாள்கள் மீட்கப்பட்ட சம்பவம் திட்டமிட்டே நடத்தப்பட்டது என்று தொழில் நிலையத்தினர் குற்றஞ்சாட்டியுள்ளனர்.
இந்தச் சம்வத்தில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் உடனடியாக இடமாற்றப்பட்டுள்ளார். [illegible] டுள்ளார். வாள்செய்து கொடுத்தவரை எதிர்வரும் 22 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.
இது தொடர்பில் பிரதிப் பொலிஸ்மா அதிபரிடம் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர்.
இந்தச் சம்பவம் தொடர்பில் நீதிமன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. பொலிஸ் உத்தியோகத்தர் மீதான குற்றச்சாட்டுத் தொடர்பில் நீதியான விசாரணைகள் முன்னெடுக்கப்படும். தற்போது விசாரணைகள் இடம்பெறுவதால் அது தொடர்பில் கருத்துக்கள் எதையும் கூறமுடியாது. இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் [illegible] நீதிமன்றம் ஊடாக உண்மைகள் வெளிக்கொண்டு வரப்படும்.– என்றார்.
(ற-4,8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகேந்திரனுக்கு எதிரான வழக்கை தீர்மானிக்கும் பொறுப்பு ரணிலிடம்

கொழும்பு, டிசெ. 13
பிணைமுறி விவகாரம் தொடர்பில் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கும் இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன மகேந்திரனுக்கும், பெர்பெச்சுவல் ட்ரெரி நிறுவனத்துக்கும் எதிராக சிவில் மற்றும் கிரிமினல் வழக்குகளைப் பதிவு செய்யலாம் என்ற சட்டமா அதிபரின் பரிந்துரை பிரதமரின் காரியாலயத்துக்கு அனுப்பப்பட்டிருப்பதாகவும் அது தொடர்பில் இறுதி முடிவை எடுக்கவேண்டிய பொறுப்பு பிரதமர் ரணிலின் கையிலேயே இருப்ப தாகவும் அரசின் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.
பிணைமுறி விவகாரம் தொடர்பில் வழங்கப்பட்ட கோப் கமிட்டியின் அறிக்கையும், அரச கணக்காய்வாளரின் அறிக்கையும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவால் சட்டமா அதிபரின் காரியாலயத்துக்கு சில நாள்களுக்கு முன் அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. அந்த அறிக்கை சட்டமா அதிபரின்பரிந்துரையுடன்மீண்டும் பிரதமருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. சட்டமா அதிபர் இது தொடர்பில் நியமித்திருந்த மூவ ரடங்கிய குழுவின் ஆலோசனையின்படியே இந்தப்பரிந்துரை வழங்கப்பட்டுள்ளது.
கடந்த 5ஆம் திகதி பிரதமரின் அலுவலகத்துக்குக்கையளிக்கப்பட்ட இந்த அறிக்கை பற்றிய இறுதித் தீர்மானம் பிரதமரிடமே தங்கியிருப்ப தாக அவரது அலுவலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (த)

# சீன இராணுவ உயர் குழுவினர் இலங்கையில்

## கல்வி மற்றும் ஆய்வுப் பணிக்காக



கொழும்பு, டிசெ 13
சீனப் படை உயர் அதிகாரிக்ளின் குழு வொன்று இலங்கைக்குப் பயணம் மேற் கொண்டுள்ளதாக இராணுவத் தலை மையகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.
சீனாவின் தேசிய பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த, படை அதிகாரிகளே கல்வி மற்றும் ஆய்வுப் பய ணமாக இலங்கைக்கு வந்துள்ளனர்.
மேஜர் ஜெனரல் வூ சுலி தலைமையிலான இந்தக் குழுவில், ஆறு மேஜர் ஜெனரல்கள் மற்றும் 40 மூத்த கேணல் நிலை அதிகாரிகள் என, மொத்தம் 46 படை உயர் அதிகாரிகள் இடம்பெற்றுள்ளனர்.
இவர்கள், இலங்கை இராணுவத்தின் மேற்குப் படைகளின் தலைமையகத்தின், தளபதி மேஜர் ஜெனரல் சுதந்த ரணசிங்கவைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.
இலங்கை இராணுவத்தின் புலனாய்வுப் படைப் பிரிவின் ரெஜிமெண்ட் தலைமை அதிகாரியாக மேஜர் ஜெனரல் சுதந்த ரணசிங்க அண்மையில் நியமிக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.(த)

# கேரளக் கஞ்சா வைத்திருந்தவர் மறியலில்

மூதூர், டிசெ 13
திருகோணமலை கந்தளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் அரைக்கிலோ கேரளா கஞ்சாவை வைத்திருந்த நபரொருவரை எதிர்வரும் 19 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கந்தளாய் நீதிமன்ற பதில் நீதிவான் சானிக்கா பெரேரா உத்தரவிட்டார்.
சந்தேகநபர் கேரளக் கஞ்சா பாவிப்பதாகவும், அதனை வைத்திருப்பதாகவும் கிடைத்த தகவலின்படி அவரின் வீட்டைச் சோதனை செய்த போது, வீட்டின்பின்புறத்தில்மரப்பொந்துக்குள் இருந்து கஞ்சா கைப்பற்றப்பட்டதாகப் பொலி ஸார் தெரிவித்தனர். (த-ய-40)

# மஹிந்த ஆட்சியில் வழங்கிய மோ. சைக்கிள்கள் சுவீகரிப்பு

கொழும்பு, டிசெ 13
முன்னைய அரசு உள்ளூராட்சிச் சபை அதிகாரிகளுக்கு இலகு தவணைக் கொடுப்பனவு முறையில் வழங்கிய 626 மோட்டார் சைக்கிள்களுக்கும் செலுத்தவேண்டிய தவணைப்பணம் ஒரு சதமேனும் கிடைக்காத நிலையில், அந்த மோட்டார் சைக்கிள்களைச் சுவீகரிக்கும் பொறுப்பு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகின்றது.
இந்த மோட்டார் சைக்கிள்களைப் பெற்றவர்கள் இதுவரை அவற்றை மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் பதியவில்லை எனவும், அவற்றுக்கு இலக்கத் தகடுகள், இறைவரி அனுமதிப்பத்திரம் மற்றும் காப்புறுதிச் சான்றிதழ் எதுவும் இல்லாமல் பாவித்து வருவதாகவும் தெரியவருகின்றது.
50 ஆயிரம் ரூபா விலையில் வழங்கப்பட்ட இந்த மோட்டார் சைக்கிள்களுக்குத் தவணை முறையில் பணம் செலுத்தவேண்டும் என்ற நிபந்தனை விதிக்கப்பட்டிருந்தது.
எனினும், இதுவரை ஒருவரும் அந்தப் பணத்தைச் செலுத்தவில்லை என மாகாண மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தெரிவித்துள்ளது.
எனவே, இந்த மோட்டார்சைக்கிள்களைக் கைப்பற்றி அமைச்சிடம் ஒப்படைக்குமாறு பொலிஸாருக்குப் பணிப்புரை வழங்கப்பட்டிருப்பதாக அமைச்சின் உயரதிகாரியொருவர் தெரிவித்தார். (த)



# வீடொன்றுடன் பஸ் மோதியதில் ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு, டிசெ 13
கொஸ்கம சாலாவ சந்தியில் நேற்றுப் பிற்பகல் வேகத்தை கட்டுப்படுத்த முடியாமல்போன பஸ் ஒன்று வீடொன்றில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.
அவிசாவளையில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த பஸ் ஒன்றே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது. இதன்போது வீட்டின் உரிமையாளர் உயிரிழந்துள்ளார்.
இந்தச் சம்பவத்தில் மேலும் மூவர் காயமடைந்துள்ளனர். (த)

# பிரேஸிலிருந்து சீனி இறக்குமதி நிறுத்தம்

கொழும்பு, டிசெ 13
பிரேஸிலிலிருந்து சீனியை இறக்குமதி செய்வதை முற்றாக நிறுத்தியுள்ளதாக இலங்கைச் சீனி இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.
அண்மைக் காலங்களில் பிரேஸிலிலிருந்து வந்த சீனிக்கொள்கலன்களுக்குள் பெருந்தொகையான கொக்கெய்ன் கடத்தப்பட்டிருப் பதால் இந்தச் சட்ட விரோத நடவடிக்கையை முறியடிக்கவே அந்த நாட்டிலிருந்து இனிமேல் சீனியை இறக்குமதி செய்வதில்லை எனத் தீர்மானித்திருப்பதாக அந்தச் சங்கத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.
இறக்குமதியை நிறுத்துவதற்கான தீர்மானம் எடுக்கப்படுவதற்கு முன்பு கொள்வனவு செய்யப்பட்ட 380 கொள்கலன் சீனி இம்மாத இறுதியில் அல்லது 2017 ஜனவரியில் இங்கு வந்து சேரும் எனவும், அந்தக் கொள்கலன்கள் அனைத்தும் பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவினரின் தீவிரப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (த)



# மட்டக்களப்புப் பிரதேசத்தில் விபத்துக்கள் அதிகரிப்பு

எருவில், டிச.13
மட்டக்களப்பு பொலிஸ் தலைமையகப் பகுதிகளில் கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு விபத்துச் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாக மட்டக்களப்பு பொலிஸ் தலைமையகப் போக்குவரத்துப் பொலிஸ் பொறுப்பதிகாரி ஆர்.எம்.எஸ். ஐ.ராஜபக்ச தெரிவித்தார்.
இந்த வருடம் விபத்துக்களின்போது மூவர் உயிரிழந்ததுடன் 30பேர் படுகாயங்களுக்குள்ளாகினர். மேலும் 51 பேர் சிறுகாயங்களுக்கு உள்ளாகியுள்ளனர். 14 வாகனங்கள் முழுமையாகச் சேதமடைந்துள்ளன.
கூடுதலான விபத்துகள் வாகனங்களை ஓட்டுபவர்களின் கவனவீனத்தால் இடம்பெறுகின்றன என்று அவர் கூறினார்.
விபத்துகள் அற்ற வீதிகளை அமைக்க அனைவரும் ஒன்றிணைவோம் என்னும் தலைப்பிலான வீதி போக்குவரத்து விழிப்புணர்வு நிகழ்ச்சி மட்டக்களப்பு நகரில் நேற்று முன்னெடுக்கப்பட்டது.
மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸ் நிலையத்தின் போக்குவரத்து பொலிஸ் பிரிவின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு ஓட்டோச் சாரதிகள் சங்கத்தின் ஒத்துழைப்புடன் இந்த நிகழ்வு நடைபெற்றது.
காந்தி பூங்காவில் இருந்து வீதிப் பாதுகாப்பின் அவசியத்தை வலியுறுத்தும் பதாகைகளை ஏந்தியவாறு சாரதிகள் ஊர்வலமாக சென்றனர்.
கோட்டைமுனைச் சந்தியில் திரையில் போக்குவரத்து விதிகள் தொடர்பான வீடியோக் காட்சிகளும் காண்பிக்கப்பட்டன. (த-ய)

# வர்தா புயலால் சென்னையில் சிக்கினர் 500 இலங்கையர்கள்

சென்னை, டிசெ 13
சென்னையைத் தாக்கிய வர்தா புயல் காரணமாக இலங்கையர்கள் சிலர் இந்தியாவில் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.
இலங்கையிலிருந்துசென்னை வரையான விமான சேவையை சிறிலங்கன் விமான சேவை நிறுவனம் நேற்று நிறுத்தியது.
இதனால் தம்பதிவ யாத்திரையை மேற்கொண்டு திரும்பிய இலங்கையர்கள் சுமார் 500 பேர் சென்னை விமான நிலையத்தில் சிக்குண்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது
விமான நிலையத்தை விட்டு வெளியே செல்லுமாறு அதிகாரிகள் தெரிவித்ததால் இலங்கையர்கள் மிகவும் அசௌகரியத்துக்கு உள்ளானதாகவும் கூறப்பட்டது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கோம் ஸ்ரோர் காட்சியறை கொழும்பில்

வீடுகள் மற்றும் வசிப்பிடங்களின் நேர்த்தியையும், கவர்ச்சியையும் சௌகரியமான முறையில் பேணி நவீன வீட்டு வசதி ஏற்பாடுகளைச் செய்துகொள்ளக் கூடியதான பொருள்களை நியாயமான விலைகளில் பெற்றுக்கொள்ளகூடிய 'கோம் ஸ்ரோர்' காட்சியறை கொழும்பில் திறந்துவைக்கப் பட்டுள்ளது.

அந்தவகையில் இல்லங்களுக்குக் கூடுதல் அழகைக் கொடுக்கும் சிறந்த வடிவமைப்பையுடைய சுவர் அலங்காரத் தாள்களை விநியோகிக்கும் ஒரு அற்புதமான காட்சியறையாக இது அமைந்துள்ளது.

கடந்த 10 ஆண்டுகளுக்க முன்பாக ஒரு குடும்ப வியாபாரமாக ஆரம்பிக்கப்பட்ட 'கோம் ஸ்ரோர்' நிறுவனமானது பிரதானமாக ஜேர்மனியில் இருந்து இறக்குமதி செய்யப்படுகின்ற சுவர் அலங்காரத் தாள்களை விநியோகித்து வந்துள்ளது.

இந்தப் புதிய ஆரம்பம் தொடர்பில் கருத்துரைத்துள்ள நிறுவனத்தின் பணிப்பாளர் சபை, எமது காட்சியறையில் கிடைக்கப் பெறுகின்ற சுவர் அலங்காரத் தாள்களுக்குப் புறம்பாக மிகச் சிறந்த சுவர் அலங்காரத் தாள்கள் சிலவற்றைக் கொண்ட எங்களிடமுள்ள 20 இற்கும் மேற்பட்ட வழிகாட்டல் அட்டவணைக் கையேடுகளை உபயோகித்து சுவர் அலங்காரத் தாள்களைத் தெரிவுசெய்து கொண்டு அவற்றைத் தமது தேவைகளுக்கேற்ப இறக்குமதி செய்துகொள்ள முடியும். இந்த வசதியை எமது வாடிக்கையாளர்களுக்கு வழங்கி வருகின்றோம்.

அத்துடன் வாடிக்கையாளர்கள் தமது விருப்பத்திற்குரிய வடிவமைப்பிற்கேற்ப அவற்றைப் பிரத்தியேகமாக வடிவமைத்தும் நவநாகரிக தோற்றம் கொண்ட ஏராளமான உற்பத்திகளைப் பெற்றுக்கொள்ள முடியும். அது மட்டுமல்லாது, ஜேர்மனியிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்ற மிகச் சிறந்த தரத்திலான வர்த்தகநாம அடையாளத்தின் கீழ் சுவர் அலங்காரத் தாள்களையும் இக்காட்சியறை கொண்டுள்ளது-என்றார்.

இவைதவிர ஒவ்வொரு வாரத்திலும் குறித்த தினமொன்றில் தெரிவு செய்யப்பட்ட உற்பத்திகளுக்கு ஊக்குவிப்புச் சலுகைகளையும் 'கோம் ஸ்ரோர்' அறிமுகப் படுத்தியுள்ளது. இதன்படி வாடிக்கையாளர்கள் காட்சியறையில் விசேட சலுகை களைப் பெற்றுக்கொள்ள முடிகிறது. தெரிவு செய்யப்பட்ட உற்பத்திகளுக்கு 2 வாங்கினால் 1 இலவசம் என்ற சலுகையுடன் பருவ காலம் முழுவதும் கிடைக்கப்பெறுகின்ற ஊக்குவிப்பு சலுகைகளையும் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.



# நடப்பாண்டின் மிகச் சிறந்த வங்கியாக கொமர்ஷல் வங்கி தெரிவு



ஆண்டுக்கான மிகச் சிறந்த வங்கி என்ற விருதை பத்தாவது தடவையாக கொமர்ஷல் வங்கி பெற்றுள்ளது.







உலகளாவிய வங்கித்துறைகளின் இடையே வழங்கப்பட்டுவருகின்ற மிகச் சிறந்த பன்னாட்டு விருதை நடப்பாண்டிலும் கொமர்ஷல் வங்கி பெற்றுக் கொண்டது.

'த பேங்கர்' சஞ்சிகையின் 90ஆவது ஆண்டு நிறைவின் ஓர் அங்கமாக 2016ஆம் ஆண்டுக்கான இலங்கையின் வங்கிச் சேவைத் துறை சார்ந்து மேற்படி விருது வழங்கப்பட்டமை நோக்கத்தக்கது.

அந்த வகையிலே ஐக்கிய இராச்சியத்தின் 'த பேங்கர்' சஞ்சிகையால் வழங்கப்பட்டு வருகின்ற ஆண்டுக்கான மிகச் சிறந்த வங்கி என்ற விருதையே கொமர்ஷல் வங்கி மீண்டும் ஒரு தடவை வெற்றிகொண்டுள்ளது.

உலகின் 400 சிரேஷ்ட வங்கித்துறை நிபுணர்கள் கலந்துகொண்ட நிகழ்வில் கொமர்ஷல் வங்கியைப் பிரதிநிதித்துவம் செய்து அதன் முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான ஜெகன் துரைரட்ணம் விருதைப் பெற்றுக் கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த விருது தொடர்பில் கருத்துரைத்த முகாமைத்துவப் பணிப்பாளர், கொமர்ஷல் வங்கியின் சாதனைகளுள் இந்த ஆண்டு மிகவும் கவனத்துக்குரியதாக விளங்குகிறது. வங் கியின் தொடர் வெற்றிகளுக்கான ஒரு மகுட மாக இந்த விருது அமைந்துள்ளது. அதே போன்று இந்த ஆண்டு, எமது திடமான செயற்பாட்டு வளர்ச்சியும் கடல் கடந்த செயற்பாடுகளின் விரிவாக்கமும் தனித்துவம் பெற்றுள்ள ஒரு ஆண்டாகத் திகழ்கிறது. சவால் மிக்க சூழ்நிலைகளுக்கு மத்தியிலும் நாம் எமது நிலையைத் தக்கவைத்துள்ளோம். கொமர்ஷல் வங்கியின் ஒட்டு மொத்த குழுவினதும் தொழில்சார் பண்பு, தொழில் ரீதியான பண்பு என்பனவற்றுக்கு கிடைத்துள்ள மிகப் பெரிய அங்கீகார மாகவே இந்த விருதைக் கருதவேண்டியுள்ளது-என்றார்.

அதேபோன்று 2016ஆம் ஆண்டுக்குரித்தான மேற்படி விருது வழங்கல் தொடர்பில் கருத்துரைத்துள்ள 'த பேங்கர்' சஞ்சிகை,

உலகில் நீண்ட காலமாக இடம்பெற்று வரும் பன்னாட்டு ரீதியான வங்கி தரப்படுத்தல் மகுடத்தின் கீழ் உங்களது சொந்த நாட்டில் உங்கள் வங்கி தெரிவு செய்யப்படுவதென்பது வங்கியின் உறுதியான முகாமைத்துவம், உறுதியான வர்த்தக மாதிரி, என்பன உட்பட ஏனைய சிறந்த செயற்பாடுகளுக்குக் கிடைக்கின்ற நற்சான்றாகும் - எனக் குறிப்பிட்டுள்ளது.

மேலும் கொமர்ஷல் வங்கியானது நாடு முழுவதும் 253 கிளைகளுடனும் 653 ஏ.ரி.எம் வலையமைப்புக்களுடனும் செயற்படுகின்றது. கொமர்ஷல் வங்கியின் வெளிநாட்டுச் செயற்பாடுகளைப் பொறுத்தமட்டில் பங்களாதேசில் 18 கிளைகளைக் கொண்டதாகவும் மியன்மாரில் யங்கூனில் பிரதிநிதிகள் அலுவலக செயற்பாடுகளைக் கொண்டதாகவும் காணப்படுகின்றது. கடந்த செப்ரெம்பர் மாதம் மாலைதீவில் முதல் வரிசை வங்கியொன்றைத் திறந்துள்ளதுடன் இத்தாலியில் முழு அளவிலான பணப்பரிமாற்ற சேவைகளை மேற்கொள்ளக்கூடியதான பண்ப்பரிமாற்ற இல்லம் ஒன்றையும் திறந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஒரு நாள் அதிகப்படுகிறது

*24 மணி நேரம் என்பது 25 மணி நேரமாக மாறும்*



ஒரு நாளில் உள்ளதான 24 மணி நேரக் கணிப்பீடு என்பது எதிர்காலத்தில் 25 மணி நேரமாக மாற்றம் கொள்ளுமென்பதான தகவல் விஞ்ஞானிகளின் ஆய்வின் மூலம் கண்டுகொள்ளப் பட்டுள்ளது.

இதன்பிரகாரம் பூமியில் ஏற்பட்டு வரும் புவியியல் சார் மாற்றங்கள் என்பது இன்னும் 200 மில்லியன் ஆண்டுகளுக்குப் பிற்பாடு ஒரு நாளில் தற்போது உள்ளதான 24 மணி நேரத்தை 25 மணி நேரமாக மாற்றங்கொள்ளச் செய்யும் என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

அந்தவகையிலே பூமி, அதன் சுற்றுப்பாதை, விண்வெளி, சுற்றுச் சூழல் இவை தொடர்பில் பன்னாட்டு அளவில் விஞ்ஞானிகள் ஆய்வு நடத்தி வருவதுடன் கடந்த சில நூற்றாண்டுகளாகவே பூமி சுற்றும் அளவில் இரண்டு மில்லி நொடிகள் அதிகரித்து வருவது கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

அத்துடன் தற்போது பூமி தன்னைத்தானே சுற்றிக் கொள்ள எடுத்துக்கொள்கின்ற 24 மணிநேரம் என்பது மேற்படி அதிகரிப்பின் வழியே எதிர்வரும் 6.7 மில்லியன் ஆண்டுகளில் ஒரு நிமிடமாக மாறும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது.

மேலும் இந்த அடிப்படை மாற்றம் என்பது இன்னும் 200 மில்லியன் ஆண்டுகளுக்குப் பின்னர் இது ஒரு மணிநேரமாக மாறும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. அதேவேளை மேற்படி மாற்றம் என்பது மெதுவான நிகழ்வாக இருக்குமென இங்கிலாந்து ஆய்வாளர்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# இந்தியாவின் வழியையே இலங்கையும் பின்பற்றவுள்ளது

*கறுப்புப் பண ஒழிப்புத் தொடர்பில் நிதி அமைச்சர் கருத்துரை*



எமது அயல் நாடாகவும் பிராந்திய வல்லரசாகவும் விளங்கும் இந்தியாவில் கறுப்புப் பணத்தை ஒழிக்கும் நடவடிக்கை தொடர்பில் பிரதமர் நரேந்திர மோடி மேற்கொண்டுள்ள வழியையே இலங்கை அரசும் எதிர்காலத்தில் கையாளும் என நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவால் தெரிவிக்கப்பட்டது.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிதி அமைச்சு மீதான குழுநிலைவிவாதத்தின் போது கலந்துகொண்டு பதில் கருத்துரை வழங்கும் போதே மேற்கண்டவாறு அவரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இதுதொடர்பில் கருத்துரைத்துள்ள. நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க,

பிரதமர் மோடி இந்தியாவில் செய்ததைப் போன்று 5 ஆயிரம் ரூபா நோட்டுக்களை நீண்ட காலம் செல்வதற்கு முன்பதாக நாமும் வெளியில் எடுப்போம். ஆர்ப்பாட்டங்களுக்கான ஆள்களை அழைத்துவருவதற்கு இந்த 5 ஆயிரம் ரூபா நோட்டுகள்தான் பயன்படுத்தப்படுகின்றன. இவை எங்கிருக்கின்றன என்பதான கேள்வி எழுகிறது. இவை மத்திய வங்கியில் புழக்கத்துக்கு வரவில்லை என்பது தெரிந்த விடயம். ஆனால் மத்திய வங்கியில் இல்லாதது எப்படி இவர்களிடம் இருக்கிறது - என்றார்.

# கப்பல் சேவையை ஆரம்பிக்க தீர்மானம்



இலங்கை மற்றும் இந்தியா இடையேயான கப்பல் சேவையை நோர்வே நிறுவன நிதிப் பங்களிப்புடன் மீண்டும் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதான தகவலை இந்திய ஊடகங்கள் வெளியிட்டது.

இதன்பிரகாரம் முதற்கட்டநகர்வாக கொழும்பில் இருந்து தமிழ் நாட்டின் தூத்துக்குடிக்கான கப்பல் சேவை ஆரம்பிக்கப்பட [illegible] தொடர்ந்து தலைமன்னாருக்கும் இராமேஸ்வரத்துக்கும் இடையிலான கப்பல்சேவை ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது.

மேற்குறித்த செயற்பாட்டு முன்னகர்வுகள் கேள்வி [illegible]டையிலேயே இடம் பெறுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் கைப்பற்றப்பட்டது பல்மைரா ரஷ்யா தனித்துக் காட்டியது வித்தை

டமஸ்கஸ், டிசெ. 13
சிரியாவின் பல்மைரா நகர் ரஷ்யாவின் மூர்க்கத்தனமான தாக்குதலால் ஒரே நாளில் மீண்டும் மீட்கப்பட்டது.

ஈராக், சிரிய நாடுகளின் சில பகுதிகளைக் கைப்பற்றி அவற்றை ஓர் தனிநாடாக அறிவித்தது ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு. அந்த அமைப்புக்கு எதிராக உலகின் பல நாடுகளும் போரிட்டு வருகின்றன. குறிப்பாக சிரியாவிலிருந்து ஆயுதக் குழுக்களை விரட்டும் நோக்கில் ரஷ்யா முழுமூச்சாக செயற்பட்டு வருகிறது. சிரியாவின் பழைமையான கிராமமான பல்மைரா கடந்த வருடம் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் பிடியிலிருந்தது. அந்த நகரின் தொல்பொருள் சின்னங்களையும் பழைமைகளையும் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு அடித்து நொறுக்கியுள்ளது என ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்து, தனது கண்டனத்தை வெளிப்படுத்தியது. பின்னர் நீண்ட போராட்டத்தின் மத்தியில் கடந்த 10 மாதங்களின் முன்னர் சிரியா குறித்த நகரை மீட்டெடுத்தது. அலெப்போ நகரிலிருந்து ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பையும் ஏனைய ஆயுதக் குழுக்களையும் அடியொடு இல்லாது செய்ய அரச படைகள் கவனம் செலுத்தின. இதை சிறந்த வாய்ப்பாகப் பயன்படுத்தி, பல்மைராவை ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்பு மீண்டும் மீட்டெடுத்தது என கடந்த சனிக்கிழமை தெரிவிக்கப்பட்டது. ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் இந்த முன்னேற்றம் ரஷ்யா வுக்கான கௌரவச்சிக்கல் என்று கருதப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் மூர்க்கத்தனமான தாக்குதலை குறித்த நகர பகுதியில் நடத்திய ரஷ்யா, ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்பு பெரும் பின்னடைவைக் கொடுத்து நகரை மீட்டெடுத்தது எனவும், இந்தத் தாக்குதலில் கிட்டத்தட்ட 300 பேர் உயிரிழந்தனர் எனவும் பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம-எ)





# இத்தாலியில் ஒரே நாளில் 1,164 அகதிகள் மீட்கப்பட்டனர்

ரோம், டிசெ. 13
இத்தாலியில் ஒரே தினத்தில் ஆயிரத்து 164 அகதிகள் மீட்கப்பட்டனர். நேற்றுமுன்தினம் குறித்த மீட்புச் சம்பவம் இடம் பெற்றது.

லிபியாவில் இருந்து அவர்கள் அனைவரும் பயணித்தனர். 7 படகுகளில் வந்த அவர்களை இத்தாலியின் கடலோர பாதுகாப்புக் குழு மீட்டது. 7 பேர் உயிரிழந்தனர். இந்த வருடம் ஆபிரிக்க நாடான லிபியாவில் இருந்து இத்தாலிக்குப் பயணித்த அகதிகளில் 4 ஆயிரத்து 715 பேர் சாவடைந்துள்ளனர் என பன்னாட்டு அகதிகள் அமைப்பு தெரிவித்தது. (ம-எ)

# பங்களாதேஷ் இந்துக்களுக்காக அமெரிக்காவில் ஆதரவுக் குரல்

பங்களாதேஷில் உள்ள இந்துக்களுக்கு ஆதரவாக ஒபாமா குரல் கொடுக்க வேண்டும் என்று வலியுறுத்தியும் பங்களாதேஷ் அரசைக் கண்டித்தும்-அமெரிக்காவில் சில ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

முஸ்லிம் மக்கள் பெரும்பான்மையாக வாழும் பங்களாதேஷில் 1988 ஆம் ஆண்டு இஸ்லாம் தேசிய மதமாக அறிவிக்கப்பட்டது. சிறுபான்மை இன மக்களாக வாழ்ந்துவரும் கிறிஸ்தவர்கள், புத்தமதத்தினர் மற்றும் இந்துக்கள்மீது சமீபகாலமாக அங்கு வன்முறை தாக்குதல் பெருகி வருகிறது. கோயில் மற்றும் தேவாலயங்களுக்குள் புகுந்து படுகொலைகளை செய்யும் அளவுக்கு அங்கு நிலைமை மோசம் அடைந்து வருகிறது என்று கோடிட்டுக் காட்டப்படுகிறது.

கடந்த 7 ஆண்டுகளில் இந்துக்கள் மீது இருநூறுக்கும் அதிகமான பெரும் தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன எனப் பதியப்பட்டுள்ளன.

இந்த நிலையில் அமெரிக்க வாழ் இந்துக்கள் இணைந்து வெள்ளைமாளிகையின் முன் நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பங்களாதேஷில் இந்துக் கோயில்களும், இந்து மக்களின் சொத்துக்களும் சூறையாடப்படுகின்றன. இந்து மக்களுக்கு சொந்தமான நிலங்கள் அபகரிக்கப்படுகின்றன. இந்து பெண்களை கற்பழிப்பதும், இந்துக்களை கொல்வதும் அன்றாட நிகழ்வாகிவிட்டது. மக்களின் உணர்வுகளைப் புரிந்துகொண்டு, பிரச்சினைகளுக்கு தீர்வு காணுவதில் வல்லவரான நீங்கள், வங்காள தேசத்தில் சிறுபான்மையின மக்களின்மீது கட்டவிழ்த்து விடப்படும் தீவிரவாதத்தை தடுத்து நிறுத்துமாறு அந்த நாட்டு அரசை வலியுறுத்த வேண்டும் என்று ஒபாமாவிடம் முறைப்பாடு ஒன்றும் கையளிக்கப்பட்டது. (ம)




# விநோதமான பன்றிக்குட்டி

பீஜிங், டிசெ. 13
சீனாவில், விநோத உருவத்தில் பன்றி ஒன்று குட்டியை ஈன்றுள்ளமை பன்னாட்டு ஊடகங்களின் கவனத்தைப் பெற்றது.

குசோகு மாகாணத்திலேயே குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குரங்கின் முகத்தோற்றத்துக்கு ஓரளவு ஒத்துப்போகும் வகையில் குறித்த பன்றிக் குட்டி பிறந்துள்ளது.

இருப்பினும் கண், வாய், மூக்கு என்பன முற்றிலும் வித்தியாசமான தோற்றத்தில் காட்சியளிப்பதுடன், எனைய குட்டிகளைப் போன்று பால்பருக இயலாமையால் செயற்கை முறையில் பாலூட்டப்பட்டு வருகின்றது என பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம-எ)



சீனாவின் கலாசார நடனப் போட்டி கடந்த வாரம் நடைபெற்றது. இர்
பங்குபற்றினர். பல்லாயிரக்கணக்கான மக்கள் நேரில் பார்த்து ரசித்தன




# ரஷ்யா உதவியதாக முட்டாள்தனமானன



அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ட்ரம்ப் வெற்றிபெற்றதன் பின்னணியில் ரஷ்யா உள்ளது என்ற குற்றச்சாட்டு முழுவதும் முட்டாள்தனமானது என்று ட்ரம்ப் தெரிவித்தார்.

அமெரிக்காவின் ஜனாதிபதித் தேர்தல் அண்மையில் நடைபெற்றது. குடியரசுக் கட்சியின் முக்கிய வேட்பாளரான டொனால்ட் ட்ரம்ப் ஜனநாயகக் கட்சியின் வேட்பாளரான ஹிலாரியை வீழ்த்தி ஜனாதிபதியாகத் தெரிவானார். ஆனால்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ரஷ்யாவின் இராணுவ ரோபோவால் கொல்லப்பட்டார் ஐ.எஸ். ஆயுததாரி

மொஸ்கோ, டிசெ. 13
ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் முக்கிய ஆயுததாரிகளில் ஒருவர் ரஷ்யாவில் இராணுவ ரோபோவால் கொல்லப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. இது ரஷ்யாவின் இராணுவப் பலத்தை வெளிப்படுத்தும் விதமாகவும் அமைந்துள்ளது என்று-பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.


சேக் அபு மொகமட் அல் குவாடரி என்ற ஆயுததாரியே கொல்லப்பட்டார். இவர் ரஷ்யாவில் நடத்தப்பட்ட தாக்குதல் ஒன்றில் மூளையாகச் செயற்பட்டவர் என்று தெரிவித்து அவரது தலைக்கு 78 ஆயிரம் டொலர் வழங்கப்படும் என்றும் ரஷ்யா ஏற்கனவே அறிவித்திருந்தது. இந்த நிலையில் மெக்கச்கலா பகுதியில் இராணுவத்தினர் நடத்திய திடீர் சுற்றிவளைப்புச் சோதனையிலேயே குறித்த நபர் கொல்லப்பட்டார். இந்த நடவடிக்கையில் இராணுவத்தினருடன், தானியங்கி ரோபோக்களும் பயன்படுத்தப்பட்டன. அவ்வாறு பயன்படுத்தப்பட்ட ரோபோ ஒன்றாலேயே அவர் கொல்லப்பட்டார். குறித்த ரோபோக்கள் தானாக இயங்குவதுடன், எதிரியை குறிவைத்துத் தாக்குதல் நடத்தவும் சிறந்தது என பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம-எ)

# சிறுவர்களுக்கான இராணுவப் பூங்கா

தெஹ்ரன், டிசெ. 13
ஈரானில் சிறுவர்களுக்காக இராணுவப் பூங்கா அந்த அரசினால் திறக்கப்பட்டது. நாட்டின் எதிரிகளுக்கு எதிராக போரிடுவது குறித்து சிறுவர்கள் உணர்ந்து கொள்ளும் வகையிலும், இஸ்ரேல் உட்பட



மேற்குலகு நாடுகளுக்கு எதிராக போரிடுவது குறித்த விடயங்களைக் கற்பிக்கும் வகையிலும் பூங்கா உருவாக்கப்பட்டதாக அரச தரப்பினால் தெரிவிக்கப்பட்டது. ஈரானிய சிப்பாய்களின் உடைகளைப் போன்ற உடைகளை அணிந்து கொண்டு, செயற்கையான போர்ச் சூழலில், விளையாட்டு துப்பாக்கிகள், ஆயுதங்கள் மூலம் மாதிரிப் போர்க்களத்தை சிறுவர்கள் உணரத்தக்க வகையில் பூங்கா வடிவமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (ம-எ)



# நியூசிலாந்துப் பிரதமராக இங்கிலிஸ் பதவியேற்றார்


வெலிங்டன், டிசெ. 13
நியூசிலாந்து பிரதமராக இருந்த ஜோன் கே தனது பதிவியிலிருந்து விலகியதை அடுத்து, புதிய பிரதமராக பில் இங்கிலிஸ் தெரிவானார். கடந்த 8 வருடங்களாக பிரதமராகச் செயற்பட்ட ஜோன் பேயின் பதவி விலகல் பெரும் அதிர்வலைகளைத் தோற்றுவித்தது. இதனையடுத்து நியூசிலாந்தின் அடுத்த பிரதமர் யார் என்ற கேள்ளி எழுந்திருந்தது. இந்த நிலையில் புதிய பிரதமரை தேர்ந்தெடுப்பதற்கான தேசியகட்சியின் கூட்டம் நேற்று முன்தினம் தலைநகர் வெலிங்டனில் நடந்தது. பில் இங் கிலிஸ் (வயது -54) புதிய பிரதமராகத் தெரிவானார். (ம-எ)

# துருக்கி இரட்டைக் குண்டு வெடிப்பு உயிரிழப்பு 38 ஆக அதிகரித்தது



அங்காரா, டிசெ. 13
துருக்கியின் இஸ்தான்புல் நகரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இரு வேறு குண்டுவெடிப்புச் சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 38 ஆக அதிகரித்தது. இன்னும் 150 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதனால் உயிரிழப்பு மேலும் அதிகரிக்கும் என்று அச்சம் வெளியிடப்பட்டது.

பூங்கா, கால்பந்து மைதானம் ஆகியவற்றை இலக்கு வைத்தே இந்தத் தாக்குதல்கள் நடத்தத் திட்டமிடப்பட்டன. கால்பந்தாட்டம் முடிந்து ரசிகர்கள் சென்ற பின்னர் தாக்குதல் நடத்தப்பட்டதால் உயி ரிழப்பு அதிக அளவில் இடம்பெறவில்லை. அதேபோல் பூங்காவிலும் மக்கள் கூட்டம் பெரிய அளவில் இருக்கவில்லை. இதனால் நூற்றுக் கணக்கான உயிரிழப்புக்கள் தவிர்க்கப்பட்டது என்று-தெரிவிக்கப்பட்டது. நேற்றைய நிலவரத்தின்படி உயிரிழப்பு 29 ஆக இருந்தது. மருத்துவமனையில் 9 பேர் சாவடைந்ததை அடுத்து, உயிரிழப்பு 38 ஆக அதிகரித்தது. இந்தத் தாக்குதல் சம்ப வத்துக்கு துருக்கி ஜனாதிபதி எர்டகன் தனது கண்டனத்தைத் தெரிவித்தார். நேற்று முன்தினம் வரை எவரும் பொறுப்பேற்காத நிலையில் குர்தீஸ் அமைப்பு நேற்று பொறுப்பேற்றது. (ம-



...ந்தப் போட்டியில், நாடு முழுவதும் உள்ள சிறந்த நடனக் கலைஞர்கள் ...ார். (ம-எ)

# ...க குற்றச்சாட்டுக்கள் ...வை என்கிறார் ட்ரம்ப்



ட்ரம்பின் வெற்றிபெற்றதன் பின்னணியில் அமெரிக்காவின் பரம எதிரியான ரஷ்யா உள்ளது என்று-அமெரிக்காவின் உளவுத் துறை குற்றஞ்சாட்டியது. இதனையடுத்து குறித்த விடயம் தொடர்பில் உறுதியான விசாரணையை நடத்தி, ஜனவரி 20 ஆம் திகதிக்குள் சமர்ப்பிக்க வேண்டும் என்று-தற்போதைய ஜனாதிபதியான ஒபாமா அறிவித்தார்.

இதையடுத்து இந்தக் குற்றச்சாட்டு முட்டாள் தனமானது என ட்ரம்ப் தெரிவித்தார். ஹிலாரியின் தோல்விக்கான மற்றொரு சாக்குப் போக்கே என ட்ரம்ப் மேலும் தெரிவித்தார். (ம)

# இடிந்து விழுந்தது ஆலயக் கூரை 160 பேர் உடல்நசுங்கி உயிரிழப்பு

அபுஜா, டிசெ. 13
நைஜீரியாவின் அக்வா இபோம் என்ற மாநிலத்தின் தலைநகரான உயோ என்ற இடத்தில் உள்ள தேவாலயக் கூரை இடிந்து, மக்கள் கூட்டத்தின் மீது விழுந்த விபத்தில் உயிரிழப்பு எண்ணிக்கை 160 ஆக உயர்ந்தது. குறித்த தேவாலயத்தை பெரிய அளவில் விரிவாக்கம் செய்வதற்காக கட்டுமானப் பணிகள் நடைபெற்று வந்த நிலையில், அந்த திருச்சபையின் நிறுவனரான அகான் வீக்ஸ் என்பவருக்கு ஆயர் பட்டம் வழங்கும் திருப்பலி கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. நூற்றுக் கணக்கான மக்கள் தங்களது குடும்பத்துடன் வந்திருந்தனர். மாநில ஆளுநர் உடோம் இம்மானுவேல் உள்ளிட்ட பல முக்கிய பிரமுகர்களும் பங்கேற்றனர். தேவாலய கட்டடத்தின் மேற்கூரையைத் தாங்கிப் பிடிப்பதற்காக அமைக்கப்பட்டிருந்த இரும்புச் சாரங்கள் ஒன்றன்பின் ஒன்றாக



சரிந்து விழுந்தன. இதை யடுத்து, சரியாக பொருத்தாமல் இருந்த மேற்கூரை மொத்தமும் கூடியிருந்த மக்களின்மீது விழுந்தது. 60 சடலங்கள் மீட்கப்பட்டன. உயிரிழப்பு மேலும் அதிகரிக்கும் என்று அச்சம் வெ... யிட்டிருந்த நிலையில், நேற்று... யம் வரையிலான நிலவரத்தின்... உயிரிழப்பு எண்ணிக்கை 160 உயர்ந்தது. (ம-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## ஒற்றையாட்சியைவிட்டு நகரமுடியாத நரகம்!

செக்கு மாடுகள் கணக்காக இனப் பிரச்சினைக்கான தீர்வும் ஒற்றையாட்சி என்கிற ஒரே இடத்தில்தான் சுற்றிச் சுற்றி வருகின்றது என்பது வேதனை தரும் உண்மை. 30 வருட காலப் போர், 7 ஆண்டுகால ஆயுத மோதல் அற்ற சூழல், மாற்றம் என்கிற பெயரிலான ஆட்சி மாற்றம் இது எதனாலும் இந்த செக்கு மாட்டை அதன் தடத்திலிருந்து வெளியே இழுத்து எடுக்கவே முடியவில்லை என் பது இலங்கையின் சாபக்கேடு.

இனப் பிரச்சினைக்கான தீர்வாக ஒரு புதிய அரசமைப்பு உருவாக்கப்படும் என்று அறிவிக்கப்பட்ட நிலையிலும், அந்த அரசமைப்புக்காக நியமிக்கப்பட்ட நாடாளுமன்ற 7 உப குழுக்களின் அறிக்கைகள் வெளியாகிய நிலையிலும், அரசமைப்புக்கான வழிகாட்டல் குழுவின் (இந்தக் குழுவே கிட்டத்தட்ட அரசமைப்பை உருவாக்கும் குழு) அறிக்கை இந்தா–அந்தா என்று வெளியாகும் என எதிர்பார்க்கப்படும் நிலையிலும் ஒற்றையாட்சி என்கிற ஒற்றைப் புள்ளியைவிட்டே இலங்கையின் அரசியல் நகரவில்லை என்பது மிக மோசமான நிலைமை.

அண்மைய நாள்களாக மீண்டும் ஒற்றையாட்சி பற்றிய கதையாடல்களே திரும்பத் திரும்ப நிகழ்கின்றன. ஒற்றையாட்சிக்கு வெளியே ஒரு தீர்வை ஆதரிக்கப்போவதில்லை என்றும்–தமது கட்சியின் தீர்வு வரைவை வரும் தை மாதத்தில் வழங்குவோம் என்றும் சுதந்திரக் கட்சி இப்போது கூறுகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் ஒற்றையாட்சி தொடரவேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாகச் செய்திகள் வெளியாகின்றன. ஆனால், சிங்களத்தில் “எக்க ரட்ட” என்பதை ஒற்றையாட்சி என்றும் பொருள் கொள்ளலாம்–ஒரே நாடு என்றும் பொருள்கொள்ளலாம் எனச் சமாளிக்கிறார் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க.

ஒற்யைாட்சியையும் பௌத்தத்தையும் விட்டுக்கொடுக்க முடியாது என்று போர்க் கொடி தூக்குகிறார்கள் பிக்குகள்.

ஒற்றையாட்சிக்குள் தீர்வு காண எமக்கு மக்கள் ஆணை தரவில்லை என்று தலைமை அமைச்சரிடம் முறையிடுகிறார்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர்.

ஒற்றையாட்சிக்குள்தான் தீர்வு என்றால், தமிழ் மக்கள் அதனை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்கிறார் பொது அமைப்பான மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்தின் பணிப்பாளரும் நல்லிணக்கச் செயலணியின் பொதுச் செயலாளருமான பாக்கியசோதி சரவணமுத்து.

இப்படி எல்லோரும் மாறி மாறி ஒற்றையாட்சியைப் பற்றித்தான் பேசிக்கொண்டிருக்கிறார்கள். முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் ஆட்சி மாறி இரண்டு வருடங்கள் கடந்துவிட்டபோதும், புதிய அரசு பதவியேற்று ஒன்றரை வருடங்கள் கடந்துவிட்டபோதும் அரசியல் தீர்வு முயற்சிகள் ஒற்றையாட்சி என்ற புள்ளியைவிட்டு நகராமல் நாண்டுகொண்டு நிற்கிறது என்பது மட்டும் புரிகிறது.

ஒற்றையாட்சிக்குள் ஒரு சட்டத்தைக் கொண்டு வருவதன் மூலம் நாட்டைப் பிரித்துவிடலாம். ஆனால் கூட்டாட்சிக்குள் (சமஷ்டி) அப்படிச் செய்ய முடியாது என்பதாலேயே பிளவுபடாத நாட்டை உறுதிப்படுத்தும் வகையில் கூட்டாட்சியைக் கேட்கிறோம் என்று புது விளக்கம் கொடுக்கிறது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. 1977இல் நாட்டைப் பிரிக்கவேண்டும் என்று தமிழ் மக்களின் ஆணையைக் கேட்டதற்குப் பின்னர், நாட்டைப் பிரிக்கக்கூடாது என்பதற்கு எப்போது மக்கள் ஆணையைக் கேட்டு, மக்கள் அதனைக் கொடுத்தார்கள் என்பதைக் கூட்டமைப்பு சொல்லவில்லை என்றாலும், நாட்டைப் பிரிக்கக்கூடாது என்பதில் அது முழு வீச்சாக நிற்கிறது.

இப்படி மீண்டும் மீண்டும் ஒற்றையாட்சிக்குள்ளும் பௌத்தத்துக்குள்ளும் மட்டுமே உழன்றுகொண்டிருக்கும் இந்தத் தீர்வு முயற்சியை அதிலிருந்து வெளியே நகர்த்தி நியாயமான தீர்வை மக்களுக்குத் தரும் தகுதி தலைவர்களுக்கோ இருக்கிறதா என்கிற சந்தேகம் பலமாகவே எழுகிறது.

கடந்த கால வரலாற்றைப் போலவே தீர்வுக்கான உண்மையான முயற்சியாக அன்றி, தேர்தல் வாக்குகளை எண்ணியே அரசியல் செய்யும் தலைவர்களாக இவர்கள் எல்லோரும் இருக்கும் வரையில் தீர்வு முயற்சிகள் இப்படி ஒற்றைப் புள்ளியில் சுற்றிச் சுழல்வதைத் தவிர வேறு வழியில்லை.

தீர்வைப் பெறுவதற்கான பொன்னான வாய்ப்பு இப்போதுதான் அமைந்தது என்று இந்தத் தலைவர்கள் சொல்லிக்கொண்டாலும், அதை வெற்றிகரமாக முன்னெடுக்கக்கூடியவர்களாக இவர்கள் இல்லை என்பது இந்த நாட்டின் சாபக்கேடு இல்லாமல் வேறென்ன!

# அந்த மூன்று எழுத்துக்களுக்குரிய மூன்று தலைவர்கள்

மு.ஈழத்தமிழ்மணி

அண்ணா... எம்.ஜி. ஆர். அம்மா.. என்ற மூன்றெழுத்துக்களுக்கு உரித்தான முதலமைச்சர்களுக்கு தமிழகம் என்றும் தலை வணங்கியே வருகின்றது.

அண்ணா என்ற மூன்றெழுத்தும் எம்.ஜி.ஆர். என்ற மூன்றெழுத்தும் அம்மா என்ற மூன்றெழுத்தும் தமிழகத்தில் வாழுகின்ற ஏழு கோடி மக்களால் தினமும் உச்சரிக்கப்படுகின்ற நாமங்களாகும். அந்த மூன்றெழுத்துக்குரிய மூவரும் மக்கள் மனதில் நீங்காத இடத்தைப் பெற்றுவிட்டனர்.

மூன்றெழுத்துக்குரிய மூவேந்தர்களும் இன்று தமிழக மக்களிடையே இல்லை.

தமிழகத்தில் 1967ஆம் ஆண்டிலிருந்து திராவிடக் கட்சிகளின் ஆட்சியே இன்று வரை தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. ஈ.வே.ரா.பெரியாரால் உருவாக்கப்பட்ட திராவிடக் கழகத்தில் இணைந்திருந்த பேரறிஞர் அண்ணா அதிலிருந்து விலகி, திராவிடமுன்னேற்றக்கழகத்தை உருவாக்கினார். தமிழகத்தில் காங்கிரஸ் கட்சியின் ஆட்சியை இல்லாதொழிக்க வேண்டும் என்ற கொள்கையில் அண்ணா உறுதியாக இருந்தார். தமிழக சட்டசபையில் 1952ஆம் ஆண்டு தொடக்கம் 1967வரை காங்கிரஸ் கட்சியே ஆட்சி அமைத்தது. நான்காவது சட்டசபைத் தேர்தல் 1967 ஆம் ஆண்டு நடைபெற்றது. இதில் பேரறிஞர் அண்ணாவின் தலைமையில் தி.மு.க. ஆட்சி அமைத்தது. அவர் மறந்த பின்னர் கருணாநிதி முதல்வரானார். அனால் சட்டசபை முழுமையாக இயங்க முடியாமல் போகவே, 1971 ஆம் ஆண்டு சட்டசபை கலைக்கப்பட்டது. 1971ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில், தி.மு.க. அட்சி அமைத்தது. கருணாநிதி மீண்டும் முதல்வரானார். 1976ஆம் ஆண்டுவரை தி.மு.க. ஆட்சி இடம் பெற்றிருந்தது. அப்போது பிரதமராக இருந்த இந்திரா காந்தி அரசினால் நெருக்கடி நிலைபிரகடனப்பட்டிருந்தவேளை தி.மு.க. ஆட்சி கலைக்கப்பட்டது.

**எம்.ஜி.ஆரின் வெளியேற்றம்**

1972 ஆம் ஆண்டு தி.மு.கவில் [illegible] தோன்றவே தி.மு.கவிலிருந்த எம்.ஜி.ஆர். வெளியேறி அ.தி. மு.க. உதயமான பின்னர். அவரினது ஆட்சியிலேஅவரின்மறைவு தமிழக அரசியலில் ஒரு பெரும் மாற்றத்தைக் கொண்டு வந்தது. அதுதான் பெண் தலைமைத்துவத்தை அறிமுகப்படுத்தி, ஜெயலலிதாவுக்கு அசைக்க முடியாத அடித்தளத்தை இட்டுத் தந்தது. எம்.ஜி.ஆர். என்ற மூன்றெழுத்து மாமனிதரின் தனிப்பட்ட செல்வாக்கும், அரசியல் செல்வாக்குமே ஜெயலலிதாவின் உயர்வுக்குக் காரணமாக இருந்தது.



1977ஆம் ஆண்டு நடை பெற்ற சட்டசபைத் தேர்தலில் போட்டியிடட எம்.ஜி.ஆர். தலைமையிலான அ.தி.மு.க.வெற்றிபெற்றது. எம்.ஜி.ஆர். முதல்வரானார். 1980 தொடக்கம் 1985ஆம் ஆண்டுகளிலும் தமிழகத்தில் சட்டசபைத் தேர்தல்கள் நடைபெற்றபோது எம்.ஜி.ஆரின் அ.தி.மு.கவே வெற்றிபெற்று ஆட்சி அமைத்திருந்தது. எம்.ஜி. ஆரே மூன்றாவது தடவையாகவும் முதலமைச்சரானார்.

எம்.ஜி.ஆர். தொடர்ந்து 10 ஆண்டுகள் வரை பதவியிலிருந்துள்ளார். 1987ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் எம்.ஜி.ஆர். உடல் நலக்குறைவால் மறைந்தார். எம்.ஜி.ஆர். தனது கழகக் கொடியில் அண்ணாவின் திருவுருவச் சின்னமாக அவரது படத்தையே பதித்திருந்தார். அண்ணாவின் கொள்கைகளைப் பின்பற்றியே எம்.ஜி.ஆரின் ஆட்சி அமைந்திருந்தது. துப்பாக்கிக்குண்டுகளால் அவரது குரல் வளை நெரித்த நேரத்திலும் எம்.ஜி.ஆர். என்ற மூன்றெழுத்தின் உயிரைக்கூட அப்போது இறைவனால் பறித்து விட முடியவில்லை.

“என் கண்ணில் ஒருதுளி நீர் வந்தால் உந்த உலகம் அழ வேண்டும்” என்ற புரட்சித் தலைவரின் பாடலுக்கு அவரது இறுதி ஊர்வலம் ஒரு சான்றாக அமைந்தது. அண்ணா என்ற மூன்றெழுத்தின் இதயக்கனியான எம்.ஜி.ஆர். என்ற மூன்றெழுத்தின் மறைவுக்குப் பின்னர் அவரின் வாரிசாக உருவாகி. தமிழக மக்களின் உயிர்மூச்சாகவும் இரும்புப்பெண்ணாகவும் போற்றப்பட்டு, நவம்பர் மாதம் ஐந்தாம் திகதி மறைந்த அம்மா, என்ற மூன்றெழுத்தின் சக்தி வாய்ந்த 'ஜெ' என்ற ஜெயலலிதா மூன்றெழுத்து வரிசையில் மூன்றாவது முதலமைச்சர்.

அரசியல் சாணக்கியம் படைத்த கலைஞர் மு.கருணாநிதியின் எழுபது ஆண்டு அனுபவத்துடன் முப்பது ஆண்டு கால அரசியல் அனுபவம் வெல்லுமா என்ற கேள்விக்கும் தமிழக மக்கலால் வெல்லவைப்போம் என்ற பதிலே கடந்த மே மாதம் நடைபெற்ற சட்டசபைத் தேர்தலில் வழங்கியிருந்தனர். அம்மா என்ற மூன்றெழுத்து மந்திரத்தின் உச்சரிப்பானது 2014 ஆம் ஆண்டு நடைபெற்ற இந்திய நாடாளுமன்றத்துக்கான தேர்தலில் பட்டிதொட்டி எங்கும் ஒலித்தது. தமிழகத்தில் உள்ள சகல நாடாளுமன்றத் தேர்தலிலும் பாண்டிச்சேரிமாநிலத்திலுள்ள ஒரு தொகுதியுமாகச் சேர்த்து 40 தொகுதிகளில் அம்மாவின் அ.தி.மு.க. தனித்து நன்று போட்டியிட்ட போது, அம்மாவின் தேர்தல் பரப்புரை 'நாற்பதும் நமதே நாளை நமதே' என்ற வார்த்தைக்கு தமிழக மக்கள் செவிமடுத்திருந்தனர்.

137 நாடாளுமன்ற உறுப்பினர்களும் வெல்வதற்கு தனது தனிப்பட்டதொரு செல்வாக்கும், வசீகரமும் முக்கிய காரணமாக அமைந்திருந்தது. தமிழகத்தில் எங்கும் அம்மா எதிலும் அம்மா" என்ற மூன்றெழுத்து உச்சாடனம் ஏழுகோடி மக்களையும் அசைக்க வைத்தது. தி.மு.க. ஆதரவாளர்கள் இந்திய தேசியக்கட்சிகளின் தமிழகத்தின் ஆதரவாளர்கள் ஜெயலலிதா மீது கடுமையான எதிர்ப்புணர்வுள்ளவர்களென எவருமே விதிவிலக்கல்ல. அப்படியொரு சக்தியை அம்மா என்ற வார்த்தைக்கு தமிழக மக்களிடம் ஒலி வடிவம் கொடுத்துவிட்டார்.

**சொத்துக்குரிய வழக்கு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஜெயலலிதா உட்பட நால்வருக்கும் நீதிமன்றம் விதித்த தண்டனையால் சில மாதங்கள் வரையில் கர்நாடகத்திலுள்ள சிறையில் தவித்த ஜெயலலிதா விடுவிக்கப்பட்ட பின்னர், அவர் மீது அனுதாபமும், அவர் மீது கொண்ட எழுச்சியும், அலை அலையாகப் பெருகின. ஜெயலலிதாவுக்கு படுமோசமான தோல்விகளும் மிகப்பெரிய வெற்றிகளும் அவருக்கு சொந்தமாகின. தனக்கேற்பட்ட தோல்விகள், அவமானங்கள் இரண்டும் தனது எதிர்கால அரசியலுக்கும், அ.தி.மு.கவின் பல மடங்கு வளர்ச்சிக்கும் உரமாகின. சிறையிலிருந்து வெளியேறிய ஜெயலலிதா எதற்கும் கலங்காத–கிறுங்காத அஞ்சா நெஞ்சம் படைத்த அம்மாவானார்.
சிறையிலிருந்து வெளிவந்த பின்னர், ஜெயலலிதா அட்சி 'ஜெ'யின் ஆட்சி என்பதை விடுத்து, தமிழகமக்கள் அம்மாவின் ஆட்சி என விழித்துக் கூற அரம்பித்தனர். தமிழகத்தில் அடித்தட்டு மக்கள் மத்தியில் மட்டுமன்றி, பெண்கள் அனைவரினதும் தாயாகவே மதிக்கத் தொடங்கினர்.
எம்.ஜி.ஆர். துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிய பின்னர், அவரது நடிப்புத் துறையும் அரசியலும் இத்தோடு முடிவடைந்தது என நினைத்தவர்களின் வாயை அடைத்தவர். அதேபோல் ஜெயலலிதாவின் வாழ்வு சிறைக்குள்ளேயே முடிந்துவிடும். இத்துடன் அவருடைய அரசியல் வாழ்வு முடிந்துவிடும் என்று தமிழகத்தின் ஜெயலலிதா மீதான எதிர்ப்பு அரசியல்வாதிகள் பலர் நினைத்ததுண்டு.
ஜெயலலிதா சிறை மீண்டு வந்தார். தமிழக சட்டசபைத் தேர்தலும் மே மாதம் நடைபெற்ற போது அ.தி.மு.கவை வெல்ல வைப்பதற்காகத்தானே தனித்து நின்று அ.தி.மு.கவின் ஒற்றைத் தலைவியாகவும் தமிழக மக்களின் அமமாவாகவும் நின்று தேர்தல் பரப்புரைகளைச் செய்திருந்தார்.

**எல்லாமே ஜெயலலிதாதான்**


தேர்தலின்போது ஜெயலலிதாவை தாண்டி தி.மு.கவுக்கு வெற்றி இல்லை–வளர்ச்சியுமில்லை. அ.தி.மு.க வைப் பெறுத்தவரையில் ஜெயலலிதா என்பது அவரை மிஞ்சி அரசியலில் வேறு எந்தத் தலைவராலும் வரமுடியாது. அவருக்கு நிகராக 10 வீதமான அளவுக்கு அ.தி.மு.கவில் தலைவர் ஒருவர்கூட உருவாகவில்லை. அம்மாவே அ.தி.மு.க., அ.தி.மு.கவே அம்மா.

அந்தஅம்மா அ.தி.மு.கவின் திருவுருவம் சட்டசபைத்தேர்தலுக்குப்பின்னர், கூட்டுமொத்தத் திருவுருவமாகவே ஜெயலலிதா என்ற அம்மாவின் திருவுருவம் தமிழக மக்கள் மத்தியில் நம்பிக்கை நட்சத்திரமாகத் தோன்றியது.
அதனால்தான் என்னவோ தமிழக மக்கள் அம்மாவை நினைத்து இரண்டு தடவை கண்ணீர் விட்டுள்ளனர். ஜெயலலிதா சிறை சென்றபோது தமிழக மக்களின் மனங்களும் உடைந்திருந்தன. தி.மு.க. ஆதரவாளர்கள் மத்தியிலும் ஜெயலலிதாவின் சிறைவாசமும் தீர்ப்பும் வேதனையைக் கொடுத்திருந்தது. குடும்பத்தில் ஒருவர் சிறை செல்லும்போது, அந்தக் குடும்பத்தின் உறவுகள் யாவும் அழுகின்றனர். துன்பப்படுகின்றனர். குடும்பத்திலுள்ள உறவுகள் சிலர் அவரை மீட்பதற்காக அடுத்தகட்ட நடவடிக்கை மேற்கொள்ள மற்றவர்கள் சிறைவாசலில் துன்பப்படுகின்றனர். சிலர் வீட்டுக்கு வந்த பின்னர் துக்கம் தாழாமல் துவண்டு விடுகின்றனர்.
ஆனால் சமூகத்தின் முன்பாக சமமாகக் கருத முடியாது சமூகம் வேறுபடுத்திப் பார்ப்பதில்லை. சொத்துக்குவிப்பு வழக்கில் சசிகலாவும் மற்ற இருவரும் மட்டும் தண்டிக்கப்பட்டு, ஜெயலலிதா விடுவிக்கப்பட்டிருந்தால் சசிகலா இளவரசிக்காக தமிழக மக்கள் கண்ணீர் விட்டிருக்கமாட்டார்கள். இவர்கள் மீது தமிழக மக்கள் எந்த வித அனுதாபமும் காட்டவில்லை.
சொத்துக்குவிப்பு வழக்கின் தீர்ப்பு



ஒருமாநிலத்தின் தலைவியான ஜெயலலிதாவுக்குரியதாக அமைந்துவிட்டதனால், தமிழக மக்கள் துவண்டார்கள். துடித்தார்கள் அவர் விடுதலையாகும் வரை கண்ணீர்விட்டார்கள் அவரை நேசிக்கவும் அவருக்கு இன்னல் நேர்ந்தால் அழுது புலம்பவும் தமிழகமக்களில் அதிகமானோர் இருக்கவே செய்தனர். ஜெயலலிதாவுடன் சசிகலாவுக்காக மக்கள் அழவுமில்லை. அவரைப்பற்றிச் சிந்திக்கவுமில்லை. ஜெயலலிதாவுக்கு ஏற்பட்ட துன்பமும்–சோகமும் தமிழக மக்கள் தங்களுக்கு ஏற்பட்டதனால் தான் ஜெயலலிதா சிறையிலிருந்து வெளிவரவேண்டும். ஜெயலலிதா எந்தக்குற்றமும் செய்திருக்கலாம் அவையாவும் எங்களுக்குப் பெரிய விடயமோ குற்றமோ இல்லை என்ற தீர்மானத்திலிருந்தார்கள்.

அம்மா என்ற மூன்றொழுத்துக்கு உள்ள சக்தி வியக்கத்தக்கதாகவேயிருந்தது. அந்த அம்மாவின் ஆட்சியை மீண்டும் இரண்டாவது தடவையாகவும் தமிழகம் அங்கீகரித்தது. அம்மாவின் துன்பங்களுக்கும் அவமானங்களுக்கும் ஆண்டவன் வழங்கிய தீர்ப்பாகவும் அமைந்தது. புரட்சிப் பெண்ணான அம்மாவின் மதிப்பு உயர்ந்தது.
17.05.2016 அன்று நடைபெற்ற தமிழக சட்டசபைத்தேர்தலில் அ.தி.மு.க. வெற்றிபெற்று மீண்டும் தமிழக முதலமைச்சராக அம்மா ஆட்சிப் பொறுப்பை ஏற்று, சரியாக ஐந்தரை மாதத்தில் தமிழக மக்களை விட்டுப்பிரிந்தார். சாதனைப் பெண்ணின் வாழ்வு முடிந்தது. சோதனைகளைச் சாதனையாக்கிய இரும்புப் பெண்ணின வாழ்வும் அரசியலும் சோதனை மிகுந்தது. அம்மாவின் சாதனைப் பயணம் ஏற்ற இறக்கங்களைக் கொண்டது.
அம்மா... அம்மா என்ற கதறல்கள் எட்டுத்திக்கிலும் ஓலமிட்டது. அம்மா எப்போது திரும்பிவருவாய்... அம்மா இல்லாத ஆட்சியா... அம்மா இல்லாத அ.தி.மு.கவா? அம்மா இல்லாத தமிழகமா..? அம்மா எங்களை விட்டு எங்கு சென்றாய்? இப்படிப்பட்ட குரல்களையே மெரீனா கடற்கரை வரைக்கும் ஓங்கி ஒலித்தது. தமிழகமும் சோகத்தில் துவண்டது. அப்பலோவிலிருந்து சுகநலத்துடன் வந்த அம்மா ஆட்சியில் அமருவாய் என எதிர்பார்த்த எங்களுக்கு விழிமூடி நீண்ட துயில் கொள்ள உயிர்பிரிந்து வந்தாய்... அம்மா எங்கள் கனவுகள் பொய்யாகிவிட்டதே அம்மாவே! எப்போது உங்களை நாம் காண்போம் அழுதனர் நடிகர்கள். அழுதனர் தொண்டர்கள். அழுதனர் தாய்குலம். தேம்பித்தேம்பி அழுதனர் தலைவர்கள். அழுதனர். ஒட்டுமொத்தமாக தமிழகமே அழுதது.
முப்பது ஆண்டுகால அரசியலில் நெருப்பாற்றில் நீந்தியவர் இறுதி ஊர்வலமாக லட்சோப லட்சம் மக்கள் மத்தியில் மக்களாற்றில் நிந்திச் சென்றார். மெரீனா கடற்கரையில் புரட்சி தலைவர் எம்.ஜி.ஆர். அருகில் புரட்சித் தலைவி அம்மா உறங்கின்றார் என்றாலும், இன்னும் பல இலட்சம் மக்கள் அம்மாவின் பிரிவைத் தாங்காது அழுது கண்ணீர் வடிக்கின்றனர். எம்.ஜி.ஆர். நினைவாலயம் முழுவதும் கண்ணீர் சொரிந்து, மலர் தூவி அஞ்சலித்து அம்மா... அம்மா என புலம்புகின்றனர். பகுத்தறிவுத்தந்தையான ஈ.வே.ரா என்ற மூன்றெழுத்துக்குரிய தலைவரால் வளர்க்கப்பட்ட அண்ணாவும், அண்ணாவினால் வளர்க்கப்பட்ட தம்பியான எம்.ஜி.ஆரும், எம்.ஜி. ஆரால் வாரிசாக அடையாளப் படுத்தப்பட்ட அம்மாவும், தமிழகத்துக்கு திராவிட ஆட்சி 50 ஆண்டுகளுக்குவித்திட்ட மூன்றெழுத்துக்குரிய மூவேந்தர்களின் ஆட்சியே! தமிழகத்தில் திராவிடக்கழகத்தின் ஆட்சிகளை எவராலும் அழிக்க முடியாத நிலையேற்பட்டது என்ற வரலாற்றுக்கு மூன்றெழுத்துக்குரிய தலைவர்கள் அண்ணா, எம்.ஜி.ஆர்., அம்மா போன்றவர்களே காரணமாகும்.



# வாசகர் திருமுகம்

## அநியாயமான உயிரிழப்புக்களை அதிகாரிகள் தடுப்பார்களா?

நாய்க்கடிக்கு இலக்கான குடும்பப் பெண்ணொருவர் அநியாயமாக உயிரிழந்ததாக வெளிவந்த செய்தி மிகுந்த கவலையை ஏற்படுத்தி விட்டது.
தற்போது தெருக்களில் கட்டாக்காலிகளாக அலைந்து திரிகின்ற நாய்களின் எண்ணிக்கை பலமடங்காகப் பெருகிவிட்டது. இந்த நாய்களில் விசர்த் தொற்றுக்கு உள்ளானவை எவையென்பதை அறிந்து கொள்ள முடியவில்லை. ஏனென்றால் இவறுக்கு விசர்த்தடுப்பு ஊசி போடப்படுவதில்லை. பொது மக்களும் சுகாதாரப் பகுதியினரும்தான் இதில் அவதானமாக இருக்க வேண்டும். குறித்த பெண், தான் விசர்நோய் பீடித்த நாயால் கடியுண்டதை அறியாத நிலையில் தான் வைத்தியசாலைக்குச் சென்றிருக்கிறார். இதனால் அது தொடர்பாக மருத்துவர்களிடம் கூறியிருக்கமாட்டார். இதனால் வளர்ப்பு நாய் கடித்துவிட்டதாக எண்ணிய மருத்துவர்கள் அதற்குரிய சிகிச்சையை வழங்கியுள்ளனர். கட்டாக்காலிகளாகத் தெருவில் அலைந்து திரிகின்ற நாய்களால் மனித உயிர்களுக்கு எப்போதுமே ஆபத்து உண்டு என்பதை உரிய அதிகாரிகள் புரிந்து கொள்ளாததுதான் இன்றுள்ள பிரச்சினையாகும்.

*பா.வரதராசன்*
*ஏழாலை*

## மர்மங்கள் துலங்க வேண்டும்

மறைந்த முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் மறைவு தொடர்பாகத் தினமும் வெவ்வேறு சந்தேகங்கள் வெளியிடப்பட்டு வருகின்றன.
ஜெயலலிதா தமிழ் நாட்டிலுள்ள ஏழுகோடி தமிழர்களின் தலைவியாக மட்டுமன்றி, உலகெங்கும் பரந்து வாழ்கின்ற தமிழர்களின் தலைவராகவும் விளங்கியவர். அவரது மறைவு சாதாரணமானதொன்றல்ல. அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நாளிலிருந்து அவரது உடல்நிலை தொடர்பாகப் பல்வேறு வதந்திகள் உலவின. ஆனால், எல்லாமே மர்மமாகவே வைக்கப்பட்டிருந்தன. அவர் மீது அன்பும் மதிப்பும், கொண்டுள்ள தொண்டர்கள் அவரது மறைவினால் ஏற்பட்ட துயரத்தை இன்னமும் அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர். எது எப்படியிருப்பினும், ஜெயலலிதாவின் சாவின் பின்னால் உள்ள மர்மங்கள் வெளிவர வேண்டும்.

*க.பரந்தாமன்*
*கிளிநொச்சி*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# பூனைக்கு மணி கட்டுமா எலிகள்?

தலைநகரில் அந்த விடுதி புகழ் பெற்றதாயிருந்தது. உள்நாட்டவர்கள் மட்டுமன்றி வெளிநாட்டவர்களும் இங்குதான் வந்து தங்குவார்கள். தினமும் வகை வகையான உணவு மற்றும் சிற்றுண்டிகள் பரிமாறப்படுகின்றமை அவர்களை அங்கு வரவழைக்கின்றன. அங்கு தற்செயலாக வந்து சேர்ந்த ஒருசில எலிகளுக்கும் அந்த உணவு வகைகளில் பிரியம் ஏற் பட்டதால் பல்கிப் பெருகி, அங்கு தங்கியிருப் போருக்குப் பெரும் தொல்லையாகி விட்டது. வாடிக்கையாளரின் வரவு குறைந்து விடக்கூடாது என்பதற்காக பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டும் அவற்றை அகற்ற முடியவில்லை.

எலிப்பொறிகளை வைத்துப் பார்த்தார்கள். இரண்டு மூன்று எலிகள் மட்டுமே பொறிகளில் அகப்பட்டன.

இந்த நிலையில் கருநிறப் பூனைக்குட்டி ஒன்று விடுதிக்குக் கொண்டு வந்து விடப்பட்டது. பூனைக்குட்டியும் அங்கு மிங்குமாக ஓடிஓடி இரவில் எலிகளைப் பிடிக்கத் தொடங்கியது. எலிகளின் பாடு பெரும்பாடாகி விட்டது. இறைவனின் படைப்பில் பூனைகளின் கால் பதங்கள் மிகவும் மிருதுவானவையாக இருந்தன. இதனால் அவை நடக்கும்போதோ ஓடும்போதோ சத்தம் கேட்பதில்லை. அத்துடன் இது கருமை நிறமான பூனை. இருளில் அதை அவதானிப்பதும் கடின மாக இருக்கும். இது எலிகளுக்கும் தெரிந்திருந்தது.

அப்போது அங்கிருந்த இளமையும்-துடிப்பும் மிக்க ஓர் எலியின் கண்களில் இரண்டு, மூன்று மணிகள் வைத்த ஒரு சிறிய தோல்பட்டி தென்பட்டது. அதை இழுத்து வந்து எலிகளின் மத்தியில் போட்டு விட்டு இந்த மணிப் பட்டியை அந்தப் பூனையின் கழுத்தில் கட்டிவிடுவோமானால் பூனை வரும்போது மணிச் சத்தம் கேட்கும். நாங்களெல்லாம் ஓடித் தப்பித்துக் கொள்ளலாம் என்று சொன்னது. நின்ற இளவட்ட எலிகள் எல்லாம் அந்த மணிப்பட்டியைத் தூக்கிக் கொண்டு அங்கு மிங்கும் ஓடிப் பார்த்தன. மணிச்சத்தம் நன்றாகக் கேட்டது. ஆகா! அருமையான யோசனைதான் என்று பாராட்டின. அப்போது அங்கிருந்த மூத்த எலியொன்று அது சரி அந்தப் பூனையின் கழுத்தில் இந்த மணிப் பட்டியைக் கட்டுவது யார்? என்று கேட்டது. நின்ற இளைய எலிகள் எல்லாம் நான் கட்டுவேன், நான் கட்டுவேன் என்று போட்டி போட்டு முன்வந்தன. கொஞ்ச நேரத்துக்கு முன் கூட்டத்தில் நின்ற இளவட்ட எலிகள் மணிப் பட்டியைத் தூக்கிக் கொண்டு ஓடியபோது எழுந்த மணிச்சத்தம் எங்கோ நின்ற பூனைக்கும் கேட்டது. மெதுவாகக் களஞ்சிய அறையை நோக்கி நகர்ந்தது. களஞ்சிய அறைக்கு முன்பாக காவலுக்கு நின்ற எலிகள் முதலில் அதன் கண்களில் பட்டது. அந்த எலியோ, மணிப் பட்டியைத் தூக்கிக் கொண்டு ஓடித்திரியும் எலிகளை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்ததால் பூனையைக் கவனிக்கவே இல்லை. திடீர் என்று அதனைக் கண்டதும் ஓடியது தலை தெறிக்க



ஏனைய எலிகளையும் எச்சரிக்கை செய்தபடி, கூட்டத்தில் நின்ற அனைத்து எலிகளும் பேய்ப் பாய்ச்சல் பாய்ந்து ஓடின. குமரன் விடுதியின் சுவருக்கு மேலாகக் குதித்து ஓடின.

"எதையும் சிந்தித்துச் செயற்பட வேண்டும். இதனைத் தான் எண்ணித் துணிக கருமம் என்றார்கள்"

*ந.திருமருகன்*

## வரலாற்றில் இன்றைய தினம்

1577 - உலகைச் சுற்றிய கடற்பயணமாக, சேர் பிரான்ஸிஸ் ட்றேக் பிளிமௌத்திலிருந்து புறப்பட்டார்.

1758 - இங்கிலாந்தின் போக்குவரத்துக் கப்பல் டியூக் வில்லியம் வட அத்திலாந்திக் கடலில் மூழ்கியதில் 360 பேர் உயிரிழந்தனர்.

1938 - நியூன்கேம் வதை முகாம் ஜேர்மனி ஹம்பேர்க் மாவட்டத்தில் திறக்கப்பட்டது.

1941 - ஹங்கேரியும் றோமானியாவும் அமெரிக்காவுக்கு எதிராக போர்ப்பிரகடனம் செய்தன.

1949 - இஸ்ரேல் சட்டவாக்க சபை நெஸெற் இஸ்ரேல் தலைநகரை ஜெருசலேத்துக்கு மாற்றுவதற்கு வாக்களித்தது.

1962 - நாஸாவால் றிப்பீற் எனும் தொடர்பாடல் செயற்கைக் கோள் விண் சுற்றுப் பாதையில் விடப்பட்டது.

1972 - அப்பரோ 17 திட்டத்தின் மூலம் சந்திரனில் கால் பதித்தனர் ஈயூஜின் சேர்னான் மற்றும் ஹரிசன் சுமிற் சந்திரனில் கடைசியாகக் கால் பதித்தவர்களாக இன்றளவும் இவர்களே உள்ளனர்.

1974 - பொது நலவாய நாடுகளுள் மோல்டா குடியரசானது.

1982 - 6.0 ரிறீ வடயேமன் நிலநடுக்கத்தில், யேமனியன் தென்மேற்குப் பகுதியில் 2800 பேர் உயிரிழந்ததுடன், 1500 பேர் காயமடைந்தனர்.

1988 - துப்பாக்கிச்சூட்டிலும், எறிகணையிலும், திருமலை அசம்பாவிதத்தில் 11 பேர் உயிரிழப்பு. சிறிலங்கா இராணுவத் தரப்பிலும் 3 பேர் சாவு.

- யாழ். மாவட்டத்தில் ஊரடங்கு இரவு 9 மணிக்கு நடைமுறைக்கு; மீன்பிடி நேரத்திலும் மாற்றம்.

1993 - களத்திலிருந்த தளபதிகள் தனது உத்தரவுக்குப் பணியவில்லையென பூநகரி தோல்வி குறித்து சிசில் வைத்தியரத்னா தெரிவிப்பு.

- அண்டவெளியில் அமெரிக்கா மீண்டும் சாதனை; விண்வெளியில் 11 தினங்கள் வரை வலம் வந்த 6 பேரும் திரும்பினர். பழுதடைந்த தொலை நோக்கி வெற்றிகரமாக இயங்குகிறது.

1999 - குடாநாட்டின் கடையோரப் பகுதியில் தாக்குதல் காரணமாக 2500 குடும்பங்கள் இடப்பெயர்வு.

2001 - இந்திய நாடாளுமன்றக் கட்டடம் சன்சாட் பவான் தீவிரவாதிகளால் தாக்கப்பட்டபோது தீவிரவாதிகள் உட்பட 12 பேர் கொல்லப்பட்டனர்.

2002 - புலிகள் ஆயுதங்களைக் கைவிடும்வரை சமாதான முயற்சிக்கு ஆதரவில்லையென கதிர்காமர் பொ.ஐ. முன்னணியின் நிலைப்பாட்டைக் கூறினார்.

- புலிகள் போரை விரும்பவில்லை. ஜேர்மன் தூதரிடம் யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் தெரிவிப்பு.

2014 - பெல்ஜியம் லீக்கில் தற்கொலைக் குண்டுத்தாக்குதலொன்றில் 6 பேர் உயிரிழந்ததுடன் 125 பேர் காயமடைந்தனர்.

## பொன்மொழிகள்

நீ எதை நினைக்கிறாயோ அதுவாக ஆகிறாய்
உன்னை வலிமை உடையவன் என்று நினைத்தால்
வலிமை படைத்தவன் ஆவாய்!

வீரர்களே,
கனவுகளிலிருந்து விழித்தெழுங்கள்! தளைகளிலிருந்து
விடுபடுங்கள்!

## வர்ணம் தீட்டுவோம் வாங்க....



சிறுவர் பக்கத்துக்கான ஆக்கங்கள், ஆலோசனைகள் வரவேற்கப்படுகின்றன. editor@uthayan.com என்ற மின் அஞ்சல் முகவரிக்கு அல்லது 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற தபால் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நட்சத்திரப் பலன்கள்

**மூல நட்சத்திரப் பலன்கள்**

அசுரசர்கள் அவதரித்த நட்சத்திரம் இதுவாகும். இந்த நட்சத்திரத்தின் அதிபதி சாயாக் கிரகமான கேது ஆகும். இதில் பிறந்தவர்கள் ஆழ்ந்த இறைபக்தி உடையவர்கள். நல்ல கல்வி கற்றவர்களாக விளங்கும் இவர்கள் கலைகளில் ஆர்வம் உடைவர்கள். அரசியலில் ஈடுபட்டுப் பெயர் புகழ் பெறுவர். முன் கோபக் காரர்கள். தாய் தந்தையர் மீது மிகுந்த பற்றும் பாசமும் உள்ளவர்கள். எப் பொழுதும் சுறுசுறுப்புடன் இருக்கும் இவர்கள் வஞ்சகமும், சூதும் சற்று நிறைந்து காணப்படுவர். மற்றவர்களின் கோபத்துக்கு இவர்கள் ஆளாவார்கள்.

**மூலம் : 1ஆம் பாதம்**

நல்ல அரசாளும் தகுதியும் திறமையும் உடைய இவர்கள் பொருளாதாரத்தில் நல்ல வளத்துடன் வாழ்வர். மூல நோயால் அவதிப்படுவர். கலகம் செய்வதில் ஆர்வம் உள்ளவர்கள். மற்றவர்களின் மதிப்பைப் பெற பணத்தை அள்ளி விடுவர். மற்றவர்களின் குற்றம் குறைகளை வெகு எளிதில் கண்டு அவர்களைப் பழி தீர்க்கும் குரூர மனம் உடையவர்கள்.

**மூலம் : 2ஆம் பாதம்**

நல்ல உயரமும் மெலிந்த தேகமும் உடைய இவர்கள் தெய்வபக்தி மிகுந்த வர்கள். மனதில் தோன்றுவதை உள்ளது உள்ளபடி உரைப்பார்கள். நல்ல உயர்பதவிகளை வகிக்கும் திறமையும் ஆற்றலும் உடையவர்கள். மக்களுக்கு சேவையாற்றும் விருப்பம் உள்ளவர்கள். எவரையும் தூக்கி எறிந்து பேசுவர்.

**மூலம் : 3ஆம் பாதம்**

கடவுள் பக்தி குறைவான இவர்கள் தம் குலத்துக்கு ஒவ்வாத காரியங்களைச் செய்து அதனால் அவமானப்படுவர். தாய் தந்தையர் மேல் பற்றுக் குறைவான இவர்கள், சமூகத்தில் பிரபலத்துடன் விளங்குவர். பணத்தைத் தண்ணீராகச் செலவழிப்பர். இரட்டை வேடம் போட்டுப் பேசுவதில் வல்லவர்கள்.

**மூலம் : 4ஆம் பாதம்**

மிகப்பெரிய பதவிகளை அடைய முயற்சி செய்வர். கோபத்தை அடக்கும் ஆற்றல் உடையவர்கள். எதி ரிகளை வெல்லும் திறன் உடையவர்கள். தாதாவான இவர்களுக்கு கை, கால், கழுத்து இவற்றில் கட்டிகள் ஏற்பட்டு விலகும். முன் னோர்களுடைய சொத் துக்களை அடையும் பாக்கி யம் பெற்றவர்கள்.

**நாளை**
**கார்த்திகை-29**
புதன்கிழமை -14.12.2016
திதி: பிரதமை பி.இ.04.41
நட்சத்திரம்: மிருகசீருடம் மு.இ.09.04
ராகுகாலம்:12.21-01.51 வரை
சுபநேரம்:04.51-06.21 வரை
விநாயக விரதாரம்பம்

# புதிய நல்லாட்சி அரசும் தமிழர்களை ஏமாற்றப் போகின்றதா?

நல்லிணக்கம் பற்றிய சிந்தனையுடன் கைகோத்த புதிய அரசும் கடந்தகால மகிந்த ராஜபக்ச அரசைப் போன்று தான் செயற்படுகின்றது என அரசியல் ஆய் வாளர்கள் மற்றும் தமிழ் அரசியல் தலைவர்கள் கடந்த காலங்களில் விமர்சித்திருந்தனர். வடக்கு மாகாணத்தில் நிலை கொண்டுள்ள படையினர் வெளியேறாமை மக் களுடைய காணிகள் விடுவிக்கப்படாமை, தமிழ் மக் களுடைய பூர்வீக நிலங்களில் முளைக்கும் புத்தர் சிலை கள் அகற்றப்படாமை, அவற்றைக் கட்டுப்படுத்தாமை, அரசியல் கைதிகள் விடுவிக்கப்படாமை, காணாமற் போனவர்கள் கண்டறியப்படாமை, காணாமற்போகச் செய்தோர் இனங் காணப்பட்டுத் தண்டிக்கப்படாமை, இனப் படுகொலைக்கு நீதி கிடைக்காமை, பயங்கரவா தத் தடைச் சட்டத்தை நீக்காமை, தெற்கில் உள்ள உரி மைகள் வடக்கில் மறுக்கப்படுகின்றமை போன்றவற் றைக் கடந்த கால அரசைச் சார்ந்தவர்கள் எவ்வாறு கையாண்டார்களோ அதேநிலையில்தான் இந்தப் புதிய அரசும் செயற்படுவதாக அவர்கள் கடுமையாக விமர்சித்தார்கள்.

இவ்வாறான விமர்சனங்களுக்கு மத்தியில் புதிய அரசு என்று கூறப்படும் மைத்திரி-ரணில் இணைந்த அரசு வடக்கில் குறிப்பாக யாழ்ப்பாணத்தின் வலி. வடக்கில் இராணுவத்தினருடைய கட்டுப்பாட்டில் இருந்த சில ஏக்கர் காணிகளை விடுவித்தது. முகாம்களில் தங்கியுள்ள மக்களில் ஒரு தொகுதியினருக்கு வீடுகளை அமைத்துக் கொடுத்தது. இராணுவத்தினருடைய கட்டுப்பாட்டில் இருந்த ஒரு சில பாடசாலைகளை விடுவித்தது. இதை விட வடக்கில் சில தேசிய நிகழ்வுகளை நடத்தியது. இவையே வடக்குக்கான புதிய அரசின் நல்லிணக்க முயற்சிகளாக அமைந்தன. தற்போது இந்தப் புதிய அரசு "பழைய குருடி கதவைத் திறவடி" என்பது போன்று ஆகிவிட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. மன்னாரில் கடற்படையினரால் மீனவர்கள் கைது செய்யப்பட் டமை, பல்கலைக்கழக மாணவர்கள் துப்பாக்கி சூட்டுக்கு இலக்காகிச் சாவடைந்தமை, அண்மையில் இடம்பெற்ற மனித உரிமைகள் தினத்தின்போது ஊர்வலமாகச்சென்ற வர்கள் புலனாய்வாளர்களால் ஒளிப்படம் எடுக்கப்பட் டமை, ஊடகவியலாளர்களை அச்சுறுத்துவது, அவர்களு டைய அடையாள அட்டைகளைப் பறிமுதல் செய்வது போன்ற பல விடயங்கள் இந்த அரசு மீதும் விமர் சனங்களை ஏற்படுத்தியுள்ளது. இந்த நிலையில் புதிய அரசு நல்லிணக்க முயற்சியில் ஈடுபட்டுள்ளது என்று கூறும்போது, அதைத் தமிழ் மக்கள் ஏற்பார்களா? என்ற சந்தேகமும் எழுந்துள்ளது.

மகிந்த அரசைப் போன்றுதான் இந்த அரசினுடைய செயற்பாடுகளும் அமையப் போகின்றது என்றால், அது சிறுபான்மை இனங்களான தமிழ், முஸ்லிம் மக்களை மீண்டும் ஒரு போராட்டத் துக்குத் தள்ளிவிடுவதாகவே அமையும். தமிழ்த் தேசியக்




கூட்டமைப்பினர் தமிழ் மக்களுக்கு ஏற்ற தீர்வை இந்த அரசு தரும் என எதிர்பார்ப்பதாகப் பலமுறை கூறியிருக் கின்றார்கள், பல மேடைகளிலே முழங்கித் தள்ளியிருக் கின்றார்கள், பிரச்சினைக்கான தீர்வு அடுத்த ஆண்டு கிடைக்கும் என்றும் கூறியிருக்கின்றர்கள். இது வடக்கு-கிழக்கு மக்களுக்கு ஓரளவு ஆறுதல் தருவதாக இருந் தாலும் கூட, இந்தக் கருத்துக்கள் பொய்த்து விடலாம் என்ற சந்தேகங்கள் மக்கள் மத்தியில் எழுந்துள்ளதை எவராலும் மறுக்க முடியாது. கல்லில் நார் உரிக்கும் முயற்சியாக இது அமைந்துவிடக்கூடாது என்பதில் பலர் அக்கறையுடன் செயற்படுகின்றனர். எனவே புதிய அரசால் தயாரிக்கப்பட்டு வர இருக்கும் புதிய அரச மைப்பு, தமிழ் மக்களுடைய-சிறுபான்மை மக்களுடைய சுய நிர்ணய உரிமைகளுடன் கூடிய சமஷ்டி முறையி லான தீர்வை வலியுறுத்துவதாக அமைய வேண்டும். இல்லையேல் அது பல ஆபத்துக்களை ஏற்படுத்துவ தாகவே அமையும் என்பதை மறைப்பதற்கில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவநாயகம் தேவானந்த்

இந்தியா உலகின் மகிப்பெரிய ஜனநாயக நாடென்று தன்னைப் பறைசாற்றிக் கொள்கிறது. அதுவே அதன் பலம் என்றும் சொல்லப்படுகிறது. இந்திய அரசமைப்பு பன்முகத் தன்மை கொண்டதாகவும் அனைத்து மதம், மொழி மற்றும் இனங்கள் பாதுகாப்பாக வாழ்வதற்கான அம்சங்களையும் கொண்டிருப்பது சொல்லப்படுகிறது. இந்திய அரசியல் அமைப்பின் சிறப்புக்கு எடுத்துக்காட்டாக இந்திய மக்கள் தொகையில் இரண்டு வீதமக்கள் தொகையைக் கொண்ட சீக்கியரில் ஒருவரான மன்மோகன் சிங் நாட்டின் அதியுயர் பதவியான பிரதமர் பதவியை வகித்ததும், சாதாரண குடும்பத்தைச் சார்ந்த நரேந்திரமோடி பிரதமராக முடிந்ததும் குறிப்பிடப்படுகின்றது. இருந்தாலும் சுதந்திரத்துக்குப் பின்னரான இந்தியாவில் ஒரு அந்தலையிலிருக்கின்ற காஷ்மீர் தொடக்கம் மறுகரையில் இருக்கின்ற கன்னியாகுமரி வரைக்கும் உள்ள எல்லா மாநிலங்களிலும் மத்திய அரசிலும் குடும்ப ஆட்சியே ஆக்கிரமித்திருக்கின்றது என்பது வெளிப்படையான உண்மை. மன்னர்களின் ஆட்சியில் மன்னன் தன் வாரிசுகளை பட்டத்தில் இருத்துவது போன்று ஜனநாயக இந்தியாவில், ஜனநாயகக் கட்சிகள் என்று சொல்லப்படுகின்ற கட்சிகள் அனைத்திலுமே தந்தைக்குபின் தனையன்; சிலவேளைகளில் மகள், மனைவி என்று வாரிசுகளிடம் தலைமையைக் கையளிக்கும் போக்கே மேலெழுந்து காணப்படுகின்றது.



# தோழி-சசிகலா ஜெயலலிதாவைக் காத்தாரா? ஆழித்தாரா?

7

“சசிகலா எனது சகோதரி போன்றவர். அவரிடம் எனது மனதில் உள்ள பல விடயங்களையும் நான் பகிர்ந்து கொள்வேன். என்தாய் இப்போது உயிரோடு இருந்தால் என்னை எவ்வாறு பார்த்துக் கொள்வாரோ? அவ்வாறு சசிகலா என்னைப் பார்த்துக்கொள்கிறார்.

**வாரிசு அரசியல்**

இந்தியாவின் முதலாவது பிரதமரான நேரு தன் வாரிசான இந்திராகாந்தியிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைக்கக் கூடியதாக கட்சியில் நிலைமைகளை உருவாக்கினார். அதன்பின் இந்திராகாந்தி சுடப்பட்டு சாவடைந்த பின்னர் ராஜீவ் காந்தியை அழைத்து வந்து நேரு பரம்பரையின் சொத்தாக காங்கிரஸை வைத்துக் கொள்ள முயற்சிகள் கனகச்சிதமாக மேற்கொள்ளப்பட்டன. ராஜீவ் சாவின் பின்னர் அவர் மனைவி சோனியா, அவரின் பின்னர் இப்போது ராகுல் காந்தி என்று இந்த வாரிசு அரசியல். இந்தியத் தேசிய அரசியலில் இன்றும் நீண்டு செல்கிறது. தென் இந்தியாவைப் பொறுத்த மட்டில், இந்த வாரிசு அரசியல் மிகமோசமான நிலையில் உள்ளது எனலாம். தமிழ் நாட்டில் இந்த நிலைமை மிகப்பெரிய திராவிடக் கட்சியான தி.மு.கவில் காணப்படுவது வெளிப்படையானது. இந்த அரசியலை மீறி தமிழ் நாட்டு அரசியல் இல்லை என்பதற்கு எடுத்துக்காட்டாகவன்னியர்களின் கட்சியான பாட்டாளி மக்கள் கட்சி தனது அடுத்த தலைவராக அதன் தற்போதைய தலைவர் டாக்டர் ராமதாஸின் மகன் அன்புமணி ராமதாஸை நிலை நிறுத்தியதிலிருந்து புலனாகிறது. பட்டாலி மக்கள் கட்சியை உருவாக்கிய ராமதாஸ் “நான் எனது குடும்பத்தினரைக் கட்சிக்குள் கொண்டு வர மாட்டேன் என்று உறுதியளித்திருந்தார். பின்னர் தனது வாரிசிடம் கட்சியைக்கொடுக்கும் அளவுக்குஅவரது அரசியல் பயணம் அமைந்தது. வாரிசு அரசியலில் இரண்டு நிலமைகள் காணப்படுகின்றன. ஒன்று தலைவரின் வாரிசு தலைவரோடு அரசியல் பயணத்தில் சேர்ந்து பயணித்து, தலைவரின் மறைவின் பின்னர் - அல்லது இயலாமையின் பின்னர்-தலைமைப் பதவியை எடுத்துக்கொள்வது. இன்னொன்று தலைவரின் சாவின்பின் அதுவரை அரசியலில் ஈடுபடாத வேளைகளில், மனைவி திடீரென அரசியலில் நிறுத்தப்படுவது. இது ஓர் அபத்தமான வெட்கக்கேடான விடயமாயினும் இந்தியாவில் அது சகஜமாக நடைபெறுகின்றது. மக்களும் அதனை ஏற்றுக்கொள்கிறார்கள். இதற்கு முக்கியமான காரணம் தலைவர்கள் தங்கள் வாரிசுகளின் வரவுக்காகக் கவனமாகத் திட்டமிட்டு இரண்டாம் நிலைத் தலைவர்களை உருவாகாமல் பார்த்துக் கொள்வதைக் குறிப்பிடலாம்.

**அரசியல் பண்பாடு**

இந்த அடிப்படையில் அதாவது இந்திய அரசியல் பண்பாட்டை அடிப்படையாகக் கொண்டு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமைகளைக் கையளிக்கும் பண்பாட்டைப் பார்த்தால் அது சற்று வித்தியாசமானது. எம்.ஜி.ஆர். தனக்குப் பின்னர் தனது அரசியல் வாரிசு எவர் என்பதை கோடி காட்டாமலே இறந்து போனார். அவரின் இறப்பின் பின்னர் இந்திய அரசியல் பண்பாட்டு வழக்கப்படி எம்.ஜி. ஆரின் மனைவி அரசியலுக்கு வந்தார். ஆனால். அவரால் ஜெயலலிதா என்ற பெரும் அலையின் முன்னால் நிலைத்து நிற்க முடியவில்லை. இருப்பினும் எம்.ஜி.ஆர். இன் மிக நெருக்கமான அன்புக்குரியவரான ஜெயலலிதா அவர் அரசியல் வாரிசு என்று சொல்லிக் கொண்டு, கட்சியின் தலைமைப் பதவியைக் கைப்பற்றினார். பின்னர் எம்.ஜி.ஆர். போன்றே அவர் பாணியில் ஜெயலலிதாவும் தனது அரசியல் வாரிசை அறிவிக்காமலேயே இறந்து போனார். ஆனால் ஜெயலலிதா தனக்கான தனிப்பட்ட குடும்பத்தைக் கொண்டிருக்காத காரணத்தினால், தனது இரத்த உரித்து வாரிசுகளைக் கொண்டிருக்கவில்லை. மாறாகத்தான் வாழ்வதற்காகத் தோழியை நம்பியிருக்க வேண்டியவரானார். அந்தத் தோழி அ.தி.மு.க. வரலாற்றில் முக்கிய பாத்திரமாக உருவாகியுள்ளார். இப்போ இந்திய அரசியலில்அதிமு கழகம் புதிய அரசியல்வாரிசை உருவாக்கியிருக்கிறது.ஜெயலலிதாவுக்குக்குடும்பமில்லாததால் அவரது வாழ்வில் முக்கிய பாத்திரமாக தோழி சசிகலா உருவானார். அதன் வழி தோழியின் குடும்பம் அ.தி.மு.கவின் அரசியல் வாரிசு களாகத் தம்மை இனங்காட்டி நின்றன-நிற்கின்றன-எனலாம்.

**ஜெயலலிதாவுடன் சசிகலா எப்படி ஒட்டிக் கொண்டார்?**

ஜெயலலிதாவின் நிழலாகத் தொடர்ந்த சசிகலா அவரைக் காத்தார் என்றும்-அவரே ஜெயலலிதாவின் அழிவின் கர்த்தாவென்றும் வலுவான இரண்டு வாதங்கள் இருக்கின்றன. சசிகலா நடராஜனுக்கு (வயது-60) ஆகிறது.

**சசிகலாவின் தோற்றம்**

தஞ்சை மாவட்டம் மன்னார் குடியைச் சேர்ந்தவர். கள்ளர் என்னும் பலம் பொருந்திய பிற்படுத்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தவர். சாதாரண குடும்பத்தில் பிறந்த அவர், தமிழக அரசின் மக்கள் தொடர்பு அதிகாரியாக இருந்து, எம். நடராஜன் என்பவரைத் திருமணம் செய்து கொண்டார். 1980களில், சசிகலா ஒரு வீடியோக் கடையை நடத்திவந்ததாகக் கூறப்படுகிறது. நடராஜன் மூலமே சசிகலாவுக்கு ஜெயலலிதாவின் அறிமுகம் கிடைத்திருக்கின்றது.

ஆரம்பத்தில் வீட்டில் தனியே இருந்த ஜெயலலிதாவுக்கு வீடியோ இறுவட்டுக்களைக் கொண்டு சென்று கொடுத்து வந்துள்ளார் சசிகலா. பின்னர் ஜெயலலிதா கலந்துகொண்ட அ.தி.மு.க. பொதுக் கூட்டங்கள் மற்றும் நிகழ்ச்சிகளை வீடியோ பதிவு செய்யும் வேலையைப் பொறுப்பேற்றுசெய்திருக்கிறார். இப்படியாக இருவருக்குமிடையிலான நட்பு மலர்ந்து, பின்நாள்களில் இருவரும் பிரிய முடியாத தோழிகளாயினர். எம்.ஜி.ஆரின் மறைவுக்குப் பிறகு அ.தி.மு.க வின் ஜெயலலிதா பிரிவு என்ற அணியை ஜெயலலிதா தலைமை தாங்கிவந்த காலத்தில், சென்னை போயஸ் கார்டன் பகுதியில்உள்ள ஜெயலலிதாவின் வீடான வேதா இல்லத்தில் சசிகலா நிரந்தரமாகக் குடியேறினார். சில காலத்திலேயே ஜெயலலிதாவுக்கும், சசிகலாவின் கணவர் நடராஜனுக்கு இடையே ஏற்பட்ட மனக்கசப்பால், நடராஜன், ஜெயலலிதாவின் போயஸ் தோட்ட வீட்டை அணுகுவதிலிருந்து தடை செய்யப்பட்டார். இருந்தாலும் சசிகலா மட்டும் ஜெயலலிதாவின் தோழியாக, ஜெயலலிதாவின் வீட்டிலேயே இருந்து வந்தார்.

“சசிகலா எனது சகோதரி போன்றவர். அவரிடம் எனது மனதில் உள்ள பல விடயங்களையும் நான் பகிர்ந்து கொள்வேன். என்தாய் இப்போது உயிரோடு இருந்தால் என்னை எவ்வாறு பார்த்துக் கொள்வாரோ? அவ்வாறு சசிகலா என்னைப் பார்த்துக் கொள்கிறார்.” என்று சசிகலா குறித்து, ஒருமுறை ஊடகங்களிடம்பேசியபோது, ஜெயலலிதா தெரிவித்தார்.

பின்னர் சசிகலாவின் உறவினர்கள் பலரும் அ.தி.மு.கவில் செல்வாக்கு மிகுந்தவர்களாகினார்கள்.சசிகலாவின் அக்கா மகன் டி.டிவி. தினகரன் அ.தி.மு.கவின் செல்வாக்கு மிகுந்த நாடாளுமன்ற உறுப்பினராக வலம்வந்தார். டி.டிவி. தினகரன் மூலமாகவே தற்போதைய தமிழக முதல்வர் ஓ.பன்னீர்செல்வத்துக்கு ஜெயலலிதாவின் அறிமுகம் கிடைத்தது.

சசிகலாவின் மற்றும் அவரது உறவினர்களின் தலையீடுகள் கட்சியிலும், ஆட்சியிலும் அதிகமாக இருந்ததாக அரசு அதிகாரிகள், அ.தி.மு.கவினர் மற்றும் ஊடகங்களில்பலமுறை புகார் எழுந்ததுண்டு.

**அ.தி.மு.கவிலிருந்து நீக்கப்பட்ட சசிகலா**

கடந்த 1996ஆம்ஆண்டுநடந்தசட்டமன்ற மற்றும் நாடளுமன்றத் தேர்தலில் அ.தி.மு.க. தோல்வி அடைந்தது. அதற்கு சசிகலா குடும்பம் தான் காரணமென்று ஜெயலலிதா அவர்களை ஒதுக்கிவைத்தார். பின்னர் 2011 டிசெம்பர் 11ஆம் திகதியன்று எவரும் எதிர்பாராத வகையில் தனக்கும்-தனது ஆட்சிக்கு எதிராகச் சசிகலாவின் குடும்பத்தினர் சில முயற்சிகளில் ஈடுபடுவதாகத் தெரிவித்த ஜெயலலிதா, சசிகலாவைத் தனது போயஸ்தோட்ட இல்லத்திலிருந்து வெளியேற்றினார். சசிகலா உட்பட பத்துக்கும் மேற்பட்ட அவரது குடும்பத்தினரைக் கட்சியின் அடிப்படை உறுப்பினர் பதவியில் இருந்து நீக்கி, ஜெயலலிதா அறிவிப்பை வெளியிட்டார். இந்தப் புலனாய்வுத் தகவலை அப்போது குஜராத்தின் முதலமைச்சராக இருந்த மோடியின் புலனாய்வுப் பிரிவினர் தான் அறிந்து சொன்னதாகவும் ஒரு கதையுண்டு. பின்னர், அதற்கு மூன்று மாதங்களுக்குப் பின்னர், சசிகலா வெளியிட்ட அறிக்கையில், தனது உறவினர்கள் என்றும்-நண்பர்கள் என்றும்-கூறிக்கொண்டு, சிலர் ஜெயலலிதாவுக்கு எதிரான நடவடிக்கையில் ஈடுபட்டது மிகப்பெரிய துரோகம் என்றும், ஜெயலலிதாவுக்கு துரோகம் செய்தவர்கள் தனக்குத் தேவையில்லை என்றும் குறிப்பிட்டிருந்தார். அதனை ஏற்றுக்கொண்ட ஜெயலலிதா, தனது தோழி சசிகலாவுக்கு எதிராக எடுக்கப்பட்ட ஒழுங்கு நடவடிக்கைகளை இல்லாமல் செய்வதாக அறிவித்தார். அதேநேரத்தில், சசிகலாவின் கணவர் நடராஜன் உட்பட அவரது உறவினர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளில் எந்த மாற்றமும் இல்லை என்றும், கட்சித் தொண்டர்கள் அவர்களோடு எந்தத் தொடர்பும் வைத்துக் கொள்ளக்கூடாது என்றும் ஜெயலலிதா அறிவித்தார்.

ஜெயலலிதாவைத் தானே பாதுகாப்பதாகக் கூறிக்கொண்டு, சசிகலா அவருக்குத் தீமை செய்தார் என்று ஜெயலலிதாவின் அண்ணன் மகள் தீபா குற்றஞ்சாட்டுகிறார். ஜெயலலிதாவின்சொந்தபந்தங்கள்மற்றும்கட்சியினர்ஜெயலலிதாவை அணுகவிடாதபடி சசிகலா தடுத்தார் என்ற குற்றச்சாட்டுக்கள் அவர் மீது உண்டு. ஜெயலலிதா நோய் வாய்ப்பட்டு அப்பலோ மருத்துவமனையில்சேர்க்கப்பட்டு 75நாள்கள் இருந்த போது அவரது உண்மை நிலவரம் தொடர்பான தகவல்கள் எதுவும் வெளிவரவில்லை. அந்தளவுக்கு இரகசியம் பேணப்பட்டது. இன்றைய நவீன தகவல்தொடர்பாடல்முறையில், இது ஆச்சரியமாக நோக்கப்பட்டது. இந்த இரகசியம் பேணலுக்கு சசிகலாவே காரணம் என்று சொல்லப்படுகிறது. இதனால் ஜெயலலிதாவின் சாவில் மர்மங்கள் உண்டு என்றும் கூறப்படுகின்றது.

ஜெயலலிதாவின் சாவின் மர்மத்தைத் துலக்குமாறு நடிகை கௌதமி பிரதமர் நரேந்திர மோடிக்குக் கடிதம் ஒன்றை எழுதியுள்ளார். ஜெயலலிதாவின் இறுதி நிகழ்வுகளில் அவரால் ஒதுக்கிவைக்கப்பட்ட சசிகலாவின் உறவினர்கள் சூழ்ந்திருந்ததும், கட்சியின் முக்கியமானவர்களை அருகில் அனுமதிக்காததும், இந்தக் குற்றச்சாட்டுக்களுக்கு வலுச்சேர்க்கும் காரணங்களாகின்றன. இந்த மர்மமுடிச்சுக்கள் அவிழுமா? என்று பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும். ஆண்கள் பலரை ஆட்டிவைத்து, அவர்களைத் தன் காலில் விழவைத்த ஜெயலலிதா தனது தோழியால் தோற்கடிக்கப்பட்டாரா? என்ற கேள்விக்குக் காலம் தான்பதில் சொல்ல வேண்டும். ஜெயலலிதா உண்மையில் எவ்வாறான பெண் தலைவர் என்பதை அடுத்த தொடரில் பார்க்கலாம்.

*(தொடரும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரஜினிகாந்துக்கு பிரதமர் மோடி வாழ்த்து



நடிகர் ரஜினிகாந்தின் 66 ஆவது பிறந்தநாளான நேற்று பிரதமர் நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்தார். தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதா, பத்திரிகையாளர் சோ ஆகியோரின் மறைவையடுத்து, தனது பிறந்தநாளை கொண்டாடப் போவதில்லை என்று சமீபத்தில் அறிவித்திருந்தார். இதேநேரம் தனது பிறந்தாளை பெரிய விழாவாக கொண்டாட வேண்டாம் என்று ரசிகர்களையும் அறிவுறுத்தி இருந்தார்.

இந்த நிலையில், பிரதமர் நரேந்திர மோடி ரஜினிகாந்துக்கு பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்தார். இதுதொடர்பாக, தனது டுவிட்டர் பக்கத்தில் அவர் வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில், சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்துக்கு பிறந்தநாள் வாழ்த்துக்கள்!, நல்ல ஆரோக்கியத்துடன் நீண்டநாள் வாழ வாழ்த்துகிறேன் என குறிப்பிட்டுள்ளார்.

இதேபோல், மத்திய மந்திரி பொன்.ராதாகிருஷ்ணன், கிரிக்கெட் வீரர் விரேந்திர வோக் உள்ளிட்ட பல்துறை பிரபலங்களும் ரஜினிகாந்துக்கு வாழ்த்துக்களை தெரிவித்தனர்.

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 6 | | | 2 | 4 | | |
| | | | | | 5 | | | 9 |
| | 3 | | | 7 | | | | |
| | 2 | | 3 | | | | 1 | |
| | | | 1 | | | 6 | | 7 |
| 8 | | | 7 | 6 | | | | |
| 4 | | | | | 3 | 8 | | |
| | | 5 | | | | | | 1 |
| 9 | | | 5 | | | 7 | | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 5 | 1 | 8 | 9 | 3 | 7 | 2 | 4 |
| 4 | 2 | 8 | 7 | 6 | 5 | 3 | 9 | 1 |
| 3 | 7 | 9 | 2 | 4 | 1 | 8 | 5 | 6 |
| 2 | 8 | 3 | 1 | 7 | 6 | 5 | 4 | 9 |
| 1 | 4 | 6 | 9 | 5 | 8 | 2 | 3 | 7 |
| 5 | 9 | 7 | 3 | 2 | 4 | 6 | 1 | 8 |
| 7 | 6 | 5 | 4 | 3 | 9 | 1 | 8 | 2 |
| 9 | 1 | 2 | 5 | 8 | 7 | 4 | 6 | 3 |
| 8 | 3 | 4 | 6 | 1 | 2 | 9 | 7 | 5 |

சார்... 35 மார்க் வாங்கியும் ஏன் சார் என்னை பெயில் ஆக்கினீங்க...



டேய் மூதேவி... நீ வாங்கின 35 மார்க் எல்லாப் பாடங்களையும் சேத்து...

சார் நான் நாலு தடவை தற்கொலைக்கு முயற்சி பண்ணினேன். ஆனாலும் சாகல...



பேசாம ஒரு தடவை அப்பலோ போய் பாரேன்...

"என்ன கவலையா இருக்க"
"சொந்தத்தில கல்யாணம் பண்ணிக்கக் கூடாதுன்னு டாக்டர் சொல்றார்"



"அதுனால என்ன அந்நியத்தில பண்ணிக்க வேண்டியது தானே "
"கட்டிக்கிட்டதுக்கு அப்புறம் அவ எனக்கு சொந்தமாயிடுவாளே"

கணக்கு ரீச்சர்:
"நேர்கோடு" என்றால் என்ன?
முருகேசு:
ஒரு "புள்ளி" வோக்கிங் போனால் அது தான் ரீச்சர் "நேர்கோடு"
கணக்கு ரீச்சர்:
ஓ... நல்லா இருக்கே! அப்படின்னா "இணை கோடுகள்" என்றால் என்ன?
முருகேசு:
அந்த "புள்ளி" தன் கேர்ல் ஃப்ரெண்டையும் கூட்டிகிட்டு வோக்கிங் போனால் அது தான் "இணை கோடுகள்" ரீச்சர்...

சுடோக்கு ஒரு எண் விளை யாட்டு. தர்க் கரீதியான ஒழுங்கு படுத் தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற் கனவே நிரப்பப் பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப் படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

**மேடம்:** பிறருக்கு உதவுகின்ற எண்ணம் அதிகரிக்கும். தொழில் வியாபார வளர்ச்சிக்கான வாய்ப்பு கிடைக்கும். ஆதாயம் பன்மடங்கு அதிகரிக்கும். குடும்பத்தில் சுபநிகழ்ச்சி நடத்த திட்டமிடுவீர்கள்.

**இடபம்:** பேச்சில் அன்பும், பண்பும் நிறைந்திருக்கும். விலகிய உறவினர் அன்பு பாராட்டுவர். தொழில், வியாபாரத்தில் நிலுவைப்பணி நிறைவேறும். எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்குவர்.

**மிதுனம்:** குடும்பத்தினருடன் வாக்குவாதம் செய்ய நேரிடலாம். தொழில், வியாபாரத்தில் இருக்கிற அனுகூலத்தைப் பாதுகாப்பது நல்லது. லாபம் சுமாராக இருக்கும். வாகனப் பயணத்தில் மிதவேகத்தைப் பின்பற்றவும்.

**கடகம்:** உங்களது நற்செயலை பிறர் ஏளனம் செய்யலாம். தொழில், வியாபாரத்தில் இலக்கு நிறைவேற கால அவகாசம் தேவைப்படும். லாபம் சுமார். பெண்கள் வீட்டுச் செலவுக்காக கடன் வாங்க நேரிடலாம்.

**சிங்கம்:** கடந்தகால பணிகளுக்கான நற்பலன் தேடிவரும். தன்னம்பிக்கையுடன் செயல்படுவீர்கள். தொழில் வியாபாரத்தில் வருமானம் திருப்தியளிக்கும். உறவினர் இல்ல சுப நிகழ்ச்சியில் கலந்து கொள்வீர்கள்.



**கன்னி:** உறவினரின் ஆதரவு கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்திப் பணியை நிறைவேற்றுவீர்கள். லாபம் உயரும். மனைவியின் விருப்பம் அறிந்து நிறைவேற்றுவீர்கள். இஷ்ட தெய்வ வழிபாடு இனிதாக நிறைவேறும்.

**துலாம்:** பணியில் மட்டும் கவனம் செலுத்துவது நல்லது. தொழில் வியாபாரத்தில் லாபம் சுமாரான அளவில் இருக்கும். விரிவாக்கப் பணிக்காக கடன் வாங்குவீர்கள். பிராணிகளிடம் இருந்து விலகியிருப்பது நல்லது.

**விருச்சிகம்:** நண்பர்களுக்கு உதவி செய்து மகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் போட்டி அதிகரிக்கும். லாபம் சுமாராக இருக்கும். வாகனப் பயணத்தால் இனிய அனுபவம் பெறுவீர்கள். அரசியல்வாதிகள் செல்வாக்குடன் திகழ்வர்.

**தனுசு:** உறவினரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி ஏற்படும். லாபம் திருப்தியளிக்கும். பணக்கடனில் ஒருபகுதியை செலுத்துவீர்கள். விருந்து விழாவில் பங்கேற்பீர்கள்.

**மகரம்:** நண்பரால் சிரமத்திற்கு ஆளாகலாம். தொழில், வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். பெண்களுக்கு வீட்டுச் செலவுக்கான பணத்தேவை அதிகரிக்கும். பிள்ளைகளின் செயல்பாடு நிம்மதிக்கு வழிவகுக்கும்.

**கும்பம்:** நீண்டநாள் எதிர்பார்ப்பு நிறைவேறும். தொழில் வியாபாரத்தில் வருமானம் திருப்தியளிக்கும். பெண்கள் வீட்டுக்கு தேவையான ஆடம்பர பொருள்கள் வாங்குவர். உறவினர் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும்.

**மீனம்:** மனதில் குளறுபடி ஏற்பட்டு விலகும். தொழில், வியாபாரத்தில் மிதமான ஆதாயம் கிடைக்கும். பணியாளர்களுக்கு விண்ணப்பித்த கடனுதவி கிடைக்கும். மாணவர்கள் ஆர்வமுடன் படிப்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஒற்றைக் காப்புகள் அறிமுகமாகி யுள்ளன. அகலமான பகட்டான இவை, ஒற்றைக்காப்புகளாக அணியத் தகுந்தவை. இந்தவகைக் காப்பு ஒன்று 900 ரூபா வுக்கு விற்பனை செய்யப்படு கின்றது.

## குருதியை சுத்தமாக்கக் கூடிய சில இயற்கை வைத்திய முறைகள்

குருதி சுத்தமில்லாமல் இருந்தால் உடல் அசதி, காய்ச்சல், வயிற்றுப் பொருமல், சுவாசக் கோளறுகள் போன்றவை உண்டாகலாம். அதனால் உடலின் அடிப்படைச் சக்தியான குருதியைச் சுத்த மாக வைத்துக்கொள்வது அவசிய மாகும்.



முருங்கைக் கீரையை துவரம் பருப்புடன் சமைத்து ஒரு முட்டையை உடைத்து கிளறி நெய் சேர்த்து 41 நாள்கள் சாப் பிட்டு வர குருதி விருத்தியா கும்.



விளாம்பழம் சாப் பிட்டால் குருதியி லுள்ள கிருமிகள் அழிந்துபோகும். உடலில் உள்ள குருதி சுத்தமில் லாமல் இருந்தால் உடல் அசதி, காய்ச்சல், வயிற் றுப் பொருமல், சுவாசக் கோளறு கள் போன்றவை உண்டாகலாம். அதனால் உடலின் அடிப்படைச் சக்தி யான குருதியைச் சுத்தமாக வைத் துக்கொள்வது அவசியமாகும்.



நாவற்பழத்தைத் தினமும் சாப்பிட் டால் குருதி சுத்த மாகும்.



தக்காளிப் பழம் சாப்பிட்டு வந்தால் குருதி சுத்தமா கும். ஆனால், வாத நோய் உள்ளவர்கள் தவிர்த்தல் நல்லது.



திராட்சைப் பழத்தைக் கழுவிச் சாப்பிட்டு வந்தால், சுரத்தைத் தணித்து மலச்சிக் கலைப் போக்கி குருதி சுத்தமடையும்.

ஒரு டம்ளர் ஆப்பிள் பழச்சாறு எடுத்து அதில் கரட் சாறு மற்றும் இஞ்சிச்சாறு கலந்து குடித்து வந்தால் உடற் சோர்வு குறைந்து குருதி சுத்தம் பெறும். உடற்பலம் அதி கரிக்கும்.



இலந்தைப் பழம் சாப்பிட்டால் குருதியை சுத்தம் செய்வது மட்டு மல்லாமல், சுறுசுறுப்பாகவும் வைத்துக்கொள்ளும். பசியையும் தூண்டும் தன்மை கொண்டது.





இஞ்சிச் சாறுடன் தேன் கலந்து சாப்பிட்டால் குருதி சுத்திப்படுத் தப்படுகிறது.




1 தலையின் பின்பகுதியின் அடியில் இருந்து, பிரஞ்சு அல்லது டச் பின்னலைப் பின்னுக.
2 தலையின் உச்சிப் பகுதி வந்தவுடன், பின்னலை நிறுத்தி வூல் பான்ட் இட்டுக் கொள்ளவும். இதுவும் பொனிரெய்ல் அலங்காரமாகும் ஆகும்.
3, 4 பொனிரெய்ல் இட்ட முடியை விரும்பியபடி கொண் டையாகக் கட்டிக்கொண்டால் இன்னுமொரு அலங் காரமாகும்.

## வெங்காய வடகம்

**தேவையான பொருள்கள்**

சோறு - 300 கிராம்
வெங்காயம் - 200 கிராம்
சீரகம் - ஒரு தேக்கரண்டி
பெருஞ்சீரகம் - ஒரு தேக்கரண்டி
மிளகு - ஒரு தேக்கரண்டி
செத்தல் மிளகாய் - 7
பெருங்காயத்தூள் - அரைத் தேக்கரண்டி
உப்பு - ஒரு தேக்கரண்டி



### செய்முறை

வெங்காயத்தை தோல் உரித்து துண்டு துண்டுகளாக நறுக்கிக் கொள்ளவும். மேலே குறிப்பிட்டுள்ள தேவையான பொருள்கள் அனைத் தையும் தயாராக எடுத்து வைத்துக் கொள்ளவும்.

முதலில் செத்தல் மிளகாய், பெருஞ் சீரகம், மிளகு ஆகியவற்றை அரைக்கவும்.

அதன் பின்னர் சோற்றையும் அரைக் கவும். தேவைப்பட்டால் சிறிது தண்ணீர் சேர்த்து கொள்ளவும்.

பிறகு நறுக்கி வைத்திருக்கும் வெங் காயத்தையும் அரைக்கவும்.

அரைத்த எல்லாவற்றையும் ஒரு பாத்திரத்தில் எடுத்துக் கொண்டு அதனுடன் உப்பு, பெருங்காயத்தூள் சேர்த்து பிசைந்து கொள்ளவும்.

பிசைந்து வைத்திருக்கும் கலவையை சிறிய உருண்டைகளாக உருட்டி வைக்கவும்.

ஒரு தட்டில் அலுமினியப் பேப்பரை விரித்து அதில் இந்த உருண்டைகளை ஒன்றோடு ஒன்று ஒட்டாதபடி தட்டி வைக்கவும்.

இருபக்கமும் நன்கு காயும்படி திருப்பித் திருப்பி வைத்து வெய்யிலில் காய வைத்து எடுக்கவும். இதைப் போல் வடகம் நன்கு காயும் வரை வைத் தெடுக்கவும்.

தேவையான போது எடுத்து எண் ணெயில் போட்டு பொன்னிறமாகப் பொரித்து எடுக்கவும். சுவையான வெங்காய வடகம் தயார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்பாந்தோட்டை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குற்றம் சாட்டியுள்ளார். குறித்த துறைமுகத்தில் போராட்டத்தில் ஈடுபட்டுவருகின்ற ஊழியர்கள் அனைவரும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் வெற்றிக்காகத் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டவர்கள் என்பதோடு நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தலைமையிலான நீலப்படையில் இருந்தவர்கள் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

துறைமுக ஊழியர்களின் பிரச்சினைகள் தொடர்பாக அரசின் நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தும் ஊடகவியலாளர் மாநாடு கொழும்பிலுள்ள துறைமுக அபிவிருத்தி அமைச்சில் நேற்று நடைபெற்றது. இதில் கருத்து வெளியிடும் போதே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

அவர் தெரிவித்ததாவது:

துறைமுகத்தில் பணிபுரிகின்ற ஊழியர்களை நீக்கினால் எனது அமைச்சுப் பதவியைத் துறப்பேன் என்றே நான் கூறியுள்ளேன். எனினும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள ஊழியர்களுக்கு துறைமுகத்தின் பகுதியைச் சீனாவுக்குக் கொடுப்பதில் எந்த எதிர்ப்பும் இல்லை. ஆனால் மகிந்த ராஜபக்சவின் குழுவினரே பிரச்சினையை ஏற்படுத்துகின்றனர். குறித்த ஊழியர்களில் 50 வீதமானவர்கள் நீலப்படையைச் சேர்ந்தவர்கள். இவர்கள் கடந்த தேர்தல்களில் பயன்படுத்தப்பட்ட வர்கள். இதனை மாற்ற முடியாது. எனி னும் நல்லாட்சி அரசு ஆட்சிக்குவந்த பின்னர் அவர்கள் மகிந்த குழுவா, நீலப்ப டையா அல்லது நாமல் பபாவிற்கு உரித்தானவர்களா எனப் பார்க்கவில்லை. சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் ஜனாதிபதியாக தெரிவாகியதால் அவர்களது தொழில் பாதுகாக்கப்பட்டது. அதன் பெறுமதி அவர்களுக்கு விளங்குவதில்லை. ஏனென்றால் இன்னும் அவர்களை குறித்த குழுவினரே பயன்படுத்தி வருகின்றனர்.

துறைமுகத்தின் பகுதியைச் சீனாவுக்கு வ்ழங்குவதற்கு மகிந்த ராஜபக்சவும் அவரது சகாக்களும் ஒருபோதும் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. மகிந்த ராஜபக்ச சீனாவுக்குச் சென்று சம்பந்தப்பட்ட நிறுவனத்துடன் கலந்துரையாடினார். என்ன பேசினார், எப்படி பணம் வரும் என்பது பற்றி எனக்குத் தெரியாது. எனினும் இந்த ஒப்பந்தத்தை நீக்குமாறு மகிந்த ராஜபக்சவால் முடிந்தால் சீன மேர்சன்ட் நிறுவனத்துக்கு கூற முடியுமா? அவரால் கூற முடியாது. அம்பாந்தோட்டை துறைமுகத்தை அமைக்க 1.3 பில்லியன் டொலர் செலவிடப்பட்டதாக கூறுகின்றனர். என்னிடம் அதனை வழங்கியிருந்தால் 750 மில்லியன் டொலர்களுக்கு நிர்மாணித்துக் கொடுப்பேன். நான் அன்று துறைமுகத்துக்குச் சென்றபோது ஊழியர்களில் பலர் மதுபோதையில் இருந்தனர். இன்னும் ஒரு வாரத்தில் துறைமுகச் செயற்பாடுகளை ஆரம்பிப்போம். அவர்கள் விருப்பம் இல்லாவிட்டாலும் அம்பாந்தோட் டையில் பலர் அங்கு வந்து தொழில்செய்ய விருப்பம் தெரிவித்துள்ளனர்–என்றார். (த)

## திடீரென

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சர்கள் இருவரும் கொழும்பில் இருந்து உலங்கு வானூர்தி மூலம் யாழ்ப்பாணம் வந்திறங்கினர். அதன் பின்னர் தரை வழியூடாகப் பயணித்து கோப்பாய், தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவுகளில் நிர்மாணிக்கப்பட்டுள்ள பொருத்து வீடுகளைப் பார்வையிட்டனர்.

தலா 21 லட்சம் ரூபா செலவில் ஒவ்வொரு பொருத்து வீடும் அமைக்கத் திட்டம் தயார் செய்யப்பட்டது. பின்னர் 16 லட்சம் ரூபாவாக அது மாற்றம் செய்யப்பட்டது. எனினும் அந்த 16 லட்சம் ரூபா பெறுமதியில் 2 வீடுகளைக் கட்டலாம் என்று பலராலும் கூறப்பட்டது.

இந்தப் பொருத்து வீட்டுக்குக் கூட்டமைப் பும் கடும் எதிர்ப்பு வெளியிட்டிருந்தது. குறித்த திட்டம் எமது பிரதேசத்துக்குப் பொருத்தமற்றது என்று கூட்டமைப்பின் 16 நாடாளுமன்ற உறுப்பினர்களும் கூட்டாக ஒப்பமிட்டு ஜனாதிபதி மற்றும் பிரதமருக்குக் கடிதம் அனுப் பியிருந் தமை குறிப்பிடத்தக்கது. (த-4-101)

### ஓராண்டு நினைவஞ்சலி



அமரர் முத்துத்தம்பி மகாதேவா

தோற்றம் 23.06.1939

மறைவு 25.11.2016

திதி: சதுர்த்தசி (13.12.2016)

ஆண்டொன்று ஆனதுவோ
ஆனாலும் ஆறவில்லை எம் துயரம்
மாறாத நினைவுகளால் மனம்வெந்து மாய்கின்றோம்
அழகிய உங்கள் சிரித்த முகம் என்றும் எம் நெஞ்சங்களில்
குடியிருக்க அன்புத் தெய்வமே!
ஆண்டவன் அடியில் சாந்திபெறுங்கள்

735, மானிப்பாய் றோட்,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.
077 5141162

(J/6675 ) (13.18.21)

### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 24 . 07 . 1924



மறைவு 25 . 11 . 2015

அமரர் கந்தையா தில்லையம்பலம்

எங்கள் தெய்வமே நீங்கள் எங்களை விட்டு
பிரிந்தாலும் என்றும் உங்கள் நினைவுடன்
உயிர் உள்ளவரைக்கும் வாழ்வோம்

அரச வீதி,
உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

உங்கள்
குடும்பத்தினர்

### வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் சிவகுரு விநாயகசுந்தரம் அவர்களின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி




பிறப்பு 03.04.1935
இறப்பு 26.11.2015

தந்தையே எங்கள் அன்புத் தெய்வமே!
ஆயிற்று ஓராண்டு நீங்கள் மறைந்து
மாதம் ஒரு மாசியம் வந்தது
கூடியிருந்து உங்கள் கதைபேசி உண்டோம்
நித்தம் ஏற்றுகின்றோம் குத்து விளக்கை அதன்
ஒளியில் உங்கள் வண்ண முகம் காண.....

26.11.2015 அன்று சிவபதம் எய்திய எமது அன்புத் தெய்வத்தின் ஓராண்டு நினைவஞ்சலி நாளை (14.12.2016) புதன்கிழமை நடராசா வீதி, வல்வெட்டித்துறையிலுள்ள அவரின் இல்லத்தில் முற்பகல் 11 மணியளவில் நடைபெறும் என்பதையும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனை வைபவத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்போடு அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்.
நடராசா வீதி,
வல்வெட்டித்துறை.

### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் சின்னத்தம்பி சிறிமன்மதராஜா

(உரிமையாளர் - துவாரகா பூங்கனித் தோட்டம், உடுவில்)

திதி: சதுர்த்தசி

தோற்றம் 1955.11.02

மறைவு 2015.11.25

அயராது எமக்காக உழைத்த அன்புத் தந்தையே
ஆண்டு ஒன்று ஆனாலும் ஆறவில்லை எம்துயரம்
இங்கு உங்கள் அன்பை நாம் இழந்து தவிக்கின்றோம்
ஈரவிழிகளுடன் உங்கள் ஆத்மா சாந்தியடைய
ஈசனை வேண்டுகின்றோம்
உங்களுக்கே புத்திரராய் மீண்டும் பிறந்திடுவோம்
ஊரார் வியக்க வளர்த்திட்ட பேரமக்களுடன்
எம் உறவின் புதிய தலைமுறைகள்
ஏற்றம் பெற உங்கள் ஆசி வேண்டும்
ஐயம் எதுவுமில்லை உங்கள் ஆசிஎமக்குண்டு

புதுமடம், உடுவில் தெற்கு,
மானிப்பாய்.

என்றும் நினைவில்
குடும்பத்தினர்.

### 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் கிருஸ்ணபிள்ளை தங்கவடிவேல் (J.P)

மண்ணில் 14.04.1934
விண்ணில் 05.12.2014

இல்லறத்துக்கே இலக்கணமாய் இன்பமுடன்
வாழ்ந்தீர்கள்
துயர் தீர அரும்பணியாய் துடிப்புடனே
பல சேவை செய்தீர்கள்
உம்மைப் போல் உண்மைக்காய் உழைப்போர் பலர்
இருப்பின்
வையமது வாழ்ந்துவிடும் வளத்துடனே!
என்றும் ஆறாது உங்கள் நினைவு....

நீங்காத நினைவுகளுடன்...

இருபாலை கிழக்கு,
கோப்பாய்.

குடும்பத்தினர்.

### 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர் சதாசிவம் பரமேஸ்வரி

தோற்றம் 01.10.1948

மறைவு 13.11.2016

கடந்த 13.11.2016 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த குடும்பத்தலைவி சதாசிவம் பரமேஸ்வரி அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை (14.12.2016) புதன்கிழமை மு.ப 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பனிக்கர்வளவு,
திருநெல்வேலி.

என்றும் உங்கள் நினைவில்
கணவர், பிள்ளைகள்
072 789 8768

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வீடு விற்பனைக்குண்டு**

நல்லூரில் இல. 221 கச்சேரி நல்லூர் வீதியில்
அமைந்துள்ள (நான்கு) 4 பரப்பு
3 குழி காணியில் சகல வசதிகளையும்
கொண்ட வீடு விற்பனைக்குண்டு.

**077 174 9803, 077 494 0523**

# பிக்குவின் அடாவடிகளை எத்தனை நாள்களுக்கு அனுமதிப்பீர்கள்?

## சபையில் சரா எம்.பி கேள்வி

(நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சு மீதான விவாதத்தில் யாழ்., கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் ஆற்றிய உரையின் இரண்டாவது பகுதி நேற்று வெளியாகியது. மூன்றாவது பகுதி இன்று வெளியாகிறது.)

**தொடரும் அதே உணர்வுகள்..**

தேசிய கீதம்தமிழில்பாடப்பட்டபோது நாட்டின் மதுரத்தன்மையை உணரும் படி நாங்கள் கேட்கப்பட்டோம். வெள்ளை வாகனங்கள் வருவது நிறுத்தப்பட்டபோது நல்லதொரு உணர்வுடன் இருக்கும்படி கேட்கப்பட்டோம். இதே போல சில அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட்டபோது நல்லுணர்வுடன் இருக்கும்படி கேட்கப்பட்டோம். இப்பொழுது சில அரசியல்வாதிகள் சமரசத்துக்கான உரைகளைஆற்றும்போதுஅதேஉணர்வுடன் இருக்கும்படி கோரப்பட்டு வருகின்றோம். மிகவும் சிக்கலான சமயங்களில் நாடகங்கள் அரங்கேறுகின்றன. கடந்த காலங்களில் நிறைவேற்றப்படாத வாக்குறுதிகளை இங்கே ஞாபகப்படுத்த விரும்புகிறோம். அந்தப் பிரபல்யமான நாடகம் இப்பொழுது திரைக்கு வரப் போகின்றது. இந்த நிலையிலும் இரு முதன்மைக் கட்சிகளின் சில அரசியல்வாதிகள் தங்கள் நாடக வசனங்களில் அதிருப்தி, பிரிவினை போன்வற்றை விதைப்பதில் ஈடுபட்டுள்ளார்கள்.

**போர் இல்லாமல் யாழ்.மண்ணில் படையெதற்கு?**

பல வருடங்களுக்கு முன்பு முன்னைய அரசு உண்மையாகவே போர் முடிவுக்கு வந்து விட்டதாகக் கூறியது. இராணுவப் படையினரது கணிசமான பிரசன்னம் வடக்கு- கிழக்கில் பரவியி ருப்பது தேசிய பாதுகாப்பு என்று நியாயப் படுத்தி விட முடியாது. தமிழர்களிடமிருந்து எப்படியான போரை நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள்? தேசிய பாதுகாப்புக்கு இத்தனை பெரிய படை தேவையென்று விவாதிப்பது வெறும் கபடமான செயலேயன்றி வேறொன்றுமில்லை.

மூன்று தசாப்த காலமாக நடைமுறையில் இருக்கும் அவசரகாலச் சட்டம் ஆகஸ்ட் 2012 இல் அகற்றப்பட்டது. ஆனால் அசாதாரணமான 1979ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட பயங்கரவாதத் தடைச் சட்டம் இன்னும் நடைமுறையில் இருக்கின்றது. ஜெனிவாவிலுள்ள மனித உரிமைகள் அமைப்பின் இயக்குநர் ஜோன் பிர் இது பற்றி செப்டெம்பர் 15 அன்று குறிப்பிடுகையில் பயங்கரவாதத் தடுப்புச்சட்டம் அகற்றப்படுவதல்ல முக்கியம். அதினிடத்தில் இன்னொரு பெயரில் அதே சட்டத்தை நடைமுறைப்படுத்தாது இருக்கும் போதே அரசின் விசுவாசம் புலப்படும் என்று வெளிப்படையாகச் சொல்லியுள்ளார்.

அரசியல் கைதிகளை விடுதலை செய்வதாகச் சொல்லி பல வாக்குறுதிகள் தரப்பட்டன. ஆனால் அரசு இன்னமும் இந்த விடயத்தில் தீவிர செயற்பாட்டை வெளிப்படுத்தக் காணோம்.

**வாக்குறுதிகள் தகர்க்கப்படுவதேன்?**

போருக்குப் பின்னரான சமரசத்திற்கு போரால் பாதிக்கப்பட்ட வடக்குக் கிழக்கின் சமூக, பொருளாதார தேவைகளை முன்கூட்டியே அறிந்து கொள்வது முக்கியமானதாகும். தரையின் நிஜங்களும் தேவைகளும் மாறி விட்டதை நாம் இனம்காண்கிறோம். நிரந்தர சமாதானத்துக்கு இது சரியான நேரம் என்பதை நாம் இணங்கண்டுள்ளோம். எமது முழு சக்தியையும் திரட்டி இதற்காகவே எமது ஜனாதிபதி தெரிவுக்கு உதவி செய்தோம். இதனால் எங்கள் மக்களுக்கும் முழு இலங்கையர்களுக்கும் நாம் கடமைப்பட்டவர்களாக இருக்கின்றோம். போரினால் நலிந்த வடக்கு-கிழக்கு மக்களின் தேவைகளை நிறை வேற்றும் முகமாக வாக்களிக்கப்பட்ட டோக்கியோ நன்கொடை மாநாடு இடம்பெறவில்லை. இது ஏன் இடம்பெறவில்லை என்ற காரணமும் தரப்படவில்லை. இதற்குப் பதிலான மாற்று ஒழுங்கு பற்றிய விளக்கமும் இல்லை. வாக்குறுதிகள் மிக இலகுவாக தவிர்க்கப் படுகின்றன. அதே சமயம் பெரிய பெரிய வார்த்தைகள் அடிக்கடி அள்ளி வீசப்படுகின்றன. ஆனால் செயற்பாட்டில் ஒருசிலதான் இருக்கின்றன.

**போர் இல்லைத்தான் சமாதானமும் இல்லையே**

போர் இல்லை என்பதால் நாட்டில் சமாதானம் வந்துவிடவில்லை. இந்தக் கலகத்தைத் தோற்றுவித்த அரச நிறுவனங்கள் எல்லாமே அதே மனோபாவத்துடன் இயங்கியவண்ணமாகவேஇருக்கின்றன. இந்த உண்மை நமக்கு அடிக்கடி நினைவூட்டப்பட்டு வருகின்றது. பின்வரும் விடயங்கள் வடக்கு-கிழக்கின் போரினால் பாதிக்கப்பட்டவர்களின் வாழ்வுக்காகவும் அபிவிருத்திக்காகவும் முழுமையான தேவை களுக்காகவும் கணிப்பீடு செய்யப்பட வேண்டியுள்ளது.

(மிகுதி நாளை வெளிவரும்.)

**31ஆம் நாள் நினைவஞ்சலி**



அமரர்
**அந்தோனிப்பிள்ளை இன்பராசா (இன்பா)**

மலர்வு
11.07.1959

உதிர்வு
13.11.2016

கடந்த 2016.11.13 ஞாயிற்றுக்கிழமை இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் அந்தோனிப்பிள்ளை இன்பராசா அவர்களின் 31ஆம் நினைவு நாள் இன்று (13.12.2016) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பத்துடன் வருகை தந்து அவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல.73,கோணாவில்,
கிளிநொச்சி.
(கே/240)(11.17)
குடும்பத்தினர்.

**மரண அறிவித்தல்கள்**

**P.P. அந்தோனிப்பிள்ளை**
(ஓய்வுபெற்ற அதிபர்)

மண்ணில்: 27.03.1941
விண்ணில்: 11.12.2016



ஆத்திக்குளி, முருங்கன், மன்னாரைப் பிறப்பிடமாகக் கொண்ட P.P.அந்தோனிப்பிள்ளை, 11.12.2016 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பேதுருப்பிள்ளை-மேரிமாதா தம்பதியரின் அன்பு மகனும், திருமதி பேபிசறோஜாவின் பாசமிகு கணவரும், அகிலா (ஆசிரியர், மன்/மாவிலங்கேணி), கமலநாதன் (பொறியியலாளர், ஆஸ்திரேலியா), ஜீவந்தனி (ஆசிரியர், யா/வேலணை மத்திய கல்லூரி), சுகந்தினி (யா/சுகாதார திணைக்களம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், வசந், ஜனனி, லம்போதரன், பிரதீப் குமார் ஆகியோரின் பாசமிகு மாமனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (13.12.2016) செவ்வாய்க்கிழமை ஆத்திக்குளி புனித பிலிப்பு நேரியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்ட பின் ஆத்திக்குளி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆத்திக்குளி, முருங்கன். (J/6808) (10.17)
தகவல்:
குடும்பத்தினர்.

திருமதி **தனபாக்கியஇலட்சுமி அழகரத்தினம்**



தோற்றம்:
16.09.1941

மறைவு:
12.12.2016

இல. 19, சிவன் புதுவீதி, நல்லூரை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தனபாக்கியஇலட்சுமி அழகரத்தினம் அவர்கள் நேற்று (12/12/2016) திங்கட்கிழமை கால மாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அழகரத்தினத்தின் அன்பு மனைவியும் தேவராசா(ஓய்வுபெற்ற மின்னிணைப்பாளர், மின்சாரசபை), செல்வராசா(சுவிஸ்), தவராணி(நோர்வே), செல்வராணி(பிரான்ஸ்), சாந்தகுமாரி ஆகியோரின் பாசமிகு தாயாரும் தவமணிதேவி(கனடா), சந்திரலேகா(லீலா- சங்கானை), கமலாதேவி(திருகோணமலை), வசந்தமாலா(இந்தியா), காலஞ்சென்ற கண்மணி ஆகியோரின் அன்பு சகோதரியும் சத்தியசீலன்(பிரான்ஸ்), சிறீஸ்கந்தராசா(நோர்வே), ஆனந்தி, மேகலா(சுவிஸ்), கணேசராஜா(கால்நடை வைத்திய நிலையம், தெல்லிப்பழை) ஆகியோரின் மாமியும் கபில்தேவ்(Pioneer House), சாருஜன், மனோஜன், சிந்துஜா, யக்கோப்(நோர்வே), யனுசா(நோர்வே), யாளினி(நோர்வே), கௌசிகா(பிரான்ஸ்), விதுசன்(சுவிஸ்), சஜீவன், சஜீதா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13/12/2016) செவ்வாய்க்கிழமை பி.ப 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் திருநெல்வேலி, பாற்பண்ணைவீதி இந்துமயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
077 500 2361
குடும்பத்தினர்.

**பணியாளர் தேவை**

சிற்றூழியர் (ROOM BOY)
மூர்த்தி கெஸ்ட் ஹவுஸ்
62/20, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
077 224 7428

**கண்ணீர் அஞ்சலி**



எமது பாடசாலையின் சங்கீத பாட ஆசிரியர்
திருமதி ஜீவந்தினி லம்போதரன் அவர்களின்
அன்புத்தந்தையார்

**P.P. அந்தோனிப்பிள்ளை**
(ஓய்வு பெற்ற அதிபர்)

அவர்களின் மறைவினால் துயருற்று இருக்கும் அன்னாரின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(ஜே/6820)
(17.19.20)
ஆசிரியர் நலன்புரிசங்கம்,
யா/வேலணை மத்திய கல்லூரி.

**மரண அறிவித்தல்**

தோற்றம்
15 . 07 . 1920



மறைவு
11 . 12 . 2016

**சரவணமுத்து சின்னத்துரை**

(இளைப்பாறிய ஆசிரியர் - திக்குவல்ல, மின்ஹாத் மகாவித்தியாலயம்
யா/ அருணோதயக்கல்லூரி - அளவெட்டி)

- தம்மளை, அளவெட்டி மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து சின்னத்துரை 11.12.2016 ஞாயிற்றுக்கிழமை இரவு இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கலாவல்லியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சரவணமுத்து - நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கணபதிப் பிள்ளை - பொன்னம்மா தம்பதியரின் மூத்த மருமகனும், ஈஸ்வரி (கனடா), இராதா (அளவெட்டி), உமா (கனடா), பாமா (அளவெட்டி), காலஞ்சென்ற யசோதா மற்றும் ஐங்கரன் (கனடா), ஜெகதா (கனடா), கிருபா (அளவெட்டி), கௌசலா (கனடா), சுமித்திரா (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தை யும், அமிர்தலிங்கம் (இளைப்பாறிய அதிபர் - யா/சீனன்கலட்டி ஞானோதய வித்தியாசாலை), வரதராஜசிங்கம் (கனடா), நிரஞ்சலா (கனடா), செல்வரகுநாதன் (கனடா),ஞானசுதன் (பூசகர், ஸ்ரீநாகேஸ்வரம், நாகவரதர் தேவஸ்தானம், சாரதி - யா/தொழில்நுட்பவியல் கல்லூரி, கொக்குவில்), சுரேந்திரன் (கனடா), திருச்செல்வம் (கனடா) ஆகியோரின் மாமனும், அமிதாயன் (ICBT Campus), ஹரிதயான் (லிங்கம் Computers), வினுஷன் (கனடா), அர்ச்சனா (கனடா), லக்ஷனா (கனடா), அபிஷனா (கனடா), ரமாஜினி (யா/உடுவில் மகளிர்கல்லூரி), கோவர்த்தனா (யா/ உடுவில் மகளிர் கல்லூரி), சேயோன் (கனடா), செழியன் (கனடா), கிரிஷான் (கனடா), கிரிஷாயினி (கனடா), யரிஷான் (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற வர்களான சுப்பிரமணியம், ஆறுமுகம், தங்கம்மா, இராசம்மா, பரநிருபசிங்கம், இராசரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான பாலசண்முகம், கதிரவேலு, பரமேஸ்வரி மற்றும் பங்கயற்செல்வி (கனடா), ஞானேஸ்வரி (கனடா), சிவபாலன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.12.2016) புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10 மணியளவில் பூதவுடல் தம்மளை இந்து மயானத்தில் தகனஞ் செய்யப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தம்மளை,
அளவெட்டி மேற்கு.
தகவல்:
குடும்பத்தினர்.

(ஜே 6804)
(13.17)
077 555 2890

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6 பயிற்சி...

ஒற்றை இயந்திரம் கொண்ட இந்த விமானம், விமானப்படை விமானிகளுக்கான அடிப்படைப்பயிற்சிகளுக்குப்பயன்படுத்தப்படுகின்றது. சீனவிமானப்படையும், பங்களாதேஷ், பாகிஸ்தான், இலங்கை உள்ளிட்ட நாடுகளும் பி.ரி-6 விமானங்களைப் பயிற்சிக்காகப் பயன்படுத்தி வருகின்றன. பி.ரி-6 ரகத்தைச் சேர்ந்த ஆறு விமானங்களை இலங்கை விமானப்படைக் காகக் கொள்வனவு செய்யும் உடன்பாட்டில், சீனாவின் தேசிய வான்தொழில்நுட்ப இறக்குமதி, ஏற்றுமதி நிறுவனத்துடன், இலங்கை பாதுகாப்பு அமைச்சு கையெழுத்திட்டுள்ளது. இலங்கை விமானப்படையில் உள்ள ஐந்து பி.ரி-6 விமானங்களின் செயற்பாட்டுக் காலம் முடிவடையும் நிலையிலேயே இந்தப் புதிய விமானங்களைக் கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு ஜூலை மாதம், இந்த விமானங் களைக் கொள்வனவு செய்வதற்கு தேசிய பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் முடிவெடுக்கப் பட்டது. (தி)

## வடக்கு...

மேலும் மீள்குடியேற்றப்படவேண்டிய மக்கள் தொடர்பில் ஆராயப்பட வுள்ளது.

இவ்வாறு இடம்பெறும் கூட்டத்தில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்கள் தொடர்பிலும் சிறப்புக் கவனம் செலுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, வடக்கு-கிழக்கு மாகாணங்களில் அண்மைக் காலத்தில் மீள்குடியேற்றம் உள்ளிட்ட எந்தத் தேவைக்காகவும் அழிக்கப்பட்ட காடுகளின் விவரத்தைக் காலம், அளவு என்பனவற்றுடன் தனியாகச் சமர்ப்பிக்குமாறும் மாவட்டச் செயலர்களை ஜனாதிபதி செயலகம் கோரியுள்ளது.

வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணம் தவிர்ந்த ஏனைய நான்கு மாவட்டத்திலும் உள்ள காடுகள் வகை தொகை இன்றி அரசியல்வாதிகளின் செல்வாக்குடனும் அதிகாரிகளின் உடந்தையுடனும் அழிக்கப்பட்டு நிலங்கள் ஆக்கிரமிக்கப்படுகின்றன. இது குறித்து இதுவரை ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எவையும் எடுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (த-4-101)

## ஜனாதிபதி...

வுக்குப் பயணம் செய்ய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன திட்டமிட்டுள்ள நிலையில், இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இந்தப் பயணத்தின் போது பல்வேறு புரிந் துணர்வு உடன்படிக் கைகளில் கைச்சாத்திடவுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, இலங்கையின் கலாசார மற்றும் உணவு விழாவையும் ஆரம்பித்து வைக்கவுள்ளார். மைத்திரிபால சிறிசேனவின் பயணத்துக்கு எதிர்ப்பு வெளியிட்டுள்ள மலேசியக் கட்சி யொன்றின் உப தலைவர் ரோனி முருகன், நாட்டிலுள்ள தமிழ் சமூகத்தின் உணர்வுகளை அரசு கருத்தில் கொள்ள வேண்டும் எனக் கூறியுள்ளார்.

இலங்கை அரசு மீது இறுதிக்கட்டப் போரின் போது பொதுமக்களின் கொலைகளுடன் தொடர்புபட்ட குற்றச்சாட்டு காணப்படுகின்ற நிலையில், மைத்திரிபால சிறிசேன மலேசியாவுக்குள் அனுமதிக்கப்பட கூடாது என அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை மலேசியாவில் செயற்படும் அரச சார்பற்ற நிறுவனங்களும் இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பயணத்துக்குக் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளன. (தி)

## அடாவடித்தனப்...

தந்தை எஸ்.பி. மங்களராஜா தெரிவித்தார். போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்குக் கடந்த கால ஆட்சியிலும் நல்லாட்சியிலும் உள ரீதியான ஆலோசனை வழங்கப்படவில்லை எனவும் அவர் குற்றம் சாட்டினார்.

பன்னாட்டு மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு கிளிநொச்சி மாவட்ட பிரசைகள் குழுவின் ஏற்பாட்டில் 'ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைக்காகக் குரல் கொடுப்போம்' என்னும் தொனிப்பொருளில் கிளிநொச்சி - கரைச்சி பிரதேச செயலகத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

போர் காரணமாக இடம்பெயர்ந்தபோது, ஷெல் வீச்சுக்களால் காயமடைந்த மற்றும் உயிரிழந்தவர்களை நேரில் பார்த்த சிறுவர்கள் இன்று வரை அந்தப் பாதிப்புக்களில் இருந்து மீள முடியாது உடல், உள ரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கான ஆலோசனைகளை வழங்க அரசு இடமளிக்கவில்லை. அநாதை இல்லங்களை ஆரம்பிப்பதற்கும் அரசு அனுமதிக்கவில்லை.

சண்டையின்போது உயிரிழந்தவர்களை நேரில் பார்த்த சிறுவர்கள், உடலங்களுக்கு மேலாக நடந்து சென்ற சிறுவர்கள் ஆரோக்கியமானவர்களாக உருவாகுவதற்கு காலங்கள் தேவைப்படும். தகுந்த உளவளப்பயிற்சி அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும். அவ்வாறு வழங்கப்படுவதற்கான வழிமுறைகளை அரசு முழுமையாகப் பயன்படுத்தியது என்று கூற முடியாது.

தற்காலச் சூழலில் கொக்கிளாய், மட்டக்களப்பு போன்ற பௌத்தர்கள் இல்லாத தமிழர் பிரதேசங்களில் கண்ட கண்ட இடங்களில் பௌத்த விகாரைகளை அமைப்பது நல்லிணக்கத்துக்குச் சவாலாக அமைக்கின்றது. கொழும்பில் சைவக் கோவில்கள் இருக்குமாக இருந்தால், ஏன் யாழ்ப்பாணத்தில் புத்த கோவில்கள் இருக்க முடியாது என்று கேட்கின்ற கேள்விகள் எல்லாம் ஒரு சிறுபிள்ளைத்தனமான கேள்விகளாக இருக்கின்றன.

கொழும்பில் இருக்கும் சைவர்கள் காலாதி காலமாக அங்கேயே இருக்கின்றார்கள். மக்கள் தொகை கூடியதன் பின்னர் அங்கே கோவில்களுடைய தேவை ஏற்பட்டது. எனவே சைவக் கோவில்களை அவர்கள் உருவாக்கினார்கள். அதேபோல் யாழ்ப்பாணத்தில் பௌத்தர்கள் இருந்தால் சரி. இல்லாத இடத்தில் பௌத்த கோவில்களை, விகாரைகளைக் கொண்டு வந்து நிலை நிறுத்துவது என்பதெல்லாம் ஆக்கிரமிப்பின் வெளிப்பாடாகப் பார்க்கப்படுகின்றதே தவிர, இவை நல்லிணக்கத்துக்கு எந்த விதத்திலும் உதவப்போவதில்லை - என்றார்.

இந்த நிகழ்வில், கடந்த 2008 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20 ஆம் திகதி வன்னிவிளாங்குளம் பிரதேசத்தில் கிளைமோர் தாக்குதலுக்கு இலக்காகி, உயிரிழந்த மனித உரிமைகள் செயற்பாட்டாளர் அருட்தந்தை கருணாரட்ணத்தை (கிளி) நினைவுகூர்ந்து அஞ்சலி செலுத்தப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன், கிளிநொச்சி மாவட்டம் பிரஜைகள் குழுவின் உறுப்பினர்கள் மற்றும் மனித உரிமை செயற்பாட்டாளர்கள், பொதுமக்கள் கலந்துகொண்டனர். (த-21)

## முன்னாள்...

ஒருவர் நேற்று முன்தினம் உயிரிழந்தார். சுகவீனம் காரணமாகத் திருகோணமலை குச்சவெளி வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்று வந்த நிலையில், அவர் உயிரிழந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது. முல்லைத்தீவு வற்றாப்பளைப் பகுதியில் வசித்து வந்த இராசதுரை திக்சன் (வயது - 26) என்ற முன்னாள் போராளியான இளைஞனே இவ்வாறு உயிரிழந்தார்.

2009ஆம் ஆண்டு இறுதிக்கட்டப் போரின் போது இராணுவத்திடம் சரணடைந்த இவர் வெலிக்கந்தை புனர்வாழ்வு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில், இரண்டரை வருடங்களின் பின்னர் விடுதலை செய்யப்பட்டார். இந்த நிலையில் சுகவீனம் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு உயிரிழந்தார். (த-21)

## வவுனியா...

வவுனியா, டிசெ.13

ஓமந்தை ஆறுமுகத் தான் புதுக்குளம் முருகன் ஆலயம் உடைக் கப்பட்டு சுமார் 5 இலட்சம் பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளதாக ஓமந்தைப் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா - ஓமந்தை, பன்றிக்கெய்தகுளம் பகுதியில் உள்ள ஆறுமுகத்தான் புதுக்குளம் முருகன் ஆலயத்தில் நேற்றுமுன்தினம் மாலைப்பூசைகள் முடிந்து ஆலயம் பூட்டப்பட்டது. இந்த நிலையில் நேற்றுக் காலை ஆயத்துக்குச் சென்றபோது கதவுகள் உடைக்கப்பட்டு பொருள்கள் திருடப்பட்டமை கண்டறியப்பட்டது.

ஆலயத்தின் வடக்கு வாசலால் உட்புகுந்த திருடர்கள் அங்கிருந்த ஐம்பொன் முருகவேல் உட்பட மூலஸ்தானத்திலிருந்த வேல், செப்பில் செய்யப்பட்ட வள்ளி, தெய்வயானைச் சிலைகள் என்பனவற்றை திருடியதுடன் உண்டியலில் இருந்த பணத்தையும் எடுத்துச் சென் றுள்ளனர்.

இது தொடர்பாக ஓமந்தைப் பொலிஸில் ஆலய நிர்வாகத்தினர் முறைப்பாடு பதிவு செய்துள்ளனர். சம்பவம் தொடர்பான விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

'1962ஆம்ஆண்டுகும்பாபிஷேகம்செய்யப்பட்டதிலிருந்து இராணுவத்தினருக்கும் புலிகளுக்கும் இடையில் இடம்பெற்ற உக்கிர மோதலில் கூட இந்தக் கோவிலில் எவ்வித திருட்டுச் சம்பவங்களும் இடம்பெறவில்லை. கோவிலுக்குச் சேதங்கள் ஏற்பட்டபோதும் ஆலயத்தில் திருட்டுப் போகவில்லை இப்போது முதற் தடவையாக திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. திருட்டுப் போன பொருள்கள் 5 இலட்சத்துக்கும் அதிக பெறுமதியானவை' என ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர். (த-21)

## தமிழ்ப்...

அவர் தெரிவித்ததாவது:

இராணுவத்தினருக்கு களங்கம் ஏற்படுத்தும் சூழ்ச்சியைக் கடற்படைத் தளபதி தெரிந்தோ தெரியாமலோ செய்துள்ளார்.

பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டவர்கள் கண்ணீர்விட்டு அழுது என்ன கூறினார்கள்? எமது நிலம் இல்லாது போயுள்ளது.தொழிலை இல்லாமல் செய்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதனாலேயே வீதியில் இறங்கினோம். ஏன் துப்பாக்கியை எடுத்துக்கொண்டு எம்மைத் தாக்குவதற்கு வருகின்றீர்கள்? நீங்கள் வடக்கில் போர் புரியும் போது இரத்தம் கொடுத்தது நாங்கள். பூசை வழிபாடுகளில் ஈடுபட்டது நாங்கள். அவ்வாறு செய்த எம் மீது ஏன் தாக்குதல் நடத்துகின்றீர்கள்? எம்மை நிரந்தர ஊழியர்களாக நியமியுங்கள் என்றுதான் அவர்கள் கோரினார்கள். காணாமல்போனோர் அலுவலகம் ஊடாக - போர்க்குற்ற நடவடிக்கைகள் ஊடாக இராணுவத்தினரை மரண வாயிலுக்குக் கொண்டு செல்லும்போது எங்கள் இராணுவத்தினர் என்ற எண்ணத்தில் அவர்களைப் பாதுகாப்பதற்கு மக்கள் வீதியில் இறங்க இருக்கும் நிலையில், மக்களுக்கும் இராணுவத்தினருக்குமிடையே இடைவெளியை ஏற்படுத்தித் தூரப்படுத்தும் சூழ்ச்சியே தற்போது இடம் பெறுகின்றது.

கடற்படைத் தளபதியின் தலையீட்டுடன் ஊடகவியலாளர்கள் மீதும் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டவர்கள் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டமை குறித்தே நாட்டில் அனைவராலும் பேசப்படுகின்றது. இதனை மற்றுமொரு கோணத்தில் நோக்கினால், கடற்படைத் தளபதியின் அன்றைய செயற்பாடு தனியொரு சம்பவம் இல்லை. அதற்குக் கடற்படைத் தளபதி மாத்திரம் பொறுப்புகூற வேண்டியவரும் அல்ல. கடற்படைத் தளபதிக்கு இந்தச் சூழலை ஏற்படுத்திக் கொடுத்தது பிரதமர் உள்ளிட்ட அரச தரப்பினர்.

ஊடக நிறுவனங்களின் பெயரைக் கூறி பிரதமர் நாடாளுமன்றத்தில் களங்களத்தை ஏற்படுத்தினார். ஊடகவியலாளர் எனப்படுவோர் தீய, தாக்குதல் நடத்தக்கூடிய, கருத்தில் எடுக்கத் தேவையற்ற, சமூகத்திற்கு எதிரான விஷப் பூச்சிகள் என்ற எண்ணத்தை சமூகத்துக்கும் கடற்படைக்கும் மத்தியில் உருவாக்குவதற்கு பிரதமர் உள்ளிட்ட அரசின் தலைவர்கள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

கடற்படைத் தளபதி இதற்குப் பொறுப்புக்கூற வேண்டியவர் என்ற வகையில், அவர் பதவி விலகும் அதேவேளை, பிரதமர் உள்ளிட்ட அரசின் பிரதானிகள் ஊடகயவிலாளர்களுக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் கடற்படை நடத்திய தாக்குதல் தொடர்பில் பொறுப்புக் கூறவேண்டும் என்பதே புதிய ஹெல உறுமயவின் நிலைப்பாடு- என்றார். (த-4)

## இனவாத...

விழாவில் உறுதியளித்தார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

முஸ்லிம்சமய, கலாசார அமைச்சினால் ஒழுங்கு செய்யப்பட்ட 2016ஆம் ஆண்டுக்கான தேசிய மீலாத் விழா வைபவம் நேற்று ஊவா மாகாணத்தின் குருத்தலாவையில் நடைபெற்றது. இதில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

அவர் அங்கு தெரிவித்ததாவது:

கடந்த மகிந்த ராஜபக்ச ஆட்சியில் முஸ்லிம்கள் உள்ளிட்ட சிறுபான்மை மக்கள் பெரும் அச்சுறுத்தல்களை எதிர்கொண்டனர். அவ்வாறான நிலையிலும் சிறுபான்மை மக்கள் துணிச்சலுடன் முன்வந்து வாக்களித்தமையாலேயே ஆட்சிமாற்றம் ஏற்பட்டது. நல்லாட்சி மலர்ந்தது.

இந்த நிலையில் சிறுபான்மை மக்கள் மீதான அச்சுறுத்தல்கள் நல்லாட்சியிலும் தொடர எந்த வகையிலும் இடமளிக்கமுடியாது. மிக விரைவில் இதற்குத் தீர்வு காணப்படும்.

சிறுபான்மை மக்கள் பயம், அச்சமின்றி நிம்மதியாக வாழும் சூழலை ஏற்படுத்த அரசு அர்ப்பணிப்புடன் செயலாற்றும்.

அரசின் மீதான சிறுபான்மை மக்களின் நம்பிக்கையைக் காப்பாற்றும் வகையில் அச்சுறுத்தலான செயற்பாடுகளை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்-என்றார்.

இந்நிகழ்வில் தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய, கலாசார அலுவல்கள் அமைச்சர் எம்.எச்.ஏ.ஹலீம், அமைச்சர்களான ரவூப் ஹக்கீம், ஏ.எச்.எம்.பௌசி ஆகியோர் உள்ளிட்ட அரசியல்வாதிகள் மற்றும் ராஜதந்திரிகளும் கலந்து கொண்டனர். (தி)

## 3 முதன்மை...

இது தொடர்பில் அவர் அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, யாழ்.பொது நூலக எரிப்பு தொடர்பில் நாடாளுமன்றத்தில் மன்னிப்பு கோரியிருந்தார். ஐக்கிய தேசிய கட்சியின் ஆட்சியின் கீழ் கொண்டுவரப்பட்ட குடியுரிமை பறிப்பு, வாக்குரிமை பறிப்பு என்பவை மலையகத் தமிழரின் இருப்பையே இந்நாட்டில் அசைத்துவிட்டன என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. அதற்கும் எனவே ஐ.தே.க. மலையக மக்களிடமும் மன்னிப்பு கோரவேண்டுமென்று ஜே.வி.பி. தலைவர் நண்பர் அனுரகுமார திசாநாயக்க கூறியுள்ளார். அனுர கூறியிருப்பது நியாயமானது தான்.

இந்த வரலாற்றுத் தவறுகளுக்காகவும், இன்னும்பல இனவாதநடவடிக்கைகளுக்காகவும், இன்னமும் பல்வேறு சிங்கள, தமிழ் முஸ்லிம் கட்சிகள் மக்களிடம் மன்னிப்புக் கோர வேண்டிய சூழல் மெதுவாக உருவாகி வருகிறது. இந்த வரலாற்றுத் தவறுகள் மன்னிப்பு பட்டியலில் ஜே.வி.பிக்கும் காத்திரமான இடமிருக்கிறது என்பதை நண்பர் அனுர புரிந்துக்கொள்ளவேண்டும்.

தோட்டத்தொழிலாளர் இந்நாட்டில் தமிழர் என்ற இன அடையாளம் காரணமாகவே பிரதானமாக ஒடுக்கப்படுகிறார்கள். இந்நாட்டில் ஈழத்தமிழர், மலையகத் தமிழர் மற்றும் முஸ்லிம் மக்கள் எனத் தொழிலாளர் ஆட்சியை அமைப்போம் என்று அறைகூவல் விடுத்த, புரட்சிக்கர ஜே.வி.பியின் உருவாக்கத்தின் போது நடந்து என்ன? உழைக்கும் மலையகப் பாட்டாளி மக்களை, இந்திய ஏகாதிபத்திய விஸ்தரிப்புவாத முகவர்கள் என அடையாளமிட்டு, கட்சி அங்கத்தவர்களுக்கு அரசியல் வகுப்பே நடத்தி, சிங்கள இளைஞர் மத்தியில் மலையக மக்களுக்கு எதிராக இனவாத நஞ்சு தூவப்பட்டு, இனவாத அடிப்படை ஏற்படக் காரணமாக அமைந்த கட்சிதான் ஜேவிபி. இது ஒன்றும் பரம இரகசியம் அல்ல. தோழர் ரோஹன விஜேவீரவின் இந்த வழிகாட்டலில் உருவாகிய, அன்றைய ஜே.வி.பி. இளைஞர்கள் தான் இன்று, விமல் வீரவன்ச உட்பட, பல்வேறு கட்சிகளில் இருந்துகொண்டு தமிழ் பேசும் மக்களுக்கு எதிரான நிலைப்பாடுகளை முன்வைக்கின்றார்கள். ஹெல உறுமய செயலாளர் அமைச்சர் சம்பிக்க ரணவக்கவும் அத்தகைய ஒரு முன்னாள் ஜே.வி.பியாளர்தான். இவர்கள் இன்று இலங்கை அரசியல் பரப்பில் ஆற்றிவரும் அரசியல் பங்களிப்புகளை நாம் சரியாக அடையாளம் கண்டுகொள்ள வேண்டும்.

எனவே இன்றைய ஜே.வி.பி. தலைவரின் நிலைப்பாடுகளை வரவேற்கும் அதேவேளை வரலாற்றையும் நாம் மறந்து விடக்கூடாது. வரலாற்றை ஆய்ந்தறிந்து பாடங்களை கற்க மறந்த முட்டாள்களாகி விடக்கூடாது. எம்மினத்தை வாழ்முழுக்க அடித்துப் படுகாயப்படுத்தி, குற்றம் புரிந்துவிட்டு, கடைசியில் அதே குற்றவாளி எம்மை பார்த்து சும்மா சுகம் விசாரிப்பதை கண்டு, உணர்ச்சிவசப்பட்டு புளங்காகிதமடைந்து, மயிர்கூச்செறிந்து தடுமாறும் பாமர அரசியலில் நாம் மறந்தும் மூழ்கிக் காணாமல் போய்விட முடியாது. நாங்கள் சிரித்து பேசுகிறோம் என்பதற்காக அவர்களும் அவர்களது அடிப்படை விடயங்களில் நிலைதடுமாறுவது இல்லையே. எனவே நாங்கள் மட்டும் அவசரப்படத் தேவையில்லை - என்றுள்ளது. (த-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், டிசெ. 13

**எவ்.ஏ. கிண்ணம் வடமராட்சி லீக்**

இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனம் தேசிய ரீதியில் நடத்திவரும் எவ்.ஏ. கிண்ணத் தொடரில் வடமராட்சி லீக் அணிகளுக்கான ஆட்டங்கள் அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று காலை 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கருணாகரன் அணியை எதிர்த்து புதுத்தோட்டம் சுடரொளி அணியும், காலை 9.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் இமையாணன் மத்திய அணியை எதிர்த்து கரவெட்டி நவசக்தி அணியும் மோதவுள்ளன.

**மனோகராவின் கால்பந்தாட்டம்**

அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மணற்காடு சென். அன்ரனிஸ் அணியை எதிர்த்து மாதகல் சென். தோமஸ் அணி மோதவுள்ளது. (ம-23-108-422)



சென். அன்ரனிஸ்

# சென். அன்ரனிஸ் சம்பியன் டயமன்ஸும் சிறந்த ஆட்டம்

### நாணயச் சுழற்சியில் கிண்ணம் தீர்மானிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 13

நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்கள், சமநிலைத் தவிர்ப்பு உதைகள் என ஒட்டுமொத்த வாய்ப்புக்களும் சமநிலையில் நீண்டு சென்றதை அடுத்து நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியது சென். அன்ரனிஸ் அணி.

வடமராட்சி கால்பந்தாட்ட சிரேஸ்ட சங்கம் இணைந்த இலங்கை கால்பந்தாட்ட சிரேஸ்ட சங்கம் நடத்திய 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டம் டயமன்ஸின் மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. மணற்காடு சென். அன்ரனிஸ் அணியை எதிர்த்து வதிரி டயமன்ஸ் அணி மோதியது. ஆட்டத்தின் 12 ஆவது நிமிடத்தில் டயமன்ஸ் அணி வீரர் யோகானந்தன் கொடுத்த பந்தை சக வீரர் மதியழகன் கோலாக்கினார். அதுவே முதல் பாதியின் ஒரே கோலுமாக அமைந்தது.

இரண்டாவது பாதியின் நான்காவது நிமிடத்தில் டயமன்ஸின் சார்பாக முறையற்ற ஆட்டம் வெளிப்படுத்தப்பட்டதை அடுத்து அன்ரனிஸுக்கு



டயமன்ஸ்

தண்டனை உதை வழங்கப்பட்டது. வாய்ப்பு கச்சிதமாக கோலாக்கப்பட்டது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் முடிவு வரை வேறெந்த கோல்களும் பதிவாகவில்லை.

சமநிலைத் தவிர்ப்பு உதைகளை நோக்கி ஆட்டம் நகர்ந்தது. இரு அணிகளுக்கும் தலா மூன்று வாய்ப்புக்கள் வழங்கப்பட்டன. இரு அணிகளும் வாய்ப்பை முழுமையாகப் பயன்படுத்தின. இதனையடுத்து நாணயச் சுழற்சியில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டு சென். அன்ரனிஸ் சம்பியனானது.

சிறந்த கோல் காப்பாளராக டயமன்ஸ் அணியை சேர்ந்த உதயகுமார், ஆட்ட நாயகனாக மணற்காடு சென். அன்ரனிஸ் அணியின் நிமல், தொடராட்ட நாயகனாக மணற்காடு சென். அன்ரனிஸ் அணியின் கமல் ஆகியோர் தெரிவாகினர்.

(ம-108-422)

## சென். மேரிஸ் அபார ஆட்டம்

யாழ்ப்பாணம், டிசெ. 13

யாழ். ஐக்கியம் விளையாட்டுக் கழகம் நடத்திய 13 வயதுப் பிரிவு அணிகளுக்கான தொடரில் நவாந்துறை சென். மேரிஸ் அணி சம்பியனானது.

ஐக்கியத்தின் மைதானத்தில் நேற்றுமுன்தினம் இறுதியாட்டம் நடைபெற்றது. சென். மேரிஸ் அணியும் யாழ். ஒஸ்மானியாக் கல்லூரி அணியும் மோதின. 1:0 என்ற கோல் கணக்கில் சென். மேரிஸ் அணி வெற்றிபெற்றது. ஆட்ட நாயகனாக இ.மிதுன் தெரிவுசெய்யப்பட்டார். (ம-108)

## ஆன்ஸ், ஜொலிபோய்ஸ் அணிகள் இலகு வெற்றி

யாழ்ப்பாணம், டிசெ. 13

இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனம் தேசிய ரீதியில் நடத்திவரும் எவ்.ஏ. கிண்ணத் தொடரில் பூநகரி கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் அணிகளுக்கு இடையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் சென். ஆன்ஸ், ஜொலிபோய்ஸ் அணிகள் வெற்றிபெற்றன.

முழங்காவில் விநாயகர் விளையாட்டுக் கழக மைதானத்தில் ஆட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. முதலாவது ஆட்டத்தில் பூநகரி இளம்தளிர் அணியை எதிர்த்து சென். ஆன்ஸ் அணி மோதியது. இதில் சென். ஆன்ஸ் அணி 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் பள்ளிக்குடா ஜொலி போய்ஸ் அணியை எதிர்த்து பள்ளிக்குடா ஐயனார் அணி மோதியது. இதில் ஜொலிபோய்ஸ் அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

## சென். தோமஸ் 'ஏ' கிண்ணம் வென்றது

யாழ்ப்பாணம், டிசெ. 13

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும் கபடித் தொடரில் சென். தோமஸ் 'ஏ' அணி சம்பியனானது. ஐக்கியத்தின் கபடித் திடலில் நேற்றுமுன்தினம் இறுதியாட்டம் நடைபெற்றது. சென். தோமஸ் 'ஏ' அணியை எதிர்த்து சென். தோமஸ் பி அணி மோதியது. இரு அணிகளும் ஒரே கழகத்தைச் சேர்ந்தவை என்பதால் இறுதியாட்டத்துக்குரிய பரபரப்புத் தன்மை சிறிது குறைவாகவே இருந்தது. முடிவில் 58:49 என்ற புள்ளிகளின் அடிப்படையில் சென். தோமஸ் 'ஏ' அணி வெற்றிபெற்று கிண்ணம் வென்றது. மூன்றாமிடத்தை பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் தனதாக்கியது. (ம-108-422)



## வென்றது கில்லறி

யாழ்ப்பாணம், டிசெ. 13

மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் கில்லறி அணி வெற்றிபெற்றது. உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இரவு 8.30 மணிக்கு இந்த ஆட்டம் நடைபெற்றது. மன்னார் கில்லறி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து புத்தூர் விக்னேஸ்வரா அணி மோதியது. இதில் கில்லறி அணி 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

முன்னதாக குருநகர் பாடும் மீன் அணியை எதிர்த்து நாவற்குழி அன்னை அணி மோதிய ஆட்டத்தில் இரு அணிகளும் தலா இரு கோல்களைப் பெற்றன. இதனால் ஆட்டம் சமநிலை கண்டது. (ம-23)

## எவ்.ஏ. கிண்ணத் தொடர்; மன்னார் லீக் முடிவுகள்

யாழ்ப்பாணம், டிசெ. 13

இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனம் தேசிய ரீதியில் நடத்திவரும் எவ்.ஏ. கிண்ணத் தொடரில் மன்னார் லீக்கில் அங்கம் வகிக்கும் அணிகளுக்கு இடையிலான ஆட்டங்கள் தாழ்வுபாடு விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களின் முடிவுகள்.

தோட்டவெளி ஜோசவாஸ் அணிக்கும் சின்னக்கடை கிறின்பீல்ட் அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் தோட்டவெளி ஜோசவாஸ் அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

சின்னக்கடை ஸ்ரார் ஈகிள்ஸ் அணிக்கும் அந்தோனியார்புரம் சென். அன்ரனிஸ் அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் அந்தோனியார்புரம் சென். அன்ரனிஸ் அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

பொன்தீவுக் கண்டல் சென். அன்ரனிஸ் அணிக்கும் முருங்கன் பொது சேவைகள் அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் முருங் கன் பொது சேவைகள் அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற் றது.

விடத்தல்தீவு அணிக்கும் அந்தோனியார்புரம் சென். அன்ரனிஸ் அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் இரண்டு அணியினரும் ஆட்டநேரமுடிவில் தலா ஒரு கோலைப் பெற்றமையால் சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இதில் அந்தோனியார்புரம் சென். அன்ரனிஸ் அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியா இன்னிங்ஸ் வெற்றி தொடரை வெல்வதும் உறுதி



இங்கிலாந்துக்கு எதிரான நான்காவது டெஸ்ட் ஆட்டத்தில் இன்னிங்ஸாலும் 36 ஓட்டங்களாலும் வெற்றிபெற்று தொடரைக் கைப்பற்றுவதை உறுதி செய்தது இந்திய அணி.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து 400 ஓட்டங்களைக் குவித்தது. அதிகபட்சமாக அறிமுக வீரரான ஜென்னிங்ஸ் 112 ஓட்டங்களையும், பட்லர் 76 ஓட்டங்களையும், மொயின் அலி 50 ஓட்டங்களையும் குவித்தனர். பந்துவீச்சில் அஸ்வின் 6 இலக்குகளையும், ஜடேயா 4 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய இந்தியா 631 ஓட்டங்களைக் குவித்தது. சுழல்பந்து வீச்சுக்கு முழுவதும் சதாகமாக ஆடுகளம் மாறிய நிலையிலும் இரட்டைச் சதம் விளாசினார் கோக்லி. அவர் 235 ஓட்டங்களைக் குவித்தார். முரளி விஜய் 136 ஓட்டங்களையும், ஜெயந் யாதவ் 104 ஓட்டங்களையும் குவித்தனர். பந்துவீச்சில் ரசிட் 4 இலக்குகளையும் மொயின் அலி, ரூட் இருவரும் தலா 2 இலக்குகளையும், வோக்ஸ், வோர் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்க்க வேண்டுமாயின் 231ஓட்டங்களைப் பெறவேண்டும் என்ற நெருக்கடியில் களமிறங்கிய இங்கிலாந்து இந்தியாவின் சுழலை குறிப்பாக அஸ்வினை எதிர்கொள்ள பெரிதும் அல்லாடியது. நான்காம் நாள் முடிவிலேயே அந்த அணி 6 இலக்குகளைப் பறிகொடுத்து 182 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. சுழலுக்கு முழுவதும் சாதகமாகிவிட்ட ஆட்டத்தின் இறுதி நாளில் அஸ்வினின் பந்துப்பரிமாற்றங்கள் மிகச் சிறந்த முறையில் எடுபட்டன. அரைச்சதத்துடன் களமிறங்கிய பரிஸ்ரௌவ் மேலதிகமாக ஓர் ஓட்டத்தைப் பெற்ற நிலையிலும், வோக்ஸ் ஓட்டமெதனையும் பெறாத நிலையிலும் ரசிட், அன்டர்சன் இருவரும் இரு ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்க இங்கிலாந்து 195 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் பறிகொடுத்தது. இன்னிங்ஸாலும் 36 ஓட்டங்களாலும் வெற்றிபெற்றது இந்தியா. பந்துவீச்சில் அஸ்வின் 6 இலக்குகளையும், ஜடேயா 2 இலக்குகளையும், புவனேஸ்குமார், ஜெயந் யாதவ் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

தொடரில் ஐந்து ஆட்டங்கள். முதலாவது ஆட்டம் சமநிலை கண்டது. ஏனைய ஆட்டங்களில் இந்தியா வென்றது. இதனால் அடுத்த மூன்று ஆட்டத்தின் முடிவு எவ்வாறு அமைந்தாலும் இந்தியா கிண்ணம் வெல்வது உறுதி. (ம)

## துடுப்பாட்ட வீரர்களுக்கு அதிகப் பொறுப்புக்கள்

தென்னாபிரிக்காவுக்கு எதிரான தொடரில் இலங்கை அணியின் துடுப்பாட்ட வீரர்களுக்கு அதிகளவான பொறுப்புக்கள் உள்ளன என மத்தியூஸ் தெரிவித்தார்.

இரு அணிகளுக்குமிடையிலான 3 ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடர், டிசெம்பர் 26ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ளது. இந்தத் தொடர் தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையிலேயே மத்தியூஸ் இவ்வாறு தெரிவித்தார்.

ஓரளவு சிறப்பான வேகப்பந்து வீச்சுப் பிரிவு, எங்களிடம் காணப்படுகிறது. ஆனால், துடுப்பாட்டப் பிரிவாக, நாங்கள் ஓட்டங்களைப் பெற வேண்டும். அதுவே எங்களது முக்கிய சவாலாக அமையவுள்ளது. தென்னாபிரிக்க வேகப்பந்து வீச்சாளர்கள் ஆஸ்திரேலியாவை வீழ்த்தி சிறந்த திறனில் உள்ளனர். அவர்களை எதிர்கொண்டு சிறப்பாக எதிர்த்தாடவும், அவர் களது கள நிலைமைகளுக்குப் பயின்று கொள்ளவும், எங்களால் முடிந்த அனைத்தையும் நாங்கள் செய்ய வேண்டும் என மத்தியூஸ் தெரிவித்தார். (ம)



## மெஸ்ஸி முதலிடம்

லா லிகா தொடரில் அதிக கோல்களைப் பதிவுசெய்த வரிசையில் முதலிடத்தைப் பிடித்தார் மெஸ்ஸி. ஒசாசுனா அணிக்கு எதிராக நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் பார்சிலோனா 3:0 என்று வெற்றிபெற்றது. மெஸ்ஸி இரு கோல்களைப் பதிவுசெய்தார். இந்தக் கோல்களின் உதவியுடன் மெஸ்ஸி முதலிடத்தைப் பிடித்தார். அவர் தற்போது வரை 11 கோல்களைப் பெற்றுள்ளார். அடுத்த இடத்தில் றொனால்டோ, சுவாரஸ் இருவரும் தலா 10 கோல்களுடன் உள்ளனர். (ம)




## பல்கலைக்கு பதக்கங்கள்

யாழ்ப்பாணம், டிசெ. 13

இலங்கை பல்கலைக் கழகங்களுக்கு இடையிலான பளுதூக்கலில் பெண்கள் பிரிவில் யாழ். பல்கலைக்கு சில பதக்கங்கள் கிடைத்தன.

ருகுணு பல்கலைக் கழக உள்ளக விளையாட்டரங்கில் போட்டிகள் நடைபெற்றன. இதில் யாழ். பல்கலைக் கழக அணியை பிரதிநிதித்துவம் செய்த கவிப்பிரியா 69 கிலோ எடைபிரிவில் 65 கிலோ பளுவைத் தூக்கி வெள்ளிப் பதக்கத்தையும் பிரகாசினி 53 கிலோ எடைபிரிவில் 58 கிலோ பளுவைத் தூக்கி வெண்கலப் பதக்கத்தையும் மொறன்சிகா 63 கிலோ எடை பிரிவில் 55 கிலோ பளுவைத் தூக்கி நான்காமிடத்தையும் கைப் பற்றினர். (ம-422)

## இந்திய டெஸ்ட் அணியினது துணைத் தலைவர் அஸ்வின்



இந்திய டெஸ்ட் அணியின் துணைத் தலைவராக தமிழ் பேசும் வீரர் அஸ்வின் நியமிக்கப்பட்டார்.

இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து ஐந்து ஆட்டங்கள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது. நான்கு ஆட்டங்கள் முடிந்துள்ளன. இந்தியா 3:0 என்று முன்னிலையில் உள்ளது. நான்காவது ஆட்டம் மும்பையில் நேற்று முடிவுக்கு வந்தது. இந்த ஆட்டத்துக்கு முன்பு வலைப் பயிற்சியில் ஈடுபட்டபொழுது துணைத் தலைவரான ராகானேயின் கையில் காயம் ஏற்பட்டது. இதனால் அவர் இங்கிலாந்துக்கு எதிரான தொடரிலிருந்து விலகினார். இதனையடுத்து துணைத் தலைவராக அஸ்வின் நியமிக்கப்பட்டார். (ம)

# ஆர்தரால் அச்சமில்லை மிச்செல் ஸ்ராக் கருத்து

ஆஸ்திரேலியா அணியின் முன்னாள் பயிற்சியாளரான மிக்கி ஆர்தர் தற்போது பாகிஸ்தான் அணியில் இருப்பது ஆஸ்திரேலியாவுக்கு எவ்வித பதற்றத்தையும் ஏற்படுத்தாது என அந்த அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஸ்ராக் தெரிவித்தார்.

பாகிஸ்தான் அணி ஆஸ்திரேலியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளது. இந்த இரு அணிகளுக்கும் இடையில் மூன்று ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரும், ஐந்து ஆட்டங்கள் கொண்ட ஒருநாள் தொடரும் நடைபெறவுள்ளன. நாளை மறுதினம் டெஸ்ட் தொடர் ஆரம்பமாகவுள்ளது. பாகிஸ்தானின் பயிற்சியாளராக மிக்கி ஆர்தர் உள்ளார். இவர் கடந்த 2013 ஆம் ஆண்டு ஆஸ்



திரேலிய அணியின் பயிற்சியாளராக செயற்பட்டார். இதனால் ஆஸ்திரேலியாவின் பலம் பலவீனங்களை அவர் அ[illegible] எனவே பாகிஸ்தானும் [illegible] போராட்டத்தை வெளிப்படுத்தும் என்று எதிர்பார்க்கப்பட நிலையில் ஸ்ராக் இவ்வாறு தெரிவித்தார்.

மிக்கி ஆர்தரை எண்ணி கவலையில்லை. ஏனெனில் அவர் [illegible] மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன என ஸ்ராக் மேலும் தெரிவித்தார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ALLIANCE FRANÇAISE DE JAFFNA
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
பிரெஞ்சு மொழி
உடன் பதிவு செய்யுங்கள், அல்லது இந்த நம்பரை உங்கள் மொபைலில் சேமியுங்கள்!!
021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

அபிவிருத்தி இலட்சாதிபதி
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 40
சீட்டிழுப்பு திகதி 2016.12.12
வெற்றி இலக்கங்கள்
31 40 47
33
6,741,400/-
59
7066542

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1322
சீட்டிழுப்பு திகதி 2016.12.12
வெற்றி இலக்கங்கள்
29 43 48 49 N
அடுத்த வியாழக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 14,321,760/-
1138049
7436770


SUPER BALL
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 588
சீட்டிழுப்பு திகதி 2016.12.12
திங்கட்கிழமை
வெற்றி இலக்கங்கள்
14 17 19 40 X
சுப்பர் ஜக்பொட்
ரூ. 43,266,880/=
பச்சை நிற டிக்கட்டுக்கள் 2016.12.15 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்

## கொல்கத்தாவில் இல்லை வசீம்

அடுத்த வருடத்துக்கான ஐ.பி.எல். தொடரில் கொல்கத்தா அணியின் பந்துவீச்சுப் பயிற்சியாளரான வசீம் அக்ரம் இடம்பெறவில்லை.

ஏப்ரல் 5ஆம் திகதி 10ஆவது ஐ.பி.எல். தொடர் நடைபெறவுள்ள நிலையிலேயே இந்த அறிவிப்பு வெளியானது.

கொல்கத்தா நைட் ரைடர்ஸ் குடும்பத்தில் ஒரு நபராக இருந்த வசீம் அக்ரமை அடுத்த ஆண்டு ஐ.பி.எல். தொடரில் நாங்கள் இழக்கிறோம். எங்கள் அணி 2012 மற்றும் 2014ஆம் கிண்ணம் வெல்ல அவர் முக்கிய காரணமாக இருந்தார். அவர்தனது தனிப்பட்ட வேலை காரணமாக செல்லவுள்ளார். இதனையடுத்தே அவர் விலகியுள்ளார் என கொல்கத்தாவின் முகாமையாளர் தெரிவித்தார்.


இசின்பயேவா

# ரஷ்யா மீதான தடை மீண்டும் தொடர்கிறது

அரச ஆதரவுடனான ஊக்கமருந்துப் பாவனை இடம்பெற்ற குற்றச்சாட்டில், பன்னாட்டு ஒலிம்பிக் செயற்குழுவால் ரஷ்யா மீது விதிக்கப்பட்டிருந்த தடை, மறு அறிவித்தல் வரை நீடிக்கப்பட்டது.

2008 ஆண்டு பீஜிங்கில் நடைபெற்ற ஒலிம்பிக் தொடரிலும் 2012 ஆம் ஆண்டு லண்டனில் நடைபெற்ற ஒலிம்பிக் தொடரிலும் ரஷ்யாவின் சார்பாகக் களமிறங்கிய வீர, வீராங்கனைகளில் ஏராளமானவர்கள் ஊக்கமருந்தைப் பயன்படுத்தினர் என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. ரஷ்யாவைப் பிரதிநிதித்துவம் செய்து களமிறங்கிய வீர, வீராங்கனைகளின் குருதி மாதிரியைப் பரிசோதித்துப் பார்த்ததில் 70 சதவீதமானவர்கள் ஊக்கமருந்தைப் பயன்படுத்தினர் என்று உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது. அரசின் ஆதரவு இல்லாமல் இத்தகைய பெரும் தொகையானவர்கள் ஊக்கமருந்தை உபயோகிக்க வாய்ப்பில்லை என்பதால் ரஷ்ய தடகள சம்மேளனத்துக்கே தடை விதிக்கப்பட்டது. இதனால் ரியோ ஒலிம்பிக் தொடரில் ரஷ்யா களமிறங்குவதில் சிக்கல்கள் இருந்தன. ஏகப்பட்ட வாதங்கள் பரிசீலிப்புக்களுக்குப் பின்னர் 389 வீர, வீராங்கனைகளை களமிறக்க இருந்த ரஷ்யா 271 பேரையே களமிறக்க அனுமதி வழங்கப்பட்டது. ஆனால் தடை முழுமையாக விலக்கப்படவில்லை. தற்போது மறு அறிவித்தல் வரை தடை நீடிக்கப்பட்டது. (ம)

## வேலையாள்கள் தேவை

யாழ் நகரில் இயங்கும் பிரபல தொலைத் தொடர்பு நிலையத்துக்கும், நல்லூரில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட பான்சி நிலையத்துக்கும் பெண் வேலையாள்கள் தேவை. அனுபவம் உள்ளவர்கள், மற்றும் மாநகரசபை எல்லைக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.

077 538 0981

## காணிதேவை

யாழ்ப்பாண நகர்ப்பகுதியில் இருந்து 6Km இற்கு இடைப்பட்ட பகுதியில் (பிரதான வீதிக்கு அருகில்) பலாலிவீதி, காங்கேசன்துறை வீதியிலும் அத்துடன் கைதடி கோப்பாய் வீதி, நாவற்குழி, சாவகச்சேரி வீதிக்கு இடைப்பட்ட பகுதியிலும் 10 பரப்புக் காணி தேவை.

077 229 6188/ 075 310 1116

## வடமாகாண ஆரம்பப் பிரிவு

பெற்றோர்களே! ஆசிரியர்களே! மாணவர்களே!

15 வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவம் உடைய புலமைச் சுடர் முன்னணி ஆசிரியர்கள் குழுவால் தயாரிக்கப்பட்ட கீழ்வரும் சுயநிலை வழிகாட்டல் கையேடுகள் பிரமாண்டமான ஆக்கங்களுடன் எதிர்வரும் 15ஆம் திகதி (நாளை மறுதினம்) வெளிவருகின்றது.

* தரம் – 2 குட்டிச்சுடர் (ஜனவரி மாதம் தரம் – 2 வகுப்பேறவுள்ள மாணவர்களுக்கானது. விலை 60/=
* தரம் – 3 புலமைச்சுடர் (2019ஆம் ஆண்டு பரீட்சை எழுதவுள்ள மாணவர்களுக்கானது. விலை 25/=
* தரம் – 4 புலமைச்சுடர் (2018ஆம் ஆண்டு பரீட்சை எழுதவுள்ள மாணவர்களுக்கானது. விலை 40/=
* தரம் – 5 புலமைச்சுடர் (2017ஆம் ஆண்டு பரீட்சை எழுதவுள்ள மாணவர்களுக்கானது. விலை 40/=
* டிசம்பர் மாத ஒளிஅரசி (திருத்தற் சேவையுடன் கூடிய பரீட்சையை தாங்கிய ஒளிஅரசி) விலை 75/=

உங்கள் பிரதிகளை சகல பத்திரிகை முகவர்களிடமும் பெற்றுக்கொள்ளலாம்.
மேலதிக தொடர்புகளுக்கு - 0776569617
தலைமை அலுவலகம் - 07

# புதிய பந்தில் எனக்கு நிகர் நான்தான் இப்படிச் சொல்கிறார் மொகமட் அசிப்

புதிய பந்தில் இலக்குகளைக் கைப்பற்றும் திறன் ஏனைய வீரர்களைக் காட்டிலும் என்னிடம் ஏராளமாக உள்ளது இவ்வாறு தெரிவித்தார் மொகமட் அசிப்.

இங்கிலாந்தின் லோட்ஸ் மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டமொன்றின்போது ஆட்டநிர்ணயச் சூதாட்டத்தில் ஈடுபட்ட குற்றத்துக்காக பாகிஸ்தான் அணி வீரர்களான ஆமிர், அசிப் மற்றும் சல்மான் பட் மீது ஐந்தாண்டுகள் தடை விதிக்கப்பட்டது. தற்போது அந்த தடை நீக்கப்பட்டுவிட்டது. ஆமிர் மட்டும் பன்னாட்டு ஆட்டங்களுக்குத் திரும்பியுள்ளார். அசிப் உள்நாட்டுத் தொடர்களில் விளையாடி வருகிறார்.



நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டமொன்றில் 29 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 4 இலக்குகளை வீழ்த்தினார். இதனையடுத்து கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

புதிய பந்தில் பந்து வீச்சாளர்கள் திணறுகிறார்கள் என்பதை விட, அவர்கள் புதுப் பந்தை வீணடிக்கிறார்கள் என்றே சொல்லலாம். குறிப்பாக டெஸ்ட் கிரிக்கெட்டில் யாரை எதிர்த்து விளையாடுகிறோம், எந்த நாட்டில் விளையாடுகிறோம் என்பது பெரிய விடயமே அல்ல. புதிய பந்தில் இலக்குகளை வீழ்த்த வேண்டும். என்னை விட புதிய பந்தில் சிறப்பாகப் பந்து வீசக்கூடியவர்கள் இருக்கிறார்களா? என்பது தெரியவில்லை என அசிப் மேலும் தெரிவித்தார். (ம)

## வேலைவாய்ப்பு

யாழ்.நகரில் உள்ள அச்சகம் ஒன்றுக்கு சிட்டை எழுதுநர், (தமிழ், ஆங்கிலம்) Typing தெரிந்த பெண் வேலையாள் தேவை.

077 651 9913

## பரிசுத்த ஆவிக்கு செபம்

எனக்கு ஒளியாயிருந்து உன்னத நிலையை நானடைய வழிகாட்டும் பரிசுத்த ஆவியே உமது திருநாமம் அர்ச்சிக்கப்படுவதாக. உமது அருட் கொடைகளின் மூலம் என்னுள்ளத்தைப் பக்குவப்படுத்தி எனக்குத் தீங்கு செய்தோரையும் நான் மன்னிக்க அருள் புரிபவரே. என் வாழ்வில் எச்சந்தர்ப்பத்திலும் எனக்கு உற்ற துணையான உமக்கு இச்சிறிய செபத்தின் மூலம் நீர் செய்யும் சகலத்துக்கும் நன்றி கூறித்துதிக்கின்றேன். என் தேவைகள் எவ்வளவு முக்கியமாயிருப்பினும் உம்மிலிருந்து விலகாமல் என்றும் உம்மில் நிலைத்திருப்பேனென உறுதி கூறுகின்றேன். நானும் என்னால் நேசிக்கப்படும் அனைவரும் என்றென்றும் உமது முடிவிலா மகிமையில் பங்கு பெற வேண்டுகின்றேன்.- ஆமென்

அடியார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 13.12.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.